உ

சிவமயம்.

மருதவனபுராணம்.

(முதற்பாகம்)

தஞ்சை அரண்மனை

ஸ்ரீசரபோஜிமகாராஜா உத்தரவின்படி

சிவக்கொழுந்து தேசிகர் அவர்கள்

இயற்றியது

ஷெ. அரண்மனை சிவாஜீ மஹாராஜா குமாரர்

ஸ்ரீ. சரபோஜிமஹாராஜா

உத்தரவின்படிக்கும்

திருப்பணிப்பேட்டை கோவிந்தசாமிப்பிள்ளை,

அம்மாபேட்டை கந்தசாமிச்செட்டியார்,

திருமாந்துறை சபாபதிப்பிள்ளை,

இவர்கள் கேட்டுக்கொண்டபடிக்கும்

திருவிடைமருதூர்

குமாரபூஜை மகோற்சவம்

நடத்திவருகிற

ஸ்ரீ கிருஷ்ணசாமிகாடேராவ்சாகேப்

குமாரராகிய

சாமிராவ்காடே அவர்களால்

கும்பகோணம்

"லார்ட்ரிப்பன் அச்சுயந்திரசாலையிற்"

பதிப்பிக்கப்பட்டது.

1893.

உ

சிறப்புப்பாயிரம்.

மாருந்தினையுடா புயினமுறைதைச் சேணையிர வலகைக் கந்திரு
போற்றி செய்ந்த

தீருந்தவு மெடைமருதின் வடசொலாறு மான்மியந்தை.
செந்தமிழ்ச் சொல்லாக்க

கந்துரவில் கரிய லைவ செவிகருத மொனப மருந்தக
சிக்க பெயலர

மருதினையக திருவிரிந்து கோழுதுழைய சிவக்கொழுந்
வள்ளனாரே.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மருதவனப்புராணம்.

பாயிரம்.

கடவுள் வாழ்த்து.

ஆண்டவிநாயகர்.

உலகமுணர்ந் திடுகருணை யுதனெறுமெனுஞ் சகமதினி லெவரை யெய்தி
யலகில்புக ழுறுகவிகை நிழலதின்மெய் யன்பர்குல மதனைக் காக்கச்
குலவுமுப நிடதவரி யணைமீது பரசெழிற்செங் கோல்கைக் கொண்டாங்
கிலகுமிடை மருதாண்ட விநாயகனை யெப்பொழுது மிறைஞ்சி வாழ்வா
[ம். (௧)

வாழ்த்து.

வேறு.

பூவுல கிதனு ளோங்கும் புகழுறு சுருதி வேள்வி
மேவுமா கமநன் னூல்கள் விளங்குக வளங்க ளீடு
பாவுக மதிக்கோர் மூன்று பயின்மழை பொழிக நாளுங்
காவிரி வருக வாரி காவலன் செங்கோல் வாழ்க. (௨)

நூற்பயன்.

வேறு.

போற்றலுறு மருதவனப் புராணமென்னப்
புகலிதனைப் படிப்பவர்கள் கேட்போரியாரு
மாற்றரிய வினையினொடு பகையைவென்று
மன்னுநெடுஞ் செல்வமொடு மகவுமெய்தித்
தேற்றலுறு புவியினிடை நீடுவாழ்ந்து
திகழுறுவின் னுலகில்வள ரின்பந்துய்த்துச்
சாற்றரிய பரஞான மருவியீசன்
சரணபங் கயநிழல்வீற் றிருப்பர்மன்றே. (௩)

மகாலிங்கேசர்.

வேறு.

பூமேவு திசைமுகன்மா லெனுமவரும் போற்றரிதாய்ப் பொருவி லாதாய்
நாமேவு செழுமறையி னுட்பொருளா யகண்டிதமாய் நளின மென்னு
மாமேவு மலர்வாவிக் கயல்வாவிக் கனியுதிர்க்கும் வளத்தினீடு [வாம்.
தேமேவு பொழில்புடைசூ ழிடைமருதின் வளரொளியைச் சிந்தைசெய்

71464

ஏகநாயகர்.

தேறுபுக ழிடைமருதி லுறையேக நாயகன்றன் செய்ய தாளு
மூறுமது மலர்க்கூந்தற் பசியமயி லுறையிடமு மோங்கு கங்கை
யாறிலகு சடைமுடியு மைமழுகமு நாறதோளு மணிமுக் கண்ணுங்
கூறுதிற லிருமானு மொருமழுவு மனவரதங் குறித்து வாழ்வாம் (௫)

மருதவாணர்.

ஒருதவள மால்விடைமேற் புகலவுறு மொருசிறுட்டி யுதயந்தன்னிற் [யக்
பொருதனிவான் சிலைநுதல்வேற் றடங்கணுமை யணங்கினொடு புவனமுய்
கருதிமையோர் கணமபுடைசூழ் கயிலையினின் றிணைந்தனையகயிலையென்னு
மருதநிழ லிடத்துறையு மருதவா ணககடவுண் மலர்த்தாள் போற்றி. (௬)

[illegible]நலமாமுலையம்மை.

பெ[illegible] [illegible]கண் முளைத்தருள்வண டளிர்குழைத்துப்
பொ[illegible]ங்கிப், பன்[illegible] மதிச்சடிலப் பவளமலை யிடத்தினிதுபடர்
ந்[illegible]மை, [illegible] முகிழ்ந்துவகை பூத்துமணந் திடைமருதி
[illegible]யோர் [illegible]ற, [illegible]கழ்ப் பெருநலமா முலையெனச்சொல் பசுங்
[illegible]டியை [illegible]ங்குவாம். (௭)

வயிரவர்.

வேறு.

[illegible]லையோர் [illegible]கத் திறுதியிற் கதிர்கண் மேவுடுக் கணங்களீ ழுறத்திம்
[illegible]லையொத் திடுசங் கீன்றமுத் தினங்கள் பரந்திடப் புவியிடத் தெழுந்த
வேலையின் மிதந்த புகலியந்தோணி விளங்கிடு வடுகனுங் கடவுள்
காலைமென் போதை யுச்சியிறகொள்வாங் கடுந்துயர் மாலைதீர்ந் திடவே.

படித்துறை விநாயகர்.

வேறு.

வடித்துறைவே லனகருங்கட்பாவையர்க ளொடுமெருதம்வயங்குவார்வீற்
பிடித்துறைநன் களிக்குமுகி லுலவுமலர்ப் பொழிலினிடைப் பெருகு சே

ந்தேன், குடித்துறைவண் டினங்களுமோ திடைமருதின் மருவீசர் கோ
யின்மேவு, படித்துறைக்குஞ் சரத்தின்மலர்ப் பதத்துணையை மனத்துணை
யாப் பதித்து வாழ்வாம். (௯)

குமாரக்கடவுள்.

சத்திதனை யனைவள்ளி காந்தனைக்கந் தனையசுரர் தம்மை வென்ற
சத்திதனை யுறுமலர்க்கைத் தலத்தனையன் போர்கடமி தயமாம் பங்க[ேன
சத்திதனை யிடைமருதூர்க் குமரனைநெஞ் சேபணியென் றன்பான்மன்
சத்திதனை யவனுகந்தின் னருளெனக்குத் தருமஃதுன் சகாயமாமால். (௰)

திருநந்திதேவர்.

முழுதுலகு நிறைபிரமம் பரமனே யெனமறைகண் மொழியுந் தன்மை
வழுதியின்பான்முதுகிலடி படுபொழுதிற்கண்டிருந்து மயங்குவோர்க்குக்
குழுவுறுமால்விரிஞ்சன்முதல்வானவர்மேற் கைப்பிரம்பு கொண்டுதாக்கிச்
செழுமணித் தண்கயிலையின்பாற் றெளிவிக்கு மவன்மலர்த்தாள் சிரத்திற்
கொள்வாம். (௰௧)

நாமகள்.

[ண்டு
எழுத்தசைசொற் பொருளுதவு மணிகளிரு வகைபெறுபா வினங்கள் கொ
மழுத்தடக்கைக் கடவுளிடை மருதவன வடசொலுறு மான்மி யத்தை
வழுத்திடத்தென் றமிழதினு மினிதுபுரிந் திடுகவென மகிழ்ந்து வண்டின்
குழுத்த மைப்போற் றிடுதவள பங்கயத்தி லுறைந்திடுபூங் கோதைதானே.

தமிழாசிரியர்.

புவியினகத் திருளொதுக்கி வானெய்தி யறியவுறு பொருள்கள் காட்டிச்
சவிமருவிப் பொலிபரிதித் தமிழினிது தோன்றுகுண சயிலந் தன்னைக்
குவிதிரைத்தண் பெருங்கடலை நெடுங்கிரியை யடக்குசிறு குடங்கையானை
நவியமெடுத் திடுபரனுக் குரியவனைப் பணிகுவதே நமக்கு வேலை. (௰௩)

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

சிவஞானக் கடலருந்திக் கருமைகொடு திசைகளெங்குந் தெரிய மின்னித்
தவரினஞ்சூழ்ந் திடவுல்க முணரவிடித் தமண்கோடை தணப்ப வோங்கு
புவனமதிற் சைவநெடும் பயிர்தழைப்பப் பரங்கருணைப் பொருப்பின்மீது
கவிமழைகள் சொரிபுறவக் கவுணியக்கொண் டலைநாளுங் கருத்துள் வை
ப்பாம். (௰௪)

திருநாவுக்கரசு நாயனார்.

வடமருவு தென்னிழலிற் கருணைவடி வாய்விளங்கு வரதன் போல [டு
விடமயிர்த மெனப்பருகிச் சூலந்தோண் மிசையேற்று விடைமேற்கொண்

தடமருவு தரணியிடைத் திகழ்ந்திலவா சேர்பத சரோ ருகத்தைத்
திடமுறுமன் பொடுதினமுஞ் சிந்திப்போர் துயர்களெல்லாஞ் சிந்திப்போ
[மால். (௰௫)

சுந்தரமூர்த்தி நாயனார்.

முதலைவள ராரூறு தந்திடவை யாறெய்தி முடிவில் லாத [ண்
முதலைநெடுந் தமிழொடுசெந் தமிழ்க்கவிதை யாற்றுதித்து மொழியாவிக்க
முதலையொரு மகவுதரச் செய்துகந்த முன்னோனை முகிழ்மென் கொங்கை
முதலையிதழ்ப் பரவைமணாளனைவணங்க நமதெண்ண முற்றுந் தானே. ()

மாணிக்கவாசகசுவாமிகள்.

வந்திதனிச் சிவலோகம் பெறவழுதி பவநீங்க மனத்தி னீடார்
வந்திதனிக் கொம்மைமுலை யுமையவள்பால் வைத்தபரன் மகிழ்வினாடல்
வந்திதம்பெற் றிடப்பல்லோர் வைகையின்பாற்கண்டிடச்செய் மறையோ
வந்திதக வுறமனமே நந்தமைமெய் யன்பரிடைவைக்கு மன்றே. [ன்றனை

சண்டேசநாயனார்.

நேசமுறு தாதைபுரி தவறுமவன் றுணைப்பதமு நீக்கி நீடு
பாசமகற் றிடுபரம பதத்தினொடு சண்டேச பதமும் பெற்றோன்
வாசமலர்ப் பதந்தனையாம் வணங்கிடுது மனையதனி வணக்கமாகும்
பேசரிய பேரின்ப மருவுதற்கோர் பதமென்னப் பெரிதுமன்னோ. (௰௮)

பட்டினத்துப்பிள்ளையார்.

விளம்புகாரொனுமிடற்று மருதிறைவன் றிருவருளின் மெய்ம்மைநோக்கிக்
களம்புகார் வின்மதன்றன் படைமகளிர் புவியாசை கருதுங்காத
துளம்புகா ராகிவெறுத் தணைந்தொருமும் மணிக்கோவை யுகந்து நல்கும்
வளம்புகார்ப் பட்டினத்துப் பிள்ளையெனும் பெரியவர்தாண் மனத்துள்
[வைப்பாம். (௰௯)

கடவுள் வாழ்த்து.

முற்றிற்று.

அவையடக்கம்

சொன்ன மேருமுன் சிறியகற் குன்றமுந் துலங்கு
மன்னு மான்மதக் களிற்றின்முன் முயல்களும் வயங்கும்
பன்னு தண்கதிர்க் கடவுண்முன் னுடுக்களும் பயிலு
மென்னின் மேதையர் கவிதைமுன் னிலங்கு மென் கவியும். (உ௰)

பகரு நாமொழின் மலரொடு பயில்கட வுளர்தஞ்
சிகர முற்றிடு திறமெனச் சிறியனேன் பனுவன்
மகர வண்குழைப் பிறைச்சடை மருதநா யகன்றன்
புகழு டன்கலந் தறிஞர்தஞ் செவிக்களம் புகுமால். (உ௧)

விமல ஞாயிறு சிறியனேன் விளம்பிய கவிதை
கமல நாண்முகை யறிந்தநீ டருளினோர் கருத்து
நிமிர்தன் மேவழுக் காற்றினோர் நெஞ்சக மலர்ந்த
குமுத மூடர்த முறுமனங் குறித்திடு கருங்கல். (உ௨)

நற்ற வத்தினோர் தொழுமிடை மருதிறை நாம
முற்ற விக்கதை யானெடுத் துரைத்திடு கின்றேன்
முற்று சீருறு தென்றமி ழிலக்கண முழுதுங்
கற்று ளார்தமைப் புவினோர் புகழ்ந்திடக் கருதி. (உ௩)

அவையடக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் உ௩.

உ

சிவமயம்

திருநாட்டுச்சிறப்பு.

விருத்தம்.

பொன்னி லத்துறை சுரர்களும் விரும்புறும் பொலிவுந்
துன்னி யீசர்வாழ் பதிகளுந் துதைந்திசை தரணி
தன்னி லோங்குநா டெவற்றிற்குந் தலைமைய தாகிச்
சென்னி நாடெனத் திகழுறு நாட்டணி தெரிப்பாம். (௧)

திங்க ளொண்சுதைக் கதிரின துருவெனச் சென்று
மங்கு லின்வழித் தண்கடற் றெண்டிரை வாரி
பங்க மின்றுயர் பரிமுகத் தெரியினிற் பருகிப்
பொங்கு கள்ளிருள் வடிவுபெற் றெழுந்தன புயல்கள். (௨)

எழுந்த தண்புய லிடைமரு திறையவ னிபத்தின்
முழங்கி யாங்கத னோடையின் மின்னியோர் மூன்று
செழுங்க ணானுட னுமைதிகழ் சிறப்பின்விற் கோட்டிப்
பொழிந்த சையமேற் சுரரமு தகுத்தன போல. (௩)

மாலெனப் புகல் பெயருறு மாயனு முகிலும்
வேலை வாய்க்கடைந் தெடுத்தமு துதவினும் விளங்கு
மேலை வானவர் தமக்கரி யுதவினன் விசும்பு
ஞால மீதுறு சராசர வுயிர்க்கெலா நல்கும். (௪)

ஓங்கி டும்பல சிகரங்கொள் சிலம்பின்மே லுதகந்
தாங்கு தண்புயல் சொரிதர விராவணன் றன்மேற்
றேங்கொள் பூந்தொடைத் தசரதப் பெயரினோன் சிறுவன்
வாங்கு விற்கொடு சொரிந்திடு சரங்களை மானும். (௫)

துங்க வெற்பினிற் கருமுகில் சிலையொடுந் துன்னிப்
பொங்கு தீம்புனல் சொரிதரல் புரையுநீ டெழிலா
ரொங்கள் காளத்தி யிடத்திலோ ரன்பன்வா யிடுநீர்
சங்க ரன்றிரு முடிமிசை யுமிழ்ந்திடுந் தன்மை. (௬)

கூறு வானிடை மிடைதரு பயோதரங் குளிர்பூ
நாறு வெற்பினீள் சுனைசொரி நறும்புனற் றுறை

தேறு வான்றனி மகவன்னை யன்னதன் செவ்வா
யூறு கொங்கையிற் பீர்விடுத் தூட்டுவ தொக்கும். (எ)

கருவ ளைச்சிக ரத்தினின் றிடையிடை கதிர்வெள்
ளருவி யின்கண மார்ப்பரித் திழிகுவ தாங்காங்
கிருளும் வெண்ணில வுங்கறுத் தணிவகுத் திலங்கப்
பொருது வெல்வதற் கெதிரெதிர் நிற்பது பொருவும். (அ)

வெற்பி டத்துறு தரளங்க ளுடன்றிணை வேலை
யிற்பி றங்குநித் திலங்களு மிடையிடை யிசைத்துப்
பொற்பு விண்ணெனும் வணிகனேர் நோக்குதல் புரையும்
விற்பரப்பு நித்தி லங்களோ டாலிகண் மிடைதல். (கூ)

வேறு.

அலைகொடு திரிவான் சீறி யம்புக டரக்கின் மாவுங்
கொலைபுரி யிபமுந் தேருங் குலமணி வில்லு மம்பு
மலையெனும் பெயருங் கொண்டு வளர்சைய வேந்து வாளா
குலவுற நின்றி டுங்கொல் கோபமேற் கொண்ட தம்மா. (ய)

வேறு.

குரவ னேதவத் தொருவனை வலுவினிற் கொண்டு
விரவு பாசநீத் தரனிடை விடுத்திடு திறத்தி
னுரவு தண்கடற் புனன்முகந் துவர்கெடுத் துலகம்
பரவ நீள்புயல் விடுத்தது பொன்னியின் பாங்கர். (யக)

வேறு.

வாகுறு தரள மூரற் கயமுலை வண்கைக் காந்தள்
மேகமென் கூந்தற சைய வெற்பணங் ககத்தி யன்றன்
மாகமண் டலமென் றோதும் வயிற்றினின் றுதித்த கன்னி
யாகிய பொன்னி நீத்த மருவியைத் தழீஇய தன்றே. (யஉ)

வேறு.

அருவி பொற்கதிர்ப் போரிழுத் தாங்கிழி
யருவி வச்சிர மீனென வார்த்தெழுங்
குருவி யின்கணங் கூட்டற மந்திகள்
குருவி யன்மணி கொண்டெறிந் தோட்டுமால். (யங)

சிந்து வாரஞ் செறிவெதிர் நித்திலஞ்
சிந்து வாரத் தசோகஞ் சிதைத்துநி
வந்து வாரத் திறைஞ்சிட மண்ணுளோர்
வந்து வாரங் கடந்தது வாரியே. (யச)

சிவமயம்

திருநாட்டுச்சிறப்பு.

விருத்தம்.

பொன்னி லத்துறை சுரர்களும் விருப்புறும் பொலிவுந்
துன்னி யீசர்வாழ் பதிகளுந் துதைந்திசை தரணி
தன்னி லோங்குநா டெவற்றிற்குந் தலைமைய தாகிச்
சென்னி நாடெனத் திகழுறு நாட்டணி தெரிப்பாம். (௧)

திங்க ளொண்சுதைக் கதிரின துருவெனச் சென்று
மங்கு லின்வழித் தண்கடற் றெண்டிரை வாரி
பங்க மின்றுயர் பரிமுகத் தெரியினிற் பருகிப்
பொங்கு கள்ளிருள் வடிவுபெற் றெழுந்தன புயல்கள். (௨)

எழுந்த தண்புய லிடைமரு திறையவ னிபத்தின்
முழங்கி யாங்கத னுடையின் மின்னியோர் மூன்று
செழுங்க ணுனுட னுமைதிகழ் சிறப்பின்விற் கோட்டிப்
பொழிந்த சையமேற் சுரரமு துகுத்தன போல. (௩)

மாலெனப் புகல் பெயருறு மாயனு முகிலும்
வேலை வாய்க்கடைந் தெடுத்தமு துதவினும் விளங்கு
மேலை வானவர் தமக்கரி யுதவினன் விசும்பு
ஞால மீதுறு சராசர வுயிர்க்கெலா நல்கும். (௪)

ஓங்கி டும்பல சிகரங்கொள் சிலம்பின்மே லுதகந்
தாங்கு தண்புயல் சொரிதர விராவணன் றன்மேற்
றேங்கொள் பூந்தொடைத் தசரதப் பெயரினோன் சிறுவன்
வாங்கு விற்கொடு சொரிந்திடு சரங்களை மானும். (௫)

துங்க வெற்பினிற் கருமுகில் சிலையொடுந் துன்னிப்
பொங்கு தீம்புனல் சொரிதரல் புரையுநீ டெழிலா
ரொங்கள் காளத்தி யிடத்திலோ ரன்பன்வா யிடுநீர்
சங்க ரன்றிரு முடிமிசை யுமிழ்ந்திடுந் தன்மை. (௬)

கூறு வானிடை மிடைதரு பயோதரங் குளிர்பூ
நாறு வெற்பினிள் சுனைசொரி நறும்புனற் றுறை

தேறு வான்றனி மகவன்னை யன்னதன் செவ்வா
யூறு கொங்கையிற் பீர்விடுத் தூட்டுவ தொக்கும். (ஏ)

கருவ ளைச்சிக ரத்தினின் றிடையிடை கதிர்வெள்
ளருவி யின்கண மார்ப்பரித் திழிகுவ தாங்காங்
கிருளும் வெண்ணில வுங்கறுத் தணிவருத் திலங்கப்
பொருது வெல்வதற் கெதிரெதிர் நிற்பது பொருவும். (அ)

வெற்பி டத்துறு தரளங்க ளுடன்றிரை வேலை
யிற்பி றங்குநித் திலங்களு மிடையிடை யிசைத்துப்
பொற்பு விண்ணெனும் வணிகனோர் நோக்குதல் புரையும்
விற்பரப்பு நித்தி லங்களோ டாலிகண் மிடைதல். (கூ)

வேறு.

அலைகொடு திரிவான் சிறி யம்புக டுரக்கின் மாவுங்
கொலைபுரி யிபமுந் தேருங் குலமணி வில்லு மம்பு
மலையெனும் பெயருங் கொண்டு வளர்சைய வேந்து வாளா
குலவுற நின்றி டுங்கொல் கோபமேற் கொண்ட நம்மா. (ய)

வேறு.

குரவ னேதவத் தொருவனை வலுவினிற் கொண்டு
விரவு பாசநீத் தரனிடை விடுத்திடு திறத்தி
னுரவு தண்கடற் புனன்முகந் தவர்கெடுத் துலகம்
பரவ நீள்புயல் விடுத்தது பொன்னியின் பாங்கர். (யக)

வேறு.

வாகுறு தரள மூரற் கயமுலை வண்கைக் காந்தள்
மேகமென் கூந்தற சைய வெற்பணங் ககத்தி யன்றன்
மாகமண் டலமென் றேதும் வயிற்றினின் றுதித்த கன்னி
யாகிய பொன்னி நீத்த மருவியைத் தழீஇய தன்றே. (யஉ)

வேறு.

அருவி பொற்கதிர்ப் போரிழுத் தாங்கிழி
யருவி வச்சிர மீனென வார்த்தெழுங்
குருவி யின்கணங் கூட்டற மந்திகள்
குருவி யன்மணி கொண்டெறிந் தோட்டுமால். (யங)

சிந்து வாரஞ் செறிவெதிர் நித்திலஞ்
சிந்து வாரத் தசோகஞ் சிதைத்துநி
வந்து வாரத் திறைஞ்சிட மண்ணுளோர்
வந்து வாரங் கடந்தது வாரியே. (யச)

மற்க டத்தடங் கோடு மருவுமா
மற்க டத்தடங் கோடு மருவொடு
சொற்க டத்தலர் துன்னிடு தண்புனல்
சொற்க டற்செல வென்னத் துலங்குமால். (௰௫)

மாத னந்தன் வயினுற வாய்ந்துதண்
போத னந்தன் மிசைக்கொடு போதலிற்
போத னந்தம் புரைதரு மென்பராற்
போத னந்தம் வளைபயில் பொன்னியே. (௰௬)

காம ணூர்தின் கரைபொரு காவிரி
காம ணுமலர் கன்னல் பரித்தலின்
மாம ணுக மலைவன மேவியே
மாம ணுக மணாளனு மேய்க்குமால். (௰௭)

வேறு.

புன்ன கம்மறு கம்பு பொருந்தலை
மன்னு வுமிழும் மதிகு டிறையைப்
புன்ன கம்மறு கம்பு பொருந்தலை
மன்னு தரவோ டேகிடு மாநீர். (௰அ)

வேறு.

செல்புனல் குறிஞ்சி யிற்கொள் செறிகதிர் நேமி வாளி
வில்லுட னணைந்து முல்லை விளங்கிடங் கௌவையுங் கொண்டு
மெல்லிடை மகளி ராய ரிரங்கநோய் விளைத்திட் டோடி
மல்லலம் புவனத் தோர்க்கு மறவர்பாற் பயிற்சி காட்டும். (௰௯)

குலவுறு புறவினின்று கொடியிடை நுடங்க வங்க
ணிலகுவெண் டயிர்பால் வெண்ணெ யினிதுறு தாழி பற்றி
வலுவொடு தலைமேற் கொண்டு வனமுலை குலுங்கச் சென்ற
தலகில்சீர் மருத நோக்கி யாயர்த மடந்தை யென்ன. (௨௰)

இன்னலம் படரும் பொன்னி யிலங்கிடு பொழிற்பூங் கோதைக்
கன்னலென் னெழிற்றேட் பைம்பூ கதமிடற் றரம்பை யென்னு
மன்னுமென் கவான்வண் டேமாந் தளிரியன் மருதப் பாவை
தன்னெழிற் றோழி யாகத் தழீஇவிளை யாடி நின்று. (௨௧)

தடமுறு மருதங் கொண்ட தமனக முதல சூடித்
திடமுறு வனச மென்னுந் திருமுக மலர்வுற் றன்ன
மடநடை கொடுசென் றங்கே தகைமண மருவ லுற்ற
கடலிறை யவன்முன் னெய்தல் கண்டெதிர் கலந்த தன்றே. (௨௨)

ஏலம்வன் மிளகு மஞ்சள் குங்கும மிலவங் கந்தன்
பாலுறு செம்பொ னல்கிப் பணிவரை விடக்கொண் டோங்கு
நீலுறு கடற்பா லெய்து நெடும்புனல் வயங்கு மோர்பெண்
கோலுறு தாயினின்று கொழுந னிற் சேக லொத்தே. (௨௩)

சொற்றிடு குறிஞ்சி தன்னிற் றோன்றுதன் பொருளே காட்டி
மற்றுள திணைக டமில வரைபடு பொருள்க ளாதி
பற்றிய முறையிற் காட்டல் பகர்தரு பொன்னி நீரா
லுற்றிடொன் றாதி யோரைந் தறிவுறு முயிர்கள போலும. (௨௪)

நகமதிற் கதழ்விற் றேய்க்கு நறியகுங் குபத்தி றேறு
மிகநிலத் தியல்பி றேலுங் கலங்கிப்பின் னியங்கு நீத்தந்
தகவுறத் தெளிந்த தாங்கோர் சார்பினிற கலக்குற் றாலுந்
திகழ்சிறு பொழுதிற் றாமே தெளிவரோ சிறந்த நீரார். (௨௫)

வேறு.

சைய முற்றமுத் தமிழ்முனி சதமக னவண்றன்
கையி னூற்றிடு கமண்டல மமிர்நவண் கலசந்
துய்ய காவிரிப் புனல்பவந் தொலைத்திடு மமிர்தம்
வைய மேலது பெற்றவர் வானவர் கணங்கள். (௨௬)

மால்ப டிந்திடு சையமே வானுல கதனிற்
சால்பு கொண்டெழு பொன்னிநீள் கற்பகத் தாரு
பால்பி ரிந்திடு நதிக்குல மாங்கதன் பு[illegible]ணைகள்
[illegible]ல்களை யாவையுஞ் சிறியகொம பினங்களைக் கடுக்கும். (௨௭)

கூறு கால்வழிப் படர்புனல் வயலிடைக் கூட்டிக்
கீறு சால்வழி மணிக்குலங் கிளர்தர வுழுது
சேறு செய்துவண் டழைவிராய்ச் சொன்முளை சிதறி
நாறு செய்குவர் களமர்க ணலம்புனை மருதம். (௨௮)

பெருகு காவிரிப் புனலன்றிப் பிறங்குநாற் றினைத்தன்
னருகு வாழ்பொழிற் பலவொடு சூதநீ டரம்பை
தருக னித்திர ளிரதமுந் தகைமலர்த் தேனுந்
திருகு றாலையின் சாறதூஉம் வளர்த்திடுஞ் சென்று. (௨௯)

பூட்டு நாஞ்சில்வெங் கொழுப்படை யூர்தரப் புலம்பு
கோட்டி னோசையுங் கருமபொடித் துழவர்கள் குலவே
றோட்டு மோசையு முழத்தியர் நடும்பொழு துரைக்கும்
பாட்டி னோசையும் பரந்திடும் பழனங்க ளெங்கும். (௩௰)

வள்ள வாய்ச்செழுஞ் சலசமுங் குமுத மென் மலருங்
கள்ளு லாமலர்க் குவளையு மதிமுகங் கனிவாய்
துள்ளு சேல்விழிப் பகையெனத் தூரப்பவர் போலப்
பள்ள நீர்வயற் கடைசியர் களைந்தனர் பரவி. (௫௧)

வேறு.

மள்ளர்தம் விழியின் சாயல் கயலென மறிக்கக் கையாற்
றெள்ளுநீர் வயலு ணின்று செறிகளை களையு நல்லா
ரள்ளல வளையும் பற்றிக் குழிசியி னடைப்பர் காணிற்
கள்வனை விடுவர் கொல்லோ வுலகினிற் களைக டீர்ப்போர். (௫௨)

அலவனே ராக நாள மார்தரு கமலப் போதிற்
கலனையி னுழுது கொம்மைக் கமடத்திற் பரம்பின் செய்கை
யிலகுறச் செய்வர் மள்ள ரின்சிறு புதல்வர் செய்யுள்
வலசிறு மகளிர் பைம்பு னடுவர்கண் மகிழ்வுற் றோர்பால். (௫௩)

நெடியநீர் கொடுவர் தூட்டு நெடுவரை யிருவின் றேனும்
படிமலர்ப் புறவத் தாவின் பாலுமல் லாது பானற்
கடிகமழ் வனசத் தேனுங் கயலினம் பாய மேதி
மடிசொரி பாலு முண்டு வளர்ந்தன சாலி யெல்லாம். (௫௪)

சூக்குமை யாதி மூன்று தொழில்களுட் பட்டுக் கண்ட
போக்கெழு சொல்லிற் சாலி யிளைகருக் கொண்டு பின்னர்த்
தேக்குரு [illegible] தெரியவுள் விம்ம லுற்று
மாக்கவி னுறமேற் றோன்றிற் றன்னதூஉம் வளர்சொல் லன்றே. (௫௫)

உதயமால் விலங்க றன்னி லுதித்தெழுங் கதிரோ யென்ன
மதியுல குவகை நீட வண்பயி ரொழுந்து செந்நெல்
சதிருற வுச்சி நின்று முதிர்ந்துபிற் சாய்ந்து தானுங்
கதிருருக் கொண்ட தன்மை காட்டிய தெவர்க்கு மன்றே. (௫௬)

விளைவுகண் டரிவாள் கொண்டு மேவின ரரியும் போது
களையினிற் பிழைத்த செங்கட் கமலமொண் குமுத மென்னுங்
கிளையுறு மலருங் கூட வரிபட்டுக் கிடந்த வம்ம
தளர்வுறி லடுத்தோர் தாமுந் தளர்வுறு மறிஞர் போல. (௫௭)

அரிந்தன விசித்துத் தூக்கி யடுத்திடு களத்திற் சேர்த்துத்
திருந்தவான் றீண்டப் பல்போர் செய்துபின் பிரித்து விட்டுப்
பரந்திடு பகட்டி னூர்ந்து படிந்தவை யுதறித் தூற்றிப்
பொருந்துபொற் குன்றி னீட்டம் போன்மெனப் பொலிக ளாக்கி. (௫௮)

முன்னிசைந் தனவூர்த் தெய்வ மந்தணர் முதலோர்க் கீந்து
பின்னளந் தரசர்க் குள்ள தளந்ததன் பிறகு நெல்லும்
புன்னில விளைவுந் தங்கள் மனைகளிற் பொருந்த வுய்த்தாங்
கன்னமும் பிறவு மன்பா லருந்துவோர்க் கருத்தி யுண்பார். (௩௯)

மின்னிய வெழிலி யூர்தி வேந்தனென் றிசைத்த லாலும்
பன்னிசை யரம்பை மாதர் பயிலுற வினிதி னெங்கு
மன்னிய தாலும் வெள்ளை வாரணஞ் சூழ்த லாலும்
பொன்னிசூழ் மருதந் தன்னைப் பொன்னுல கென்ன லாகும் (௪௰)

பொய்வகை முதலாஞ் சேனைப் பொருபவப் பகையை மோதி
மெய்யெனுஞ் செங்கோ லோச்சி விளங்கிசைத் தரும மென்றும்
வையமேத் திடத்தன் பொன்னி மருதநன் னிலமென் றேதுஞ்
செய்ய சிங்காத னத்திற் சிறந்திருந் தரசு செய்யும். (௪௧)

வேறு.

தேசுறு மருத நாடெலாநகர்கள் சிறந்திடந் நகமொலா மிலங்கும்
வாசநீ டியதா மரைச்செழுந் தடமும் வளம்பெரு செந்நெல்சூழ்வயலு
மூசுவண் டிரைக்குஞ் சோலையுங்கமுகு மொழிதரு சூதமுங் கரும்பும்
பாசிலைக்கதலி தெங்குடன் பலவும் பரமறு வயமுநல் விழாவும் (௪௨)

வேறு.

மலரின் மின்னெனப் பணைவமே லெயினர்த மகளி
ரிலக நின்றுதே னிறைத்தலி ஞொலால மெனலு
நிலவு செந்தினைக் கதிர்கொள நெடுஞ்சினை வேங்கை
குலவு பைங்கிளிக் குலமெதிர் கூவிடுங் குறிஞ்சி. (௪௩)

அனைய வன்னிலத் தெயினர்கள் வெறியினி தாற்ற
வினைத ருங்களன் மணப்பர்செங் காந்தண்முன் மணக்குந்
தினையி னொண்புனங் காத்திடு சிறுமியர் சென்று
சுனையி னாடுவ ரவர்முனந் தோகைக ளாடும். (௪௪)

கருந்து ணர்ச்செழும் பூவைவீழ் கடுக்கையந் துணர்போர்த்
திருந்தி டுந்திற மத்திணைத் தெய்வத மெவரும்
பொருந்து றத்தனை யறிந்திடப் பொலங்கலை யுடனே
திருந்த நிற்பதை யுறழ்ந்திடுஞ் சிறந்திடு முல்லை. (௪௫)

கான்கு திக்குமப் புறவிடை யிடைச்சியர் கவின்செய்
தேன்கு திக்குமென் கூந்தலை நோக்கிமுன் சேர

வான்கு திக்குமற் றவர்கடம் வரிவிழி நோக்கி
நான்கு திக்கினுங் குதித்திடு நவ்வியென் றிரலே. (சசு)

நீள்க ருஞ்சினைப் புன்னைநன் னிழலுப் பறலுள்
வாளை மீனொடு வரால்களும் பொருந்துழி மதனன்
கோளி ரும்படைக் கேதகை குருகெனத் தோன்றி
மீள லுற்றொளித் திடச்செயும் விளங்கிடு நெய்தல். (சஎ)

ஓங்கு வேலையிற் பரதர்க ளோட்டுவர் தோணி
பாங்கு வேலையிற் பரத்திய ரோட்டுவர் பறவை
யாங்க ளத்தவர் குவிப்பர்க ளமைத்தவெள் ளுப்பு
தேங்க ளத்தியர் குவிப்பர்க டிமையெறி துப்பு. (சஅ)

மன்னு மால்வரை முல்லைதண் மருதநன் னெய்த
லென்னு நானிலங் களிற்றனி யியல்பிவை நிற்கச்
சொன்ன மென்மலர் கடுக்கைசெங் காந்தண்மேற் சொரியத்
துன்னு முல்லையுங் குறிஞ்சியுந் தொடரிடஞ் சிலவே. (சகூ)

ஆயர் வேய்ங்குழ லிசையொலி யகஞ்செவிக் கொண்டு
தூய சோலையி லோதிமந் துயிலவும் விழவின்
மேய வோதையின் மான்குல மருளவும் விரிசீர்
பாய முல்லையு மருதமும் புணரிடம் பலவே. (ரு0)

செந்நெ னேய்ந்தெழு படர்மருப் பெருமைகள் சென்று
புன்னை நீழலின் மறியவும் புணரிவால் வளைகள்
பன்னு பூகதப் பாளைமீ தெறியவும் பாங்கின்
மன்னு நெய்தலு மருதமு மயங்கலு முரிய. (ருக)

திகழ்க ளங்கனிக் கத்துணை செய்யவொண் பவள
நிகரில் பட்டினத் தவரொடு புறவிடை நேர்ந்து
தகவி னெய்துவர் பொதுவியர் பட்டினஞ் சார்ந்து
பகர்வர் நித்தில மொருபடி தனக்கொரு படிபால். (ருஉ)

ஆன வெற்பிடை மணிசொரி யருவியின் சிலைப்புங்
கானி டைச்சியர் நறுந்தயிர் கடைந்திடு கலிப்பு
மான முற்றிடு மருதவொண் மணமுர சதிர்ப்பும்
வானு றுங்கடற் கனைப்புநீண் மாலையிற் றொடரும். (ருங)

வைய கம்புகழ் பொன்னிநன் னாட்டுறு வளத்தைத்
தையல் பாகநீ டிறையவன் றனெதிர் நோக்கி

வையயர் சூழ்மணி மன்றுணின் றுனந்த நடனஞ்
செய்யு மென்றிடி லதனையாந் தெரிப்பதற் கெளிதோ. (௫௪)

பொன்னி னாட்டினிற் சிறந்திடு பொன்னிநாட் டியல்பு
தன்னி லிங்ஙனஞ் சிறிதிசைத் திட்டனஞ் சாற்றி
டன்ன நாடெனுந் தனிமக ளணிநுதற் றிலக
மென்ன நீடுறுந் திருநகர் வளமினி யிசைப்பாம். (௫௫)

திருநாட்டுச்சிறப்பு முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம் ௭௰௮.

உ

சிவமயம்.

திருநகரச்சிறப்பு.

பொற்பு மிக்கவிந் நாட்டிடைப் பொன்னிதன் றென்பாற்
கற்ப காலத்து மழிவின்றிக் கடவுளர் போற்றச்
சிற்ப ரன்பரா யுடன்மகிழ்ந் துறைந்திடத் திகழு
மற்பு தத்திரு விடைமரு தெனும்பதி யம்ம.

கொண்ட லூர்தியும் விரிஞ்சனுங் கோடுறு கரனும்
பண்ட ரங்கனை நணுகியே வலரொடும் பணிபோ
தெண்ட ரும்புக ழவர்பதி யென்னவு மெழிற்பே
ரண்ட மென்னவு மிலங்கிடு மனையநீள் பதியே. (௨)

அனைய மாநக ரொருதனிப் பூந்தட மதன்கண்
வனைத லுற்றொளிர் மாளிகை மண்டப மெவையும்
புனை யெழிற்கருங் குவளையுற் பலம்புகல் குமுத
நனைகொள் பங்கயச் செழுமலர் நாயகன் கோயில். (௩)

மேரு வாமரு திறையவன் மேவுபொற் கோயில்
சீரு லாமணி மறுகெழு கடல்களுந் தீவுஞ்
சாரு மந்நகர்ப் புடைமதி னேமியுஞ் சயிலங்
காரு லாமதன் புறத்தகழ் புறத்தடங் கடலே. (௪)

சுருதி யோங்கிநான் முகனெனத் துலங்குமந் நகருண்
மருவ ஞாங்கருற் றொளிர்தரு மணிமதில் வலைய
மிரவி மண்டில மெனத்திகழ்ந் திடுமதைச் சூழ
விரவு தெண்டிரை யகழ்பரி வேடமொத் திலங்கும் (ரு)

சந்த மாரிடை மருதெனு நகரமே சலதி
யிந்தி ராதியர் சூழ்ந்திடக் கோயில்சூழ்ந் திலங்கு
மந்த வான்மதில் வாசுகி யெனும்பெய ரரவ
மந்த ராசலம் போன்றது வயங்குகோ புரமே. (சா)

நீடு பொன்மதி லிடந்தொறு நிகழ்ந்திடு மிடபக்
கோடு பட்டுடல் கிழிந்துசெல் கொண்டலைத் தாவிப்
பீடு தங்கிய கவிக்குலம் பிடித்ததன் புனலை
மாடு சித்திரச் சாதக வாயிடைப் பிழியும். (எ)

விண்ணி னோங்கலிற் காவல்பெற் றிருப்பதின் விரிசீர்க்
கண்ண னுக்குநல் விதிமுறை புரிந்திடு கவினு
னண்ணு நாற்றிசை முகத்தினு னெறிப்பினு னளினத்
தண்ண லொக்குமக் கோயில்சூழ் தமர்ந்திடு மதிலே. (அ)

சிகர கோபுர வாயிலிற் செறிந்திடு மிமையோர்
மகுட கோடிக ளொன்றொடொன் றுரிஞ்சிடு மாண்பாற்
றிகழு நந்திகைப் பிரம்படி தேக்கலா னுதிர்ந்த
புகரின் மாமணிக் குலத்தொடு பொற்பொடி யிறையும். (கூ)

மாக நாயக னுலகெலாம் படைப்பவன் மலர்மின்
னாக நாயகன் சித்தர்விச் சாதர ரமரர்
நாக நாயகன் போற்றுபொற் கோயிலு ணடுவே
யேக நாயக னுமையுட னினிதுவீற் றிருக்கும். (ய)

பன்ன கத்தனிப் பேருல கெங்கும்வேர் பரப்பித்
துன்னி மீதல மடங்கலு முலவையாற் றூர்த்துப்
பொன்னி நாட்டொடந் நகருக்குந் தன்பெயர் பூட்டி
மன்னி நின்றிடு மொருமரு திறையவன் மருங்கு. (யக)

பேசு மம்மரு தலர்கடேய்ப் பிறைகொள்வே ணியனைப்
பூசை செய்துதன் பெயர்முத லிடைகளாற் புறஞ்சூழ்
கேச ரங்களை வருவியாக் கிளர்முத லீறு
வீசி நல்லிசை பயில்விக்கும் விமலனுண் மகிழ. (யஉ)

இலகு மத்தருப் புவிபுகழ் கயிலையென் றிசைக்குந்
திலக மான்மிய மொன்றுகொல் சிலேடையி னுலு
மலர்த ருந்தனி வெண்மையுங் கோடுமார்ந் தருகு
நிலவு ணிர்ந்திடு வோனுமுற் றன்னதாய் நிலவும். (௰௩)

நெற்றி நாட்டத்து நிருத்தன்முன் னெடியதோர் தாரு
வற்றி நிற்குமெப் போதுமம மாண்பின தேனு
முற்றி டும்பசுந் தழைமல ருலர்ந்திடா ததனைச்
சுற்றி வந்தவர்க் களித்திடு பலன்களோ தொகையில். (௰௪)

எங்கு மண்டப மெங்கணுந் தேவர்த மிருக்கை
யெங்கு ஞ் சித்திர விதானங்க ளெங்குநற் றீப
மெங்கு மின்னிசைத் தூரிய மெங்குநாட் டியங்க
ளெங்குந் தோத்திர மிடைமரு திறையவன் கோயில். (௰௫)

மன்னு சீர்மரு திறையவன் கோயிலும் வகுத்தி
டன்ன தன்புற நாற்றிசை யாலய நான்கு
மின்னு செஞ்சடைக் கண்ணுதல் விமலன்றன் முகங்க
ளன்ன நூலறி புலவர்கள் புகலவுற் றிலங்கும். (௰௬)

வேறு.

ஓங்குபொற் றசும்பி னிலகுகோபுரத்தி னுறுதுகிற் சொடிகளி னீட்ட
மாங்கிரு விசும்பி னவிருடுத்திரளை யடித்துதிர்த் திடுகின்ற தென்னப்
பாங்குறு மதியுண் ணடுங்கியக் கொடியிற் படிதுகிலடிவழிப் படருந்
தேங்கிசைப் பரிதி யதுவுமுட் கொள்ளான் சிகரபந்திகளடிச் செல்லும். ()

பகர்மணிக் குவையா லலங்கலைமருவும் பண்பினுற் படர்ந்திடுங் காலாற்
றிகழுறுங் கலன்க ளூர்ந்திடுந் திறத்தாற் சிறக்கநாற் றிசையுமுற்றிடலான்
மகரமுற் றிடுவண் டணைந்துநீடிலங்கு மாண்பினு லிசையொலி யதனுற்
சகரர்க ளமைத்த பெருங்கடலென்னத் தயங்கிடு நெடியபொன் வீதி. ()

தாரணி யதனைப் பழித்துவாம்பரியுஞ் சகடமுங் கொடிஞ்சியும் புனைந்து
மேருவந்தது போற்கிளர் மணிநெடுந் தேர்மிசை யிறையுலாவு மவ்வீதி
நாரணன் பிரம னிந்திர னிமையோர் நவில்சிவ கணங்கள்பா ரிடங்கள்
சீருறு மியக்கர் முனிவர்சூழ்ந் திடலாற்றிகழ்சிவ லோகமும் பொருவும். ()

விடஞ்செறி மிடற்றெம் பிரான்றினம் பவனி மேவலி னருகுநின்றிரட்டு
மடந்தையர் கவரிக் காற்றுமோங்கால வட்டமா ருதமும்வெங் களிற்றின்
றடஞ்செவி மருத்தும் பொருதிடத் தென்றல் சாளரந்தொறும்புகுந்

ளிக்கு, மிடம்பெறுவீதித் தோரண நிரையா லிரவிகாண் பரியதெப் போதும். (உ௰)

காலையிற்கடைக்கட் குவிக்குநித் திலமுங் கதிர்மணித் தோரணத்தவிழ்ந்த மாலையுமாலைப் பொழுதினிற் புலவி மகளிர்க ளெடுத்தெறி கலனு மாலைவிற் சொறிபூங் கணையமெகளி ரணிமலர்க் கைசொரி வளையுஞ் சோலையுற் றிடுங்கால் பறித்துவந்திறைக்குந் துணருமவ் வீதியிற் குப்பை.

[மென் வனமுலைத் தடங்க ளசைந்திடி லொடியு மருங்குன்மெல் லெனநடந்திடு றினமணிச் சிலம்பு காலில்வீழ்ந் திசைப்ப வெதிர்ப்படு காமுகர்நயக்கு மனமுமன் மதனுந் தொடர்ந்திடக்கயற்கண் மடந்தையர் மறுகிடைச் செலனமவர் பின்னர் நடந்திடுங்கிளிக ளந்தரத் தருகுறச் சுழலும். [லுங்கா

கணிதரு விசும்பி னுறநிமிர்ந் தெழுந்த கதிர்மணி மேடைமுற் றத்து நணுகிவிற் றெடிக்கைக் காந்தள்கீழாட நயனமைக் குவளைமீ தாட விணையிலம் மனைக ளிடையினின்றாட விடையிரு பந்தெடுத் தாட வணியிழை மகளி ராடல்பொன்னுலகி லரம்பைய ராடலிற் றேன்றும்.

தொண்டையங் கனிவாய் மாதர்பொன்மேடைச் சுடர்மணித் தொட்டிலில் வளர்த்த, தண்டளிர்த் தளவப்பசுங்கொடி கவின்கொள் சாளரச்சுற்றெலாந் தவழ்ந்து, வெண்டுகிற் கொடியிற் பற்றிமீச்சென்று வெயில்விரி ~~மணி~~முடி யிமையோர், கொண்டகற் பகப்பூங் கொம்பரிற் படர்பொற் கொடி யுட~~னிணிதுவீற் றிருக்கும்.~~ (உ௰ச)

விண்படுபளிங்கி னரமியத் தலத்து மேல்விளை யாடுமங் கையர்க்குப் பண்படுநறுஞ்சொ லரம்பைய ரணிதம் பணியொடு தொடைலும்புனைந்து சண்பகத் தொடையோ டவர்கடம்பணியுந் தாங்கொடு தரித்துவான் புகுவர், நண்புறு மவரு மிருதிறத் தனையு நவிலும்வாள் விழிகளா றெளிப. ()

மஞ்சினை நிகர்த்த மலர்க்குழன் மகளிர் வடமொழிக் கவியெளி துணர்ந்து விஞ்சையர் மகளிர்க் கெதிரிசைப் பதிகம் விளம்பலு மவர்முழு துணரா, தஞ்சுகத் தொடுவெண் பூவையுந் தம்மி லறைதல்கேட் டறியப் பவர்போற், பஞ்சரத் தருகு திரிவர் விண்டொடு பொன்பயி லரமியங்களினமாதோ. உ௰கூ

சுந்தர மிகுந்த பளிங்கினு லமைத்த துங்கமண் டபமிசை யொருபாற் கந்தர மணைவுற் றிலங்கிடு காட்சி கவுரியோர் புறத்தனைப் பொருவு மிந்திர நீலத் திலங்குமா ளிகைதன் னிடைகொள்செம் மணியொடு மொளிர்தல், செந்திரு மடமான் மருவுறு மருமத் திருநெடு மாலினை நிகர்க்கும். (உ௰எ)

உச்சியிற் கதிரோ னடைந்திடுங் காலை யொளிர்தரு பொன்னிறஞ் சிவப் புப்,பச்சையி னுருவுற் றிலங்கிடு முயர்ந்த பளிங்கினி லியற்றா மியங்கண் மெச்சிடு தூரங்கர் தோற்றுதன் வடிவை விளங்குபுல் லெனவெதிர் தாவு மச்சுறு நெடுந்தேர் வலவனத் திறங்கண் டணிக்கரம் வருந்தவோட் டிடு மால். (உஅ)

குழிமதக் கவுட்குஞ் சரங்களி னொலியுங் கொய்யுளைப் புரவியி னொ லியு,மெழின்மணித் தடந்தே ரூர்ந்திடு மொலியு மிலங்குபல் லியக்குழாத் தொலியும், பொழியிசைச் சுருதி முதலியவொலியும் பொலிந்தினிதெங்கு மோங் குதலான், மொழியுமந் நகரிற் கடலொலித் திடலு முகிலொலித் திடுவதுங் கேளா. (உகூ)

ஆலையி னிடத்திற் கிளர்நறும் புகையு மந்தணர் புரிந்திடு வேள்விச் சாலையி னெழுந்த புகையுமொண் கூந்தல் சார்ந்திடு சுரும்பின மகல, வே லையிற் கணவ ரிடுமகிற் புகையும் விசும்பின்மேற் சுழல்வது நோக்கிச், சோலையிற் குயில்வாய் திறந்திடா தொளிக்குந் தோகையின் குழாமெதிர் நடிக்கும். (ஙய)

விளங்கிடு மறையோர் மாடநீள்வீதி வெண்சுதைத் தண்கதிர் பரப்பி வளங்கெழு கலைகண் மருவிமீ தெழுந்து மகத்தொடும் பயின்றுநேர் கண் டோ, ருளங்களிகூரப் புலவர்கொண் டாடு முயர்ச்சிபெற் றிலங்கிடுந் திற த்தாற், களங்கமின் மதிக ணிரையொரு கோடி கலந்துவீற்றிருப்பது கடுக் கும். (ஙக)

வாங்கொலிக் கடல்சூழ் புவிபுரந் தருளு மன்னவ ரியாவரு மீண்டித் தாங்களுற்றிடும்வீ றொடுமெணிருக்குந் தகைமையொத் தரசர்வாழ்வீதி யோங்கலிற் றோன்றிச்செம்மணிக் கதிர்கொண் டுலவுகா ரிருட்குழா மொ துக்கிப், பாங்குறுமாட மாளிகைக் குலங்கள் பரிதியின் கணங்களொத் திலங்கும். (ஙஉ)

புகழொடு தனமுந் தருமமும் பொறையும் போற்றிடு வணிகர்தம் வீதித் திகழுறு சிகரத்தணிநவ மணிகள் செறிந்தொளி புரிந்திட லோக்கி மகிதலத் தனைய ரிதிமண் டலத்தின் மருவுறு கோளின மயங்குந் தகவுற மனைக ளலகில்செல் வத்தாற் றனித்தனி யளகையின் விளங்கும்.

மன்னவர் தமக்கு மணிமுடி சூட்டும் வளங்கொள்வே ளாளர்தம் வீதித் துன்னிய செல்வக் கதிர்மணி மாடத் தொகுதிநா யிந்திரன் றனக்கு முன்னவர் முகில்காத் தியற்றிடு முதவி முன்னின னுளங்களி துளும்ப தன்னெழில் விமான மெனப்பல வமைத்துத் தந்தனவிருப்பது போலும்

கண்ணுறுஞ்சிகர வரைபடு பொருளுங் கானிடைப் படுபொருட் குலனுந்
தண்ணுறு மருதத் திணைபடு பொருளுஞ் சலதியின்பாற்படு பொருளு
நண்ணுறுஞ் சலதி யிடைப்பொலிந் தோங்குநகர்படு பொருள்களு மேனை
விண்ணுறு பொருளுங் கவின்குடி யிருக்கும் வீதியில் வயின்றொறும் வி
ளங்கும். (௩௫)

வானவர் மகுட முரிஞ்சுபொற் றுகளு மற்றவர் புனைமலர்த் துகளு
மாநிலந் தனைவிட் டெழுந்திடா தடக்கு மாளிகைக் கொடிபடிந் துதறு
மேனதித் துளியுஞ் சண்பகத் தருக்கள் விரித்திடு மலர்மதுத் துளியுங்
கானமுற் றிலங்குஞ் சிவிறிநீர்த் துளியும் விழவருக் கண்ணகன் மறுகின்.

வேறு.

மாந்தளி ரஞ்சி லோதி மடந்தையர் வடிவு காட்டு
மேந்தெழிற் கமுக மன்னா ரிழையணி மிடறு காட்டும்
வாய்ந்திடு மூருவின் றன் வனப்பினைக் கதலி காட்டுந்
தேந்துளி யிலவின் போது சேயிதழ் காட்டு மெங்கும். (௩௭)

மிகவிரி பாளை போர்த்து விளங்குதெங் கிளநீ ரன்னார்
துகிலொரு புறமேற் கொண்ட துணைமுலை காட்டுங் காவிற்
றருகொடி யிடைகள் காட்டுந் தடமுறு நளினம் யாவும்
மகமலர் காட்டும் வண்டு முகத்துறு கண்கள் காட்டும். (௩௮)

வேறு.

மந்த மாருதம் பயின்றிடை மருதினெம் மருங்குஞ்
சந்த முற்றொளிர் சண்பக முதலிய தழைந்து
கந்த மார்தரு பொழிலெழில் கண்டவர் மகவா
னந்த னந்தன தெழிலினை நவிலநா ணுறுவார். (௩௯)

எண்ட ரும்புக ழுலகெலாம் மெய்திடை மருதில்
வெண்டணிக் கலை மதிச்சடை விமலர்தம் விழாவிற்
பண்டருங் கனி மொழியெழிற் பாவைய ராடல்
கண்டிலா தவர் திலோத்தமை யாடலிற் களிப்பார். (௪௰)

எங்க ளீசர்வீற் றிருப்பதூஉ மாலயத் தெழிலும்
பொங்கு தண்புக ழிடைமரு தெனுநகர்ப் பொலிவுந்
தங்கி வாழ்பவர் மகிழ்ச்சியுஞ் சார்ந்தெதிர் கண்டோ
ரங்க ணோர்சிவ னுலகினை யகத்தினில் விரும்பார். (௪௧)

வேறு.

மொழிதரு மொருமை தன்னே டிருமைசெய் முத்தி வேட்டுச்
செழுமறை நான்கு நன்றாய்த் தெளிந்துமற் றையந் தீரப்
பழுதக லங்க மாறும் பயின்றா ளிடத்தி லன்பு
மெழுதரும் பிறவி யெட்டா தியற்றிநாள் கழிப்பர் சில்லோர். (சஉ)

பத்தியிற் காமி காதி பகருமா கமங்க ளாய்ந்து
நித்தியப் பொருளென் றோது நிமலனைப் பூசித் தற்றோர்
சத்திநி பாத மோர்ந்து சார்ந்திடு கலைக ளோர்ந்துஞ்
சுத்திசெய் திகலும் பாசந் தொலைத்தகற் றுவர்நாள் சில்லோர். (சங)

கல்வளை கணைய மாதி கரங்கொடு சுழற்றி யுங்கை
மல்லொடு வடிவா ளாதி மற்றொழில் பயின்றுந் தான
வல்லியந் துரங்க மூர்ந்தும் வருத்திடு கலைக ளாய்ந்துஞ்
சில்லியந் தடந்தே ரூர்ந்துஞ் சிலர்க்குறு பொழுது போமால். (சச)

விரிபொரு டம்பா லுள்ள வேண்டுநர்க் கினிதி னீந்தும்
புரிதரு மவர்தஞ் செங்கைப் பொருளெதிர் முறையி னேற்றும்
வரிமலர்ச் சோலை பார்த்தும் வயலுறு வளமை பார்த்துந்
தெரிவுறு கேள்வி யுற்றுஞ் சிலர்க்குறு பொழுது போமால். (சரு)

துலங்குகா விரியிற் பூசத் துறைப்புன லாடல் செய்து
நலம்பெறு நியம முற்ற நடாத்தியுங் கலைக டேர்ந்தும்
பலன்றரு மருத வாணன் பணிவிடை புரிந்து மன்றோன்
சிலம்பணி பதம் பணிந்துஞ் சிலர்க்குறு பொழுது போமால். (சசா)

வேறு.

கொடிபடு நெடிய மாளிகை வீதி குலவுறு மனையபொற் பதியி
லடிபடன் மணிவார் செறிந்திடு முரசே யமைவுடுப் படுவன மாவே
கடிமது வருந்தல்சிறைகொள் வண்டினமே கட்புன லுகுத்தல்பைம்பொ
ழிலே, படியுறு குளனே யலைபடல்சிறுமைப் படுலெழிற் பாவைய ரிடை
யே. (சஎ)

காரண மின்றிச் சினத்துட னெதிர்த்துக் கடுஞ்சமர் விளைத்தல்செஞ்சூட்டு
வாரண மதுவே திரித்திடு கோட்டு வளம்பெறு பெருமையும் விளக்கு
மேரண வுருவ மதனனே தன்னே டெதிர்த்திடா திருப்பவர் தம்மேற்
றூரண முறுநீ டம்புக ரேக்குந் தடித்துறு முகிமத் லுதகைத்தால். (சஅ)

இரிதரு பறவைக் குலங்களே யன்றிச் சிறைப்படு முயிர்க ளங்கில்லை
விரிதரு பயமுற் றொளித்திருந் திடுதென் மீனின மன்றிவே றில்லை
வரிதரு மகளிர் கடைக்கணே யன்றி வளைநெறி கடப்பன வில்லை
புரிமையுற் றொருவர்க் குதவிசெய் யாத தோவிய மன்றிமற் றில்லை. (௪௯)

வேறு.

அணிமருவு மிடைமருதி சருக்கு நந்தி
யாவடுதண் டுறைசோமாக் கந்த ராரூர்
திணிபுகழா லங்குடியிற் குருமூர்த் தியானைத்
திருமுகத்தோன் வலஞ்சுழியே ரகத்திற் செவ்வேள்
கணிதருமாப் பாடியிற்சண் டேசன் றில்லைக்
கதிர்ப்பொதுவி னடக்கடவுள் வடுகன் காழி
பணைமருவு மாந்துறையி னிரவி யாகும்
பரமனெழிற் பதமலருக் கன்பு மிக்கீர். (௫௰)

அன்னதனித் தலத்தினுறு மெழிலை நோக்கு
மாதரங்கொண் டிந்திரனு மிரங்கண் பெற்றான்
பன்னகநா யகனுமந்தத் தலத்தின் மாட்சி
பகர்வதற்கே யனையதொகை முகங்க ளுற்றான்
றுன்னுபிற சுரர்களுமன் னதனோர் நோக்கத்
துலங்கிடுகண் ணிமையாம லிமையோ ராகு
மொன்னவுறைத் திடத்தகுமந் நகரின் பொற்பை
யாமெடுத்திங் கிசைப்ப தனுக்கிசையு மன்றே. (௫௧)

திருநகரச்சிறப்பு முற்றுப்பெற்றது.

ஆ திருவிருத்தம். ௧௨௬.

உ

சிவமயம்.

நைமிசாரணியச் சிறப்பு.

முன்னமோர் காலந் தன்னின்மா தவத்து முனிவர்க ளியாவருஞ் சென்று நன்னர்செய் வனசப் பொகுட்டின்வீற் றிருக்கு நான்முகக் கடவுள்பா லடைந்து, பொன்னடி வணங்கிக் கருணையங் கடலே புவியிடை யாங்களுண் மகிழ்ந்து, துன்னுநற் றவஞ்செய் தருபல னடையச் சொல்கவோ ரிடமினி தென்றார். (௧)

மற்றவர் மொழியுட் கொண்டலர் மிசையோன் மருங்குறு மொருத ருப் பையினைப், பற்றியோர் நேமி யாக்கியங் கதனைப் பார்மிசை யுருட்டி முன் னிவி, ருற்றிடு மிதன்பின் னடந்திடு மிதுசென் றுறைந்திடுங் கானக மதுதான், குற்றமில் குணத்தீர் நல்வழியென்னக் குறித்திடு மூதுரை கொ டுத்தான். (உ)

இரவிவீற் றிருக்கு மெழுபரித் தடந்தே ரோற்றிடு நேமிசென் றிடுத லொருவியப் பலவென் றுரைத்திடத் தனித்தாங் கூர்ந்திடு நேமியின் பின் ன, ரிருடிக ளெவரு மயன்விடை மேற்கொண் டேகின ரதுபகீ ரதியாந், திருநதிப் பாங்கர்க் காசியின் வடகீழ்த் திசையினிற் சென்றுதங் கிய தால். (௩)

தூமறை யுருக்கொண் டேகுவதென்னத் தொடர்ந்திடு மாதவ முனி வர், நேமியங் குறையக் கண்டனர் தாமும் நின்றனர் நிறைதவ மியற்றி யேமமுற் றிடுநற் றலமிதே யென்ன விலங்குமக் கானகந் தனக்கு, நாமமி ந் நேமி தங்கிய திறத்தா னைமிச மெனப் பொருந் தியதால்.

மாயனை நிகர்க்கும் பூமணம் பெறலான் மயின்மிசை யிருப்பதா லெ னையாள், சேயினை நிகர்க்கும் கொண்டலூர்ந் திடலாற் றேவர்க ளிறைவ னை நிகர்க்கும், பாயதா மறைதங் கலின்விதி நிகர்க்கும் பசுமையா லுலகி னை யீன்ற, தாயினை நிகர்க்குங் கலைநிறைந் திடலாற் றண்மதி நிகர்க்குமவ் வனமே. (ரு)

வேறு.

அணிதரு கோங்க மெங்கு மதனரு சோங்க மெங்குந்
திணிதரு தமால மெங்குஞ் செறிநரந் தமால மெங்குந்
தணிவில்பைங் கோல மெங்குஞ் சாற்றுதற் கோல மெங்குங்
கணியுடன் சால மெங்குங் கலந்திடு விசால மெங்கும். (சு)

தவளித வருக்க மெங்குந் தாதகி வருக்க மெங்கு
மவமில் சம்பகங்க ளெங்கு மலர்கொள்சம் பகங்க ளெங்குங்
குவிதரு கடுக்கை யெங்குங் குருந்தில கடுக்கை யெங்குந்
தவவொளிர் சோதி யெங்குந் தழைந்தெதி ரிருத்தல் கண்டார். (எ)

காவுற வளருந் தேமா புளிமாநற் கருவிளந் தண்
கூவிள மருவுஞ் சீருங் குலவுகாய் கனியின் சீரும்
பூவுட னிழலின் சீரும் புகலுநேர் நிரைய தாகிப்
பாவுறு சீருமெங்கும் பார்த்தனர் மகிழ்ச்சி பெற்றார்.

அன்னதில் வேள்விச் சாலை யருட்கதை கேள்விச் சாலை
துன்னிடு யோக சாலை சுவைதரு பாக சாலை
வன்மறை நவிற்று சாலை வளர்தவ மியற்று சாலை
யின்னபல் சாலை செய்தங் கிருந்தனர் தவஞ்செய் கின்றோர். (௯)

வேறு.

கரங்கொடு பன்ன சாலைகள் புதுக்கக் கட்டிநின் றிபக்குழாங் களிக்கு
முரங்கிளர் கலைக ளிறந்திடு கலையி னுரிகொடு முனிவர்முன் விரிக்குங்,
குரங்கினங் கிழங்கு தருப்பைபமா விலைதேன் குறித்திடு சமிதைகொண்
டளிக்கு, மரங்களுந் தாமே வணக்கமுற் றருகே மலரொடு காய்கனிகுவி
க்கும். (௰)

நடனுறு மயில்கட் குலவுபச் சோந்தி நறுங்கனி பறித்தெதிர் நீட்டும்
படவர வதன்மேற் படும்வெயில் மயில்கள் படர்சிறை விரித்தினி தோட்
டுங், கொடுவரிக் குலந்தம் மடிசுரந்திடுபால் கோவிளங் கன்றினுக் கூட்
டும், வடுவறு மடங்கன் மறந்தரு் தொழிலை மறந்தருந் தவநெறிகாட்டும்()

பொழுதினுற் றிறைஞ்சிக் கிள்ளையைத் தீஞ்சொற் பூவைமற்றிருவெ
ன விருந்தாங், கெழுதுசித் திரத்தி னடங்கிவாய் செவியா யெழிற்சிவ
கதையமு தருந்தி, முழுதுமுள் ளத்துள் விடாதமைத் தேக மொழிந்தபின்
~~னிடுந்~~ தெய்வந், தொழுது பைங்கிள்ளை முகமலர்ந் துரைக்குந் தொகுத்
தத னகத்தினிற் ~~பொருந்த~~. (௰௨)

வேறு.

இத்தகைப் பெருஞ் சிறப்புற விருந்திடு நாளி
லுய்த்திடுந் தவத் ததீசிமிக் குயர்சதா னந்தர்
சித்தர் கண்ணுவ ரத்திரி திரிசடி யாதி
மெய்த்தவத் தினோர் கூடிநல் வேள்வியொன்றிழைத்தார். (௰௩)

அந்த வேள்விபார்த் திடும்பொருட் டருந்தவச் சூதன்
சந்த முற்றகண் மணியொடு தயங்குவெண் ணீறுஞ்
சுந்த ரம்பெறத் தரித்திடு மிடந்தொறுந் துலங்க
வந்த ணைந்தனன் கண்டனர் மாதவத் தவர்கள். (௰௪)

உவகை யுற்றெழுந் தெதிர்கொடு முகமனன் குரைத்தோர்
தவிசின் மீதுற விருத்தினர் தாங்களு மிருக்க
நவையில் சூதனு மவரவர்க் கிசைந்தன நவின்று
னவி யளித்திடு வேள்வியு முடிந்ததாங் கதன்பின். (௰௫)

மாதவத் தினோர் சூதனை நோக்கிநும் வதன
சீத பங்கய மலர்ந்தெதிர் செப்பினீ ரனந்தங்
கோதி லாதநற் றலங்களுந் தீர்த்தமுங் குலவு
மீதிவற் றரன் றலக்கதை விரும்பினோ மின்னம். (௧௬)

அத்தலஞ் சிறு பொழுதினி லகத்தினிற் குறிக்கு
மெத்தகைப் பெரும் பயன்களு மெளிதினிற் கொடுக்கு
மித்தகைத்த தாய்க் கொடுவினை யெவையுமாற் றுவதாய்
நித்த னன்புறு மிடத்ததாய் நிலவிட வேண்டும். (௧௭)

வேத வாகம புராணமாம் விளங்கிருங் கடலை
யோது நும்மதி மந்தரங் கொடுகடைந் துதிக்குந்
தீதிலத் தலக் கதையெனுந் தெளிவுறு மமிர்தை
யேதில் வாக்கெனுங் கரத்தினு லெந்தமக் கருள்வீர். (௧௮)

என்று ரைத்தனர் சூதன்மற் றிகலுமைம் புலனும்
வென்ற மாதவ முனிவிர்நீர் விருப்புறு தலமு
மொன்று பாரிடை யுளதிடை மருதென வோதுந்
துன்று சீரினை மருவிய தஃதெனச் சொல்லி. (௧௯)

திரு மகிழ்ந்துறைந் திடமிடை மருதினைச் செல்வ
மருத வாணனைப் பெருநல மாமுலைக் கொடியைக்
கருதி நீடெழு மானந்தக் கடலிடை மூழ்கி
யொருமு கூர்த்தமங் கோவிய மொத்திருந் ததன்பின். (௨௰)

வெதிரி மாவனத் திருந்திரு வேதங்க ளவையுஞ்
சதுர் விதப்படுத் திசைத்திடு வியாதனுந் தவத்தோன்
புதிய வின்னமு தென்னவீ ரொன்பது புராணங்
கதி யுறும்படி யெமக்குமுன் கருணைவைத் துரைத்து. (௨௧)

விரவு மின்னவை தவத்துட னருளுறு மேலோர்
பரவு காதலின் வினவிடிற் பகரொன்று னவற்றுண்
மருவு மீசன்மா லயன்பகல் வன்னிமற் றிவர்க்கு
நிரல்கொள் பத்துநான் கிரண்டட னிகழ்த்துமொவ் வொன்றும்.()

காமனைப் பொடி செய்தவற் குரியன காந்தம்
வாமனம் பிர மாண்டமொண் மார்க்கண்ட மிலிங்கங்
கூர்மமச் சம்வ ராகமே பவுடிகங் குறிக்கு
நேம முற்றிடு சைவமென் றிசைக்குமீ ரைந்தும். (௨௩)

காரணன் றனக் குரியவை யாரதம் விண்டு
காருடந் திகழ் புதகவ தப்பெருங் காதை
யாரணற் கியல் பதுமமும் பிரமமு மருணற்
கோரும பிர்ம்மகை வர்த்தமாக் கினேயந்தீக் கோதும. (உச)

ஈசனிடைக் காந்தமு மிலிங்கமு மிரவி
மாசில் வண்கதைப் பிர்ம்மகை வர்த்தமு மருவி
வீச னின்புக ழிடைமரு தெனுமதன் பெருமை
பேச மன்னவை யுமக்குநாம் பெரிதுரைத் திடுதும். (உரு)

என்ன மாதவர் மகிழ்வுற வெதிர்விரித் துரைத்தா
னன்ன வன்றிருப் பதமல ரகத்தினுஞ் சிரத்து
மன்ன வைத்தவ னிசைததவா வடசொலா மதனை
யுன்னு தென்சொலிற் புகலுவாந் தமிழிறோ ருணர. (உசு)

வேறு.

உரைதரு தலவி சேட முபதேச மகிமை யீசன்
றிருவிளை யாடல் வெற்பின் சிறுவிதன் றவத்தி ஞற்றல்
பரன்றனைப் பூசை செய்த பரிசுவெங் கொடியோன் ருடி
விரவுபொன் னிறமாய்ப் பின்னர் வெள்ளிவெற் படைந்த வாறு. (உஎ)

உரோமசன் பூசை மற்றை யோதுமார்க் கண்டன் காதை
தராதலம் புகழ்சு கீர்த்தி மன்னவன் றன்மை மேன்மை
விராவுகா சிபன்றன் காதை வெற்றிவேற் குமர னெய்திப்
பராவல்செய் திறையோன் றன்னைப் பரிந்துபூ சித்த தன்மை. (உஅ)

வானுத லிமயச் செல்வி மன்னுகா ருணியத் தீர்த்தம
பாணமா தீர்த்த மோங்கு பராசர தீர்த்த மேன்மை
நீணலச் சோம தீர்த்த நிகழுருத் திரமா தீர்த்த
நாண்மலர்ப் பதுமப் பேரா னண்ணிய புனித தீர்த்தம். (உகூ)

மிக்கபாண் டவர்க டீர்த்தம் விண்புரந் திடு[illegible] றொதித்
திகழிறை யவர்க டீர்த்தந் திருவுறு கன்னை தீர்த்தந்
தக்கசிர்க் காக தீர்த்தஞ் சாற்றிடு கெங்கா கூபஞ்
சக்கர கருட தீர்த்த முதலிய தசதீர்த் தங்கள். (ஙo)

கச்சப தீர்த்த நீடு கவுதம தீர்த்தம் யாரு
மெச்சுகல் யாண தீர்த்தம் விளங்கிடு சேட தீர்த்தம
விச்சைகொள் கந்த தீர்த்தம் வெள்ளைவா ரணத்தின் றீர்த்த
மிச்சையி னியம்ப லுற்ற விவ்வகைத் தீர்த்தக் காதை. (ஙக)

தெரிதரு வீரசேனன் சித்திர கீர்த்தி யெங்கும்
விரிதரு சீர்த்தி விச்வா மித்திரன் கூடலுற்ற
வரகுணத் தென்னன் காதை வலனுறு நல னயோத்தி
வருயுவ னச்சுவன்சீர் மாந்தாதாப் பெற்ற பேறு. (௩௨)

மாசறு வசுமன்னன்சீர் வளாஞ்சத் துவசன் காதை
வீசுறு புகழ்செய் தேவ விரதனந் தகன்றன் வண்மை
பூசமான் மியத்தின் றன்மை பொதியுறு வாடன் மீண்க
ளீசனீ டருளினெவி யெய்தல் பொன் வளவன் றன்மை. (௩௩)

சுனகன்மார் முத்தி யெய்தல் சொற்றிரி யம் பகன்சீ
ரிணங்கிடு மினைய யாவு மிருபதைந் திரண் டிரண்டின்
கணங்குலாஞ் சருக்க மாக்கிக் கருதிடு விருத்த மென்னு
மணங்குலாங் கவிதை நன்றால் வகைபட வுரைத்தல் செய்வாம்.

நைமிசாரணியச் சிறப்பு
முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம் ௩௩.

உ

மருநீசர் துணை.

தலவிசேடச் சருக்கம்.

புவனம் யாவையும் படைத்தவன் பொருந்தொரு காற்றேர்க்
கவன வாம்பரி கின்றிளைப் பாறிடக் கருதிச்
சவி மணித்திரள் கொண்டுமுன் சமைத்ததே யென்னத்
தவ நிமிர்ந்திலங் கிடுவது சையமாம் பொருப்பு. (௧)

மொழிந்தி டப்படு மலை யிடத்துறு முதிர்ந்தருண் மந்திக்
கெழுந்த வன்பொடு கடுவனீ டிருமெலடுத் ததன்வாய்ப்
பிழிந்த தேன்வழிந் தருவியா யிடர்தொறும் பெருகுஞ்
செழுந்தண் சாரலி னொருபகல் சிறந்துழி யிருந்து (௨)

சுத்த மாதவ வசிட்டனே சுமந்தொடு விசுவா
மித்திரன் புகழ்க் கவுதமன் முதலிய மேலோர்
மெய்த்த வம்மகந் தருமங்கள் செயிற்பலன் மிகவு
மெத்த லந்தரும் வினாவினி லென்ன வாய்ந் தனரால். (௩)

ஒருவர் காசியென் றிசைத்தனர் தில்லையென் றுரைத்தா
ரொருவர் சோணமா சைலமென் றேதின ருயர்மற்
றொருவர் நீடெழிற் கமலையோ வென்றன ருகந்தாங்
கொருவர் கூடலோ வெனப்புக லுற்றன ரொருவர். (௪)

உற்ற வேலையிற் குன்றுதோ றாடுத லுகந்த
கொற்ற வேற்படைச் சூர்ப்பகைச் சேவலங் கொடியோ
னெற்று தெண்டிரைக் கடன்மிசை யிரவிதோன் றுதல்போற்
சுற்றும் வானவர் சூழ்ந்திடத் தோகைமேல் வந்தான். (௫)

கண்ணுற் றார்வமோ டெழுந்தனர் கதுமெனப் பணிந்து
பண்ணுற் றார்துதி யரியணை யீந்தனர் பாநு
நண்ணுற் றுனெதிர் பூசனை விதிமுறை நவின்று
ரொண்ணுற் றார்தவ மென்செய்தோ மிவண்வர வென்ன. (௬)

அங்கதன் பினர்ச் சிறுவரை தாழ்ந்தரு கணைவுற்
றிங்கு வேள்வியொன் றிழைந்திடக் கருதின மியாங்க
ளெங்க ளீசர்தம் புதல்வமற் றியாவையு முணர்ந்தோய்
புங்க முற்றிடு மன்னது புரிந்திடு போதின். (௭)

மந்தி ரத்தினிற கிரியையில் வளர்திர வியத்தில்
வந்து சேரினு மொருகுறை மருவிலா ளரக்கர்
சிந்தி டாவகை நனதுமான் மியத்தினுற் சிறப்ப
தெந்த மாதல மிகுபல னதுதரு மென்றார். (௮)

இத்திறம் புகன் முனிவரை நோக்கிவே லினையோ
னுத்தமத் தனிப் புராணங்க ளுமையவட் கெங்க
ளத்த னோதுநாண் மிகுவினை யாட்டொடு மவற்றை
யுய்த் துணர்ந்தன னவளிடத் திருந்தஃ துரைப்பேன். (௯)

நீவிர் கேண்மினீ மகிழ்ந்துறை தலனெது நிகழ்த்தென்
றுவ லுற்றனை வினவின ளஃதுமுன் னிசைத்தே
மேவு வாலையான் மறந்தனை விளம்புது மின்னும்
பாவு சோதிநற் றலங்களென் றிரண்டுள பகரின். (௰)

சோதி யென்பதோர் ஞானமென் றுரைத்தது தூய
வேத மாகமம் புராணமவண் மிருதிகள் குரவன்
றீதில் யோகிகண் மந்திரஞ் செங்கதிர் கனலி
யோது மந்தணர் விபூதியென் றிவற்றினு முறைவோம். (௰௧)

தரணி தன்வயிற் றிகழ்ந்திடு தலங்களொன் றென்ற
தருணை காசிகா ளத்திகே தாரந்தென் னாரூர்
திருவ லஞ்சுழி யேரகந் தில்லைவெண் காடு
மருவு தண்பொழிற் குடந்தைபொன் வளரிடை மருது. (௰௨)

ஆதி யாகிய முத்திதந் தருளிடு தலங்க
ளோதி டப்புகி லனேகமுண் டவற்றினு முறைவோங்
கோதி லாங்கவற் றிடைமரு ததிகமாய்க் குலவும்
யாதினு லெனில நாதியா யிலங்கலி னென்னு. (௰௩)

அத்த லத்துறு மகிமையுஞ் சிறிதெடுத் தறைந்தான்
மெய்த்த வத்தினீ ரத்தல மேன்மையே யாகு
நித்த னம்பிகை யுடனங்கு நிலவுமெஞ் ஞான்றுஞ்
சித்த மின்புறு பலன்றருஞ் சென்மிநுங் கென்முன். (௰௪)

மாத வப்பெரு முனிவர்கள் வரையுரம் பிளந்த
சோதி வேற்படைக் கரதலத் தோகைவா கனத்து
வேத நாதவத் தலத்துறு விசேடத்திற் சிறிதீண்
டோது கெனறனர் கருணைகூர்ந் தனையவே னுரைக்கும். (௰௫)

வேறு.

தகமைபெறு முயர்சம்ப காரணியஞ் சத்திபுரந் தபோவ னஞ்சீர்
திகழ்சோதி நகர்சருவ தீர்த்தபுரம் வில்வவனஞ் செல்வ நாளு
மிகுதரும விருத்திபுர முத்திபுர மிடைமருது வீர சோழ
நகரமெனப் புவியிடத்துச் சிவலோக மெனுமதன்ற னுமை மாகும். (௰௬)

கருதுபுகழ்ப் பராசத்தி விமலமுறு தனியிதய கமல மென்னப்
பொருவிலதாய்ப் பூரணசின் மயானந்தத் தனிச்சோதி புவனம் போற்ற
விரவலுறு செழுங்கருணை யுடனிருக்கு மிடமாகி விளங்குந் தான
மருதவனத் திடைமேவி யிடைமருதென் றகிமைம் வியங்கிற்றன்றே. ()

கொத்துறுசண் பகவனத்தாற் புகல்சம்ப காரணியங் குலவு முன்னர்ச்
சத்தியணைந் துறைதலினுற் சத்திபுர முயர்முத்தி தருத லாலே
முத்திபுர மிறைசோதி யானதனுற் சோதிநகர் மொழியும் வில்வ
மத்தமெனச் சூழ்ந்திடலால் வில்வவனம் பிறவுமங்காங் கறிய லாகும். ()

வேறு.

நற்ற வம்புகழ் தருமநல் விரதமெய்ஞ் ஞானஞ்
சொற்றி டுந்திடம் பொறைநலந் தொகுபொரு டம்மை
யுற்ற வேள்வியைச் சராசர வுயிர்த்தொகை தம்மைப்
பெற்ற தாயென வளர்ப்பது பேரிடை மருது. (௰௯)

வேறு.

கோலமுறு மனையநக ரிடத்துற் றோர்கள்
கோகனகன் விதித்தவிதி தனையும் வெல்வர்
காலனச்சங் கனவினிலு மவர்கட் கில்லை
கருதுமந்தப் பதியிடத்தி லவனும் வாரா

னேனுமவன் றூதருக்குத் தினமுஞ் சொல்வா
னிடைமருதின் மறந்துமணைந் திடேன்மி னென்னப்
பாலினவ்வூ ரினர்களெதிர்ப் படினு மஞ்சும்
பார்க்கினருங் குறள்கணத்தோர் வெருள்வ ரன்றே.

பூதலத்தி லுயர்ந்தவிடை மருதின் மேவும்
புண்ணியர்க்கு நவக்கிரகத் திடுக்க ணில்லை
பூதமொடு பசாசுதான் வாரா வினனல்
பொருந்தாது வயிரவன்றன் றுணைதன் றேற
பூதமுறு தவந்தான மியோகமாதி
புரிந்திடுங்கா லிடையூறு புணராதாமூ
பூதமுறு மினியபுகழ் ஞானமீடும்
புத்தியொடு முத்தியது மெளிதிறமே.

அந்தவளம் பதியிடத்தோர் கவளமன்ன
மருந்திடநீ ரணுவளவு செம்பொன்றான
மந்தணர்கட் களித்தவர்கள் கயிலைசேர்வா
ரகஞ்சமைத்திந் தவர்திங்கல் லாதிநன்ம
ணைந்தமொரு துகட்கயுத யுகமீசன்பா
லமர்ந்திருப்பார் விளைநிலனுக் கரன்போலாவ
ரந்தமுறு கன்னியரைத் தானமாக
வளித்தவர்க ளரவணையோன் பதவிசேர்வார்.

தருவுதவு கனிகளொடு காய்கண்மூலஞ்
சந்தனம்வெள் ளிலைகமுகந் தயிலநெய்பால்
மருவுகலை கவிகைபா துகைநீள் கட்டில்
வழங்கினர்கள் வேண்டுமின்ப மருவிவாழ்வார்
குருடரொடு செவிடர்பித்தர் பிணியருமர்
குறையுடையோர் முடவர்முது கிழவரொன்னும்
பொருளிலர்க ளெவரேனு மவர்கட்கன்னம்
புரிந்தளித்தோ ருலகமெல்லாம் புரப்பர்தாமே.

விடத்தனியொண் மிடற்றிறைவ னடியார்கட்கு
விருப்பினொடு மடஞ்சமைத்தாங் களித்திட்டோர்க
ளுடுத்திடுமென் கலைகொடுத்தோர் சொன்னமன்ன
முதவினோ ரிம்மையிலுஞ் செல்வமின்ப
மடுத்திருந்து மறுமையினு மெற்றிமேற்க
ணமர்ந்திலங்கப் பாரிடங்கள் சூழவாழ்வார்

கொடுத்திடுவோர் பெறும்பலன்மற் றொருவர்க்குண்டோ
கூறுவது முலகமவர் புகழேயன்றே. (உச)

புறநகரிற் பரிமேதம் வாசபேயம்
புகலுமக்கி னிட்டோம மிராச சூயந்
திறனுச்செய் திடுபலனுங் கங்கை யாதித்
தீர்த்தமெலாம் படிந்துவரு பலனுந் தூய
நெறியுதவு மிடைமருதில் வதிவோர் கட்கு
நேருமனு தினமுமங்க ணினிது செய்யு
மறமெவையுந் திலமளவு மேரு வாகு
மல்லதுவெற் பெள்ளளவு மாகாதென்றே. (உரு)

சுருதியிழந் திடுமறையோ னுங்கு மேவிச்
சோதியினைப் பணிந்திடிற்சூ ரியனே ராவன்
றரணியிழந் திடுவேந்தன் றரணி சேர்வன்
றக்கபொரு ளிழந்தவர்கட் கதுவந் தெய்தும்
பொருபகைமை தவிரவெணிற் றவிரு மோங்கு
புதல்வருற வேண்டினரேற் புதல்வ ருண்டாம்
மருவுபிணி தீரவெணிற் றீரு முத்தி
வழங்குநகர்க் கிவைகளொரு வியப்போ வம்மா. (உசு)

வீசுபுகழ் மருதீசர் தமக்கு நெய்பால்
வெண்டயிர்தே னுதிகளொன் றாட்டி யோர்கள்
வாசமொடு மலரளித்தோர் தூப தீபம்
வகுத்திட்டோ ரனமாதி நிவேதித் திட்டோர்
தேசுபெறு சிவலோகத் தினிது வாழ்வர்
திகழாடல் பாடலிவை செய்வித் தோர்கள்
பேசுமெழிற் கயிலையினீ டூழி காலம்
பிரியாது வாழ்வர்சிவ கணங்கள் போற்ற. (உஎ)

இடைமருதீ சனைப்பணிதற் கொருவ னூற்
றெழுந்திட லங்கவர்வினையு மெழுந்து நிற்கு
நடையுறிலவ் வூர்நோக்கிப் புறவூர் நோக்கி
நடக்குமது சொல்லாம லவர்க ளேகத்
திடமிலா யுடனொருகாற் றிரும்பி னாலுந்
திரும்பாது சென்றவினை சென்ற தேயாம்
புடவிபுகழ் காசியினுற் றிலகு கங்கைப்
புனல்படிந்து வருபலன்மற் றவருக் கெய்தும். (உஅ)

வேறு.

கொலைபுரி வினைசெய் தோர்கள் குலவிடை மருதர் செய்ய
மலரடி வணங்கற் கெய்தின் வாயிலின் புறத்தே மிக்க
மெலிவொடு நிற்கு மன்னோர் வெளிவரிற் குனிந்து கொள்ளும்
வலியர்தம் மருள்பெற் றோரை மற்றையோர்செய்வ தென்னோ. (௨௯

பாங்குயர் தலத்தோர் திங்கட் பட்டினி விரதத் தின்பே
றீங்கொரு திங்கள் வாரத் தாற்றிய விரத நல்கும்
பாங்குயர் தலத்திற் பல்லாண் டருந்தவம் பயின்ற தின்பே
றீங்கொரு கடிகை மூலத் தாற்றியசெபத்தி னெய்தும். (௩௦

அத்தலத் துமையா ளாதி யனேகர்மெய்த் தவஞ்செய் தாரைந்
தத்தனு தியர்பல்லோ ரொம் மத்தனை யருச்சித் தாரொம்
மத்தனுந் தன்னைத் தானே யருச்சனை புரிந்தான் மேலு
மத்தநாட் டிறைமுன் னோகப் பலர்பழி யகற்றி னோர்கள். (௩௧)

ஆயிரம் வாயி னாலு மனந்தனோர் பணிய தாகி
யாயிர முகஞ்சொன் னாலு மணியிடை மருதின் மேன்மை
யாயிர மதனி லோர்கூ றுயினு மறைதன் முற்று
தாயிரங் கதிரோ னன்ன வாய்மைசா லருந்த வத்திர். (௩௨)

என்றனன் முனிவ னாய வித்தல மகிமை தம்மு
ளொன்றமித் திவசங் காறு முணர்ந்தில முணர்த லுற்றே
மின்றுன தருளி னான்மற் றிசைதவ மிமைய மென்னுந்
தென்றனிப் பொருப்பின் செல்வி செய்ததென் னிமித்த மென்றார்.

என்றலு மகிழ்வுற் றந்த விருடியர் விருப்பந் தன்னைக்
குன்றெறி வடிவே லண்ணல் குறித்தநுங் கருத்தி தாயி
னன்றதூஉ முரைத்து மென்ன நவின்றன னவின்ற வாறே
துன்றுமக் கதைது மென்னச் சூதமா முனிவன் சொல்வான். (௩௪)

தலவிசேடச்சருக்கம்

முற்றுப்பெற்றது.

ஆ திருவிருத்தம் ௧௮௬.

உ

சிவமயம்

உபதேசச்சருக்கம்.

இருமணிப்பெருங் கோடுபெற் றிலங்கலாற் சுவேத
வுரும னூற்றிடர் தகையிரு ளுடையவ ளொடுதன்
மருமலர்ச்சடைத் தனிமுதன் மகிழ்ந்துறைந் திடலாற்
றரும மால்விடை போன்றது கைலையஞ் சயிலம். (௧)

செங்கண் மாலினை விடுத்தொரு சிறுவனுண் டிடமுன்
னங்க ளித்தல்போற் றனையின்னு மளித்திடா தெவர்க்குந்
துங்க வெற்புயிற் பரன்றனைச் சுமந்துகொண் டினிது
பொங்கு பாற்கட லிருப்பது போலுமச் சயிலம். (௨)

அகில லோகமுங் கணத்திடை யழித்துட னுக்கு
மிகலுடைக் குறட் பூதங்க ளிலங்குபல் கோடி
பகரு மம்மலைச் சாரலெங் கணுமுயர் பரம
னுகள பங்கயப் பதம்புகழ்ந் தாடிடு முலாவும். (௩)

அனைய சாரலின் மீதெழி லாயிரந் தோட்டு
நனைகொ டாமரை யோடையு நறவமுண் டளிகள்
கனைசெ யப்பொலிந் தாயிரம் யோசனை கமழும்
புனைம லர்ப்பொழிற் குலங்களும் புடைதொறுஞ் சூழும். (௪)

ஓதி வற்றினுட் கதிர்மணி யொளிர்தரு மலகில்
வீதி யுமபுக லமரரோ டுருத்திரர் மேவுஞ்
சோதி மாளிகை நிரைகளுஞ் சூளிகைக் கூ
மாத வத்தினோ ருறையுளும் வயின்றொறும் விளங்கும். (௫)

அலகின் மங்கைய ரிசைக்குமே ழிசையுட னுர்வத்
திலகு தும்புரு நாரத ரிசைக்குமியா ழிசையும்
நிலவு வானமு தெனச்செவி நெறிப்புகுந் துளத்தி
லுலவ மெய்மறந் துறைவரி சனைத்தொழ வுற்றோர் (௬)

படக மாதியின் முழக்கமும் பணைமுலை மகளி
ரடிக டாங்கிடு மணிச்சிலம் போதையு மமர
ருட னருந்தவர் துதித்திடு மமலையு மொன்று
யிடியி னார்த்தலி னணமுற் றிடியுட லிடியும் (௭)

இன்ன வீதிகள் சூழ்ந்திட நாப்பணுற் றிலங்கு
பொன்னின் மாமதி லேழினும் பொருந்துநாற் றிசையுந்
துன்னுகோபுரந் துணைகொள் பொன் மலையெனத் தோன்ற
மன்னு கோவிலொன் றம்மலை யுச்சியின் வயங்கும். (௮)

உபதேசச்சருக்கம்.

கோயி லெங்கணு மமரர்தங் குலமணி மகுடம்
மேய வொன்றொடொன் றுரிஞ்சலின் வீழ்ந்திடு மணியாற்
றூய மாமணி வரையெனச் சொலும்படி துலங்கும்
வாயி லெங்கணுங் கணாதிப ரளவிலர் வதிவார். (௯)

மணிய ழுத்திய தமனியத் தூண்பல வகுத்திட்
டிணையி லிந்திர நீலவொண் போதிகை யியற்றி
அணிசெ யுத்திர மரகதத் தமைத்துவண் கொடுங்கை
தணியி னீள்கதிர்ப் பதுமரா கத்தினாற் சமைத்து. (௰)

இந்து காந்தவுத் திரங்கண்மீ திலங்கிடப் பரப்பி
சந்த நித்தில விதானங்கள் சாற்றியு ளெங்குந்
தந்து மீதெழில் விமானமுந் தயங்கிடப் புரிந்த
வந்தண் மண்டப மொன்றுள தாலய நடுவில். (௰௧)

அடுக்கும் வச்சிரத் தமைத்தொளிர் விமானமீ தமரத்
தொடுக்கு மாணிக்கத் தசும்புறு சோதியின் முன்னர்
நடக்கு மோதின காண்கதிர் நாடொறுந் தெற்கும்
வடக்கு மாகவே திரிகுவன் வயங்குமப் பகலோன். (௰௨)

ஓங்கு மண்டபத் திடையிலே ருரகமா மணிக
டாங்கு வச்சிரத் தகட்டெழின் மடங்கலா தனத்தின்
வாங்கு வெண்பிறைச் செஞ்சடை வரதன்வீற் றிருந்து
பாங்கு பெற்றிடு மம்பிகைக் காகமம் பகரும். (௰௩)

மார் மிடற் றிறைவனைப் பணிவதற் கணைந்த
மால ய[illegible]முதல் வானவர் கணங்கள்
சால் பெரும்புகழ் சிலாதரன் றனயனுங் கீது
கால மன்றென மீண்டகன் கடைத்தலை யிருப்ப. (௰௪)

பானு கம்பனு மியர்சில பாரிடத் தலைவர்
மானமுற்றவர் சேய்மையி னிலங்குதூண் மறைவில்
ஞான நாயகன் பார்வையுஞ் சிறிதுமே னண்ண
தான மொன்றினிற் பொருந்திடா தனித்தனி நிற்ப. (௰௫)

அயில்கொள் வேல்விழிக் கமலினி யாதியாஞ் சிலர்கள்
பயிலுஞ் சேடிய ருமையவள் பங்கயா னனத்தி
லியலு மன்பொடு நோக்கம்வைத் தினிதுசே ணிடையோர்
வெயின் மணிச்சுவ ரருகிற்சித் திரமென மேவ (௰௬)

கூறி டும்முல கனைத்தையு மீன்றவள் குலவு
வேறொ ராதனத் தருகெதிர் மேவின ளிருந்து
மாறி லாதர முளத்திடை மருவிடக் கேட்குந்
தேறி டும்படி கேட்பவள் சிலவினாச் செய்வாள். (௰௭)

வேறு.

இறைவனின் வடிவா மாகமப்பொருளை யெடுத்தெடுத் தருளுட னெனக் கீ
டறைதியா லனந்த விதங்களி னவற்று லடியனேற் குற்றதோர்மலைவு[ண்
மறைகளு முனது குணமுண ராது மருள்கொடு திரிவதாந் தெரியு
முறைமையாற் கேட்ட தமைவரக்கேட்டல் முன்னினன் விறுவுறத்துணி
[ந்தேன். (௰௮)

உலகமென் னிடத்தி லுளதியா னந்த வுலகிடத் துளனென வுரைத்தா
யிலகுமாண்பெண்ணுடலியெனு மூன்றிலெதுவென நினைப்பிரித்தறிவே
னலனுறு சாந்த னுகவு மிருத்தி நவிலுமுக் கிரனென வுறைதி [னீடுற்றாய்
மலர்நெடுங் கணையோன் றனைமுனிந்திட்டாய் வாஞ்சையென்னிடத்தி

மாயைபற் பலவாற் றிடுதியீங் கனைய மாயையி னென்றிலோ மென்றாய்
மேயவோர் தொழிலு மிலனெனவுரைத்தாய் விளங்கு மொத்தொழில்களும்
புரிதி, தூயதாம்வடிவோ டிருத்தியோர் வடிவுந் தோய்விலோ மெனவெ
டுத் திசைத்தா, யேயுறு முயிர்க்குச் சங்கரனுக விருத்திசங் காரமும் விளை
த்தி. (௨௰)

ஐயமேற்றிடுதி நினைநினைந்தோர்கட் கருள்கொடு வேண்டிய தளித்தி
யையமின்றுலகுக் கொருவனு யிருத்தியநேகனு யிருக்கவுங் கண்டே
னையமென் மலரா னனந்தினை யுனையா னறிவதெவ் வாறரு ளென்று
ளடனு மூவகை கூர்ந்திது விறுநற் கமைந்ததேயென வுரைத்திடுவான்.

வேறு

ஆதிநம்மிடத் திருந்தது மாயைமற்றதனைப்
பேதமுற்றிட நோக்கின நோக்கலும் பிரிவுற்
றுதரத்தெதிர் நின்றதை யாங்குறநோக்கி
ஓதுமிப்புவ னுதியைச் சிருட்டியென் றுரைத்தேம். ௨௨

மன்னுறும் வட வித்தினில் வடபரினுமமு
மென்னமாயையிற் செகமெலா மடங்கியதெனினு
மன்னதற் கெனஞான மொன்றின்மையினுகா
துன்னையன்றி நானது செயவென்ற தாலுற்று. ௨௩

முந்திநம்மினின் றிச்சைமென் மொழிதரு ஞானஞ்
சந்தமுற்றிடு கிரியையா மிவைகளைத் தந்தே
யிந்த மூவகை ச்சத்தியில் யாமுமோ ருருக்கொண்
டந்த மாயை யிற்றனுமுத லனைத்தையு மகற்றி ௨௪

நன்மை தீமைகட் கிசைவுற நவிறனு வாதி
யென்னு நான்கையு மளிக்குவ மிசையுயிர்க் கங்ங
னன்ன தன்மையிற் பிறந்திறந் தயருமம் மாயை
தன்னி னுஞ்சிறி தேனுமுண் மடங்கிடேந் தழுவி. ௨௫

வலிகொளிந்திர சாலஞ்செய் வான்றனை மயக்கா
துலகின் மற்றுள மனிதரை மயக்குத லொப்ப
நிலவுமாயையு நந்தமை மயக்ுற நினையா
திலகு நம்மை யல்லுயிரெலா மயங்கிட வியற்றும். ௨௬

மேவலென்னை நாமிச்சையாதிகளை மேன்மேவி
யாவதென்னெனிற் சத்தியு நாமும் வேறன்று
பூவும்வாசமு மிரவியுங் கிரணமும் போல்வோந்
தாவுசத்திநித தியமதாய நர்தியாய்த் தயங்கும். ௨௭

இச்சை மற்றெருடுங் குயிர்களைக் கருணையா லெடுக்கு
மெச்சுஞான மவ்வுயிர்களின் வினையறிந்துதவு
மெச்சமில்லதாங் கிரியைநின்றவ யவமிசைக்கு
நச்சி யைந்தொழி னடாத்துவோம நாம்வினை யாட்டின். ௨௮

இலகுகற்பனை கரணமென்றிரு விதந்திருட்டி
நிலவுகறபனை சத்தியின் மாயையை நீக்க
லுலவுமைந் தொழிலியற்றுதல் கரணமென் றுரைக்குந்
திலகவாணுதற் றுடியிடைச் சேயிழைக் கொடியே. ௨௯

மன்றநிட்களஞ் சகள நீள்வித்தையே மாயை
யென்றுநந்தமக் கீரிரண்டுருவ நன்கிசையுந்
துன்றுமாயைக்கட் டோன்றியோர் மேனியாததுலங்க
நின்று மூன்றதிட்டிதமுற நேர்கொள்வோம் பூசை. ௩௰

சாற்றுமந்திர வுருவமாய்த் தயங்கிடு வித்தை
யேற்றதந்திர மாதிவர்க்காதி களீந்திட்
டாற்று பூசனைக்குரிய மெய்யுருவ மாயன்பர்
போற்றல்செய்ய வீற்றிருந்த வர்க்கின்னருள் புரியும ௩௧

சத்தி மூவகையால் வடிவுற்றது சகளஞ்
சுத்த மாதவர் தியானமும பூசையுந்துதியு
மித்திறத்தினே நிட்களம் புணர்தலு மிதுவே
யுய்த்தல் செய்வது மொடுக்கலு மித்தகையுருவே ௩௨

வந்த நிட்கள மளவைநீண்மறை திருக்காதி
முந்திடும்புலங் கடந்தொளிர் முதிரறிவுருவாய்ச்
சிந்தைசெய்பவர்க் கத்திறந் திகழ்ந்துயிர்க் குயிரா
யந்தமார் குருவருளினு லளவிலே யருளும். ௩௩

சகளநீயுமா நிட்களந் தானுநீயாமெண்
டிகழுருக்கொளப் புரிதனீ யைந்தொழிற் செயனீ
மகிழ்வொடுன் னிடத்துறைவம்யா மிக்கினிவதிவாய்
மிகுமுருப் பெயர்நமக்கு வேறன்றி நாம்வேறே. ௩௪

நீருந் தண்மையு மென்னவே நின்னுட னிலகும்
பூரணப் பொருளாகு நாமைந்தொழில் புரிந்திட்
டாருயிர்க்கெலாம் புத்தியு முத்தியு மளிப்பான்
சாரும்பற்பல வுருவமுஞ் செய்கையுந் தரித்தோம். ௯௫

ஆதலான் முனமிசைத்ததே யுண்மையென்றமல
நாதிநாயகிக் கிசைத்தலுமவண் மகிழ்ந்திறைஞ்சி
யாதரத்தொடு தெளிந்த தாலைய நினனருளா
னுதனே யுலகெழிலி னிக்காட்டடென நவின்றாள். ௯௬

பாண்டரங்கனெம் முடலினிற் பரவுலகி யல்போ
பூண்டிடும் புறவுலகுறு புதுமையோ வென்ன
வாண்டநின் கணுருலகிய லுணர்விறு லறிகேண்
காண்டல் வேண்டுமிவ் வுலகுறுகவின்றனை மாதோ. ௯௭

மதிகொள் வேணியாய் புவியிடைமருவுறு தலங்கட்
கதிகமாய்ச் சுரர்போற்ற நீயகமகிழ்ந் தினிது
வதிவதெத்தலங் காட்டுதி மற்றதூஉ மென்றாள்
பதிமகிழ்ந்து நன்றென்றன னெழுந்தனன் பனைமுன். ௯௮

ஐந்தருக்கொடத் தொகைத்தொழி னடாத்திடெம் மையன்
சிந்தையான் மகிழ்வுற்றுமை தெளிந்திட நன்கு
முந்தையாகமத்துட் பொருளுரைத்திடு முறையீ
தந்தணீரினி யவன்விளையாட லீண்டறைவாம். ௯௯

உபதேசச்சருக்கம் முற்றும்.

ஆக திரு விருத்தம் ௨௨௮.

திருவிளையாடற் சருக்கம்.

ஆதிநந்தியை நினைத்ததந்து வொருவயிர
வோதிமத்தின் வந்துற்றதாங் குமையவளுடனு
மீதிவர்ந்தன னதிலொரு மாணிக்க வெற்புஞ்
சோதி நீலமால்வரை யொன்றுந் தோன்றியதென்ன. ௧

வென்றி மால்விடையது தனைவிசும்புற நெறியாய்த்
தென்றிசைப்படச் செலுத்தினன் மெல்லெனச் செலுங்காற்
குன்றுகானமு நதிகளுங் குலவுயர் தலனு
மின்றயங்கிட வுணர்ந்திட விளம்பினன் சென்று. ௨

அன்னையாகி யிவ்வுலகினுக் கறைதருகவேரன்
கன்னியாய்க் கயல்விழிகளாய்க் கமலமே முகமாய்ப்
பன்னிடுஞ் சுழியுந்தியாய்ப் பயோதரஞ் சகோர
மென்னும் புட்களா யிலங்கிநின் றுறைவன னிசைத்து. ௩

பின்னுமந் நதியீறதா யிசைந்தவும பிறவு
மின்னதின்ன தென்றுரைகையோ டிலங்கிடக்காட்டி
மன்னுதென்கரை வளரிடை மருதினேருறுங்கா
லுனனுமோர் மருதாகியாங் குற்றது கயிலை ௪
எங்குமுற்றுநின் றியாவையு முணர்ந்திடு மெங்கள்
சங்கரன் றனிக்கயிலையா மருதிடைச் சார்ந்து
பொங்குமத் தருநீழலிற் பொருந்துறு விசும்பிற்
றங்கமால்விடை நிறுத்தினன் றினைந்து சொல்வான். ௫

இனையமாதல மாதியா யிருப்பது நமக்கீ
தனையமாதலம பரவைசூழ் நிலத்தி னில்லை
நனையமாமலர்ச் சோலையுமவாவியு நன்கு
புனையுமீடுறு மிதனெழில் பாரெனப் புகன்றான். ௬
மற்றதற்கு முனனுங்குப மன்னியனுதி
நற்றவத்தி னோரனேகர் கணவிலுறு தவமு
முற்றதெய்விகத் தன்மையு முயர்ந்த சமபகங்கள
பெற்றகானமு ம பார்த்தன ளுமையவள் பெரிதும. ௭
கண்டுநெஞ்ச நெக்குருகிநிங் காலையிற கண்கள்
வண்டுளிககணம விடுத்தனன் மற்றது குணபால
மண்டுபொற்பினோ டுலகெலாம் வணங்கிடு மேன்மை
கொண்டுகாருணி யாமுத தீர்த்தமாய்க் குலவும. ௮
செய்யவாள் வரிததடங்கணீர் சிந்துத ளேகிக்
கையின் மான்மழு வெடுத்தவன் கண்டனை கொல்லோ
வையமுற்றிடு புதுமை யென்றுரைத்தனன் வணங்கி
யைய கண்டனனென்ற ளகிலமு மீன்றாள். ௯
எங்களன்னை யீதியம்பலு மெழின்மதிச் சடிலப்
புங்கவன் றிருநயனமுங் கருணைநீர் பொழிந்த
தங்கதோ ரிரணடாகிப் பொன்னிறத்த தாயனிலன்
றங்கு திக்கினுந் தெற்கினுஞ் சார்ந்தது தடத்துள். ௰

வேறு.

சார்ந்திடு வடமேற் றடத்தின் முன்னர்த் தண்புனல் விலாமையினுவி
நீர்ந்துலர்ந் துற்ற சலசரமனைத்துஞ் சிவபுரஞ் சோதிதன் றிருககண்
வார்ந்திடு மமிர்தம் படவுயிர் வாய்ந்து மருவுருத் திரிந்துருத்திரராய்
சேர்ந்திடுங்கோடி தினகரருதய நிகரொளி விமானமேறினவே.

இலகெழில் விமானத் தலர்மழைபொழிய வேறிய வுருத்திரர் கணமும்
வலனுறு மிமையோர் கணங்களுங்கணிச்சிவலவனை வலங்கொடு வணங்கி
மலர்கொடு சமைத்த வொருதனிவிமான மகிழ்வொடுஞ்சாத்தினர்நின்றுந்
நலகில் வண்போதா லருச்சனை புரிந்தா ணாவகை நாதமுமுழங்க. ௰௩

இவ்வணமுனிவ ரறிந்திடாதவர்க ளிசைத்திடு தர்க்கமுற்றறிவா
னவ்வயி னிறைவ னிலங்கொருமுகூர்த்த மமர்ந்திடவிந்தமுன்னடக்குஞ்
செவ்விய முனிவ னப்பொழு தவர்க டிருமுனம் வந்தன னவர்கள்
பவ்வமொண்மதிகண்டாலெனமகிழ்ந்துபணிந்தெழுந்தவனொடுமிருந்தார்

இருந்திடு முனிவ ரடைந்தமாதவ ன்றனெழின்முகப் பங்கயநோக்கி
பொருந்திரைக்கடலை யருந்தருட்கடலே புண்ணியமியற்று புண்ணியமே
திருந்திய வேள்வியாதிநல் வினைகளசெய்திடுற பலனினி தளித்தல்
புரிந்திடுவினையோ பரமனோ வெமக்குப் புலப்படப்புகல்கெனப்புகன்றார்.

தண்டமிழ் முனிவனின்னுநம மனத்திற் சார்ந்திடு சங்கைகளியாவும்
விண்டிடுமெனமற றவர்மறைக் குலங்கள் விதித்திடு வேள்விக டவங்க
ளெண்டர வியற்றிற் பரனெதிர்தோன்று மெனுமுறை யிசைவதன்றுகுல
கண்டிடாமையினன்மாதியாங்கரணங் கண்ணுதற்பரமனமற்றில்லை. ௰௫

இம்பரிற் புரிந்த நல்வினைப்பயனை யெய்திமற்றிவ ருயிர்தாமே
யும்பரி னருந்து மென்னவிவ் வுலகோ ருரைப்பர்க ளின்னவும் புகல்வாய்
பம்பிடவிறவு பொருள்களுன டின்னுமபார்க்கிலிந்நெறியவேயென்றார்
கும்பசமபவ னீர்தெளி வுறவுரைப்பன் குறிப்புறக் கேண்மெனக் கூறும்.

முனிவிர்கா ளென்கண் முனிவுறு தொழியுன் மொழியிறுங் குலத்தொடு
நனியுயரமுதைப் புவியுறுகமரி னண்ணின ருகுத்ததுபோன்ற [தவமும்
வினைகளு முடலுஞ் சடமெனக்கலைகள் விளம்பிடு மாதலா லொருவ
னனையதொல் வினையைக் கூட்டுவித்தன்றி யாருயிரருந்திடாதாகும். ௰௭

தவமுறுவேள்வி யாதிக ளியற்றிற் றகுபல னடைகுவ துயிரோ
நவிலுறு தனுவுங் கரணமுமிடமும் நண்ணிடு போகமுமான
திவளுறு பலனைத் தெரிந்துயிர்க்கெங்குஞ்செறிந்தினிதுறைந்திடுமெங்கள்
சிவபரஞ்சோதி யெனுமிறையவனே திறம்பிடாதடைவினிலருள்வோன்.

ஆவியுங்கரும மதுவும் விண்ணுதி யடைந்துறு பலன்கொளு மென்னின்
மேவுறு குருட னுகுமோர் முடவன மேருவின முடித்தனிச்சென்று
நாவுறப் பசுந்தே னெடுத்தருந்தியது நானெதிர் கண்டனனெனலாங்
காவலன் றனைச்சூழ் மறவர்வென்றனரோற்கருதிடுவரிசையார் கொடுப்பார்

வேறு.

அண்டர்பிரான் றனைப் பணியாச்சிறுவிதி யி னணிமகமு
மிண்டுபுரி யிராக்கதர்க டிரிபுரமும் விதிதலையுந்
தொண்டுபடு சண்டிசன் றன்னுபெருஞ் சிறப்பொடுமோர்க்
கண்டனடை பேறுமென்றன் கைத்திறமுங் கருதிடுமின் ௨௰

பரசிவனைக் குறியாதார் மனமெவையும் பகர் சுடரி
விருளறையும் பகலவனில் விருவிசும்பு மனுமுறைதேர்
புரவலனில் பேருலகும் புனல்வறந்த பைங்கூழும்
வரனிழந்த தனிமுல்லை மடந்தையரு நிகராகும். ௨௧

மனமாதி கண்டிலவான் மதிமுடியோன் றனையென்றீ
ரனையனுள னென்றவர்பா லுளனுவ னாதலின்முன்
வினைதருநம் மியல்பனைத்தும் விடுத்தினைய வியன்றலத்திற்
றனிமுதலை மனத்திருத்தித் தவம்புரிமி னெதிர்தோன்றும். ௨௨

இத்தகைமை சரதமென மலையமுனி யிசைத்திடலு
மத்தவர்கள் மிகமகிழ்வுற் றிறையுள னென்றகந்தேறி
யெத்துணைநா ளிவற்பணியா தேகினவென் றிரங்கிவினை
யொத்திடச் சத்திநி பாதமுதித்து முனிவனைவணங்கி. ௨௩

நல்குரவி லுறுநிதியு நவில்வேனி லிடைச்சொரியு
மல்குபெரு மழைமுகிலு மானுறவெம் மெதிர்தோன்றிக்
கல்விதரு சுருதிகொடு கத்துரு நிச்சயஞ்செய்தா
யொல்லுறு மாதவ முனியாமுனாற்று நெறிவிதிக்கென்றார். ௨௪

விற்பெறு நன்மணிக் குணங்கள் விழியில்லான் காண்பதுவும்
பொற்புறு வித்தாதி யிலான் பயிர்விருப்பும் புரைவாகுஞ்
சொற்படு மெய்ப்பரம் பொருளைத்தொகுபத்தியிலா ரறிதல்
பற்பல மாதவத் தன்றித் தோன்றாதப் பத்தியுமே. ௨௫

இன்னுமொரு வழியுரைப்ப னியலளவைக் கடங்காத
சின்மயனை யவனருளாற் றெரிசித்தல் வேண்டுங்கண்
முன்னிருந்து மொளியின்றி மொழிபொருள்க டெரிவுறுமோ
வன்னதனாற் பராபரையா லறியமுயன்றிடல் வேண்டும். ௨௬

ஓதுபர னருளதனி லுருத்திரன்மால் விதிதோன்றத்
தீதில்பரை யிடத்திலுமை திருவினொடு வாணியென
மாதருறு மூவர்களும் வந்துதித்தம் மூவருக்குங்
காதலுறு தேவியராய்க் கலந்தனர்க ணிரைநிரையே. ௨௭

சுருதிமுதற் பலகலையுந் தோற்றுவிக்கு முயர்வாணி
திருமகணல் லறத்தினொடு பலதிருவுந் திகழ்விக்கு
மரனையுமை யவள்காட்டு மாதவினாலிவர் தம்மைப்
பரவிலிறை யெதிருமெனக் குறுமுனிவன் பகர்ந்திட்டான். ௨அ

வேறு.

நெடிய புகழ்க் குறுமுனிவ னிசைத்ததுவு மருந்தவத்தோர் நினைவு மோர்ந்து, விடமணிகண் டனைநோக்கி யுமையிவர்முன் னெதிர்வமென மேவலின்று, தொடர்தவத்தி னுமையருண்முற பெறிலவள்செய்திவேள்ப ரன்றோன்றவென்னக், குடமுனிவ னிசைத்ததற்கு விரோதமா முறைய துவேகுறிக்கும்போதில். ௨௯

அதுவுமன்றி வருத்தமுறத் தேடினொரு பொருளதன்றனருமைதோன்றும்
விதுவதனத் தாயெவர்க்கு மாதலினன் மலையமுனி விதித்தவாறே
முதுமறை மாதவர்க ளுனைக்குறித்தியற்றுந் தவத்தானீ முன்னர்நின்றாற்
கதுமெனத்தோன்றுதுநாமும் நீயினிதினுற் றுதவங்கண்டுபின்னர். ௬௦
என்றிறைவனசைத்தனனுங் கிருந்தவர்க ளிசைத்ததுவு மிலங்குமின்பத்
தென்றமிழ்மா தவனசைத்ததிறனுமுமையசைத்ததுவுஞ்சிலை வேடன்னை
வென்றவன்ற னசைப்புமிடை மருங்கினியற் கையுமெண்ணிவிடபதேவன்
றன்றலையை யசைத்திடத்தன் மணியசைந்து கணீரொன்னத் தயங்கிற்றன்
றே. ௬௧
மண்ணுலக மதிர்ந்ததுகட் செவியுலக மதிர்ந்த திமை மருவிடாதோர்
விண்ணுலக மதிர்ந்ததிது வென்கொலெனத்த போதனர்கள் வியத்தல்
கண்டு
கண்ணுதலோன் சிறுநகைசெய் திறைவிதனைநோக்கவவள்கருணைமூர்த்தி
யெண்ணுறு நின்றிரு விளையாட்டுலகிலெவரறிவரெனவிசைத்தாள்போற்றி.
அவ்வுரை கேட்டுளமகிழ்வுற் றினிவருகென் றவளுடனு மடலேறூர்ந்து
செவ்வியல்வெண் கயிலையடைந் தினிதிருந்தா னிறைவனிது தேவிகாண
நவ்வியங்கைப் பரனிழைத்த விளையாட லினித்தேவர் நகரினெங்கு
மவ்வன் மணங்கமழ் பொழில்சூழிடை மருங்கினுமை தவஞ்செய்வளமை
சொல்வாம். ௬௨

திருவிளையாடற் சருக்கம்
முற்றிற்று. ஆக திரு விருத்தம் ௨௬௧.

தவநிலைச் சருக்கம்.

மலையமுறு தவமுனிவ னுரைத்தபடி தபோதனரு மகிழ்வினொடு
நிலைதருமெய்ஞ் ஞானமுறத் தவம்புரிந்தார் கலைமகளை நினைந்துமுன்னர்ச்
சிலைநுதல்வேற்கருந்தடங்கட்கலைமகள்வெள்ளனமதனிற்சிறக்கத்தோன்றி
யலைவறநீ ரெவையுமுணர்ந் திடுகவென வரங்கொடுத்தா ளகிலமுய்ய. (௧)
ஞானமுறச் சகலமுமிக் குணர்ந்ததற்பின் மகமினிது நவிலுங்காலை
தானமுத லியற்றுதற்குப் பொருளாதி வேண்டினர்செஞ் சலசமின்னை
மானமுறக் குறித்தரிய தவமியற்றக்கருடன்மிசை வந்துநின்று
தேனமிர்தமெனுஞ் சொல்லாள் வேண்டுவதென் னெனவேண்டுஞ் செல்வ
மென்றார். (௨)
கானுலவு மலர்த்தடமுங் கனகமணி மண்டபமுங் களிவண்டுண்ணத்
தேனுலவு சண்பகத்தண் பொழிலு நவமணிக்குவையுந்தேவர்சூழும்
வானுலவு தேனுவுமொண் கற்பகமும் பிறவுமெங்கும் வயங்கச்செய்தான்
மீனுலவு கமல நிகர்வதன முறுகமலை யெனும் விமலைமன்னே. (௩)

முத்தநகைப் பவளவிதழ்க் கமலையெழின் முகநோக்கி முனிவரின்று
மித்தலவாழ்குந ரெவர்க்கு மினிய பெருஞ்செல்வ மளித்தென்றுநீயுஞ்
சித்தமகிழ்ந் திவணுறைதல் வேண்டுமென்றா னவளுமிது செய்துமென்று
னத்தினந்தொட் டந்நகரந் திருவளர்மா நகரான தவனிமீது. (௪)

பொன்னுருவச் சண்பகத்தண்மலர்ச்சோலை யெங்குமிகப் பொலிதனோக்கி
மன்னுசண்ப காரணிய மாகியதித் தலமிந்த வைகலாதி [ரும்
யென்னவதற் கொருநாமங் கொடுத்தனன்பின னருந்தவர்க ளிருந்துளோ
தென்மலைய முனிவானு முமையைநினைந் தரியதவஞ் செய்ய லுற்றார். ()

கந்தமலர் வேணியனைப் பூசித்தும் மகம்புரிந்துங் கல்வி நீடு
மந்தணர்க்குஞ் சிவனடியா ரெவர்க்குமன்ன மாமகிழ்ந் தளித்துநெஞ்சிற்
சந்ததமு முமையவள்பொற்றாள்குறித்தும் பற்பலநாட் டவங்கள்செய்தும
வந்திலளாங் குமையவள்கண் டகத்தியனு முனிவன்மிக வருந்துகின்றான்.

பனிவரைக்கோம் பருளாதிவ் வாறிருக்க நாமென்ன பவஞ்செய் தோமோ
முனிவரர்க்கு நாமிசைத்தமொழியென்னா மினியென்ன முன்னிமுன்னித்
துனிவருத்த மிகவுற்றா னெதுவுமிறை யவனருளா றேற்றுங் காலம்
நனிவரத்தோன் றிடுமன்றியிடையொருவர்முயற்சியினானண்ணற்பாற்றே

அம்பிகையா தியைநோக்கி யரியதவ மிகவியற்றி யன்பின் மிக்க
கும்பமுனிவருந்துவதுணர் திருவுளத்தி லிசைந்திலைகொல் கோமானென்ன
வெம்புலியி னதளுடுத்தோன் முனைபடர்தி யென்றினிது மொழிந்தா னன்
னான், செம்பதுமத்தாள்பணிந்து சென்றனள்விண் ணின்றொருமின் செல்
வதென்ன. (௮)

சத்திதனைப்பிரிந்து நொடிப்பொழுது தனித்திருப்பதற்குச் சத்தியேதாங்
கத்தினை புரித்த பிரானவள் வருமுனிடைமரு தினணை வுற்றந்தப்
பத்திமிகு முனிவர்முத லெவருமறியா திருந்தான் பரையும்வந்து
முத்தியல் வெண்ணகைத்து வர்வாய்ச் சேடியர்சூழ் வரமுனிவர் முன்னர்
நின்றாள்.

வேறு.

செந்தழலினின்றுருகு சொமபொன் வரையென்ன
வந்தலகில் செங்கதிர்கள் மண்டியெழ லென்ன
நந்தலறு மின்கள் முனர்நன் கொளிர்வதென்ன
வந்தணனர்கணின் றொளிர்தல கண்டனர்களம்மா. ௰

வானவர் கணங்கள் சொரி மாமலர்கள் கண்டார்
கானமுறு மைந்தொழில்கள் காதின் வழிகொண்டார்
மேனிலவுமிந்த வொளிமேவு மெதுவென்றார்
மானலது துங்கமுற வாய்வெருவி நின்றார். ௧௧

இந்தவொளிநீடு மிவணென்று முளதேயோ
மந்திரமன்வேழ்வி யின்மந்த விடமீதோ
விந்தைமிகு மாதவமும் வெங்கனவு தானோ
வந்தவைமுன் யாவையெது வந்திடுவதன்றோ. ௧௨

வேறு.

என்னவுரைத் தலமரலுற்றிருப்பதுவு நிற்பதுவு மியக்கந்தானும்
பன்னுவது முணர்ந்திலரா யுழல்வேலை யருந்தவர்கள் பயின்றவேள்வி
தன்னிலெழும்புகை முகிலிற் புலவர்சொரி மலர்மழையிற் றுணுமோங்கு
மின்னென நின்றவள் புவிமேற் பெண்வடிவந் தோனறவுற்றாள்வேள்விச்
சாலை. (௰௩)

எழுதரியவவயமு மரகமணி முதலவற்றி னிலகுபூணு
முழுதுலகும் விலையிலெனுங் கலையுமிரு ளகற்றுமணி முடியுஞ்செய்ய
செழுமலர்க்கை யபயமொடு வரதமுநீ டகமகிழ்வுஞ் செம்பொற்கச்சும்
பழுதகல் விண்ணுலகமலர்த்தொடையுமு நற்றிருவருளின் பண்புந்தாங்கி.

தும்புரு நாரத ரிசைத்தேன் சொரியமலர் மடந்தைநிகி சொரிய வில்வி
னம்புருவக் குமரியொடு காளியுடை வாளேந்த வரசெய்வேற்கட்
கொம்புருவச் சிறுமருங் குற்புலோமிசை வெள்ளிலைமடித்துக் கொடுப்ப
[மேவும்
வம்புருவத் தனதடத்து வாக்களங்கு புகழிசைப்ப மறைகள் வாழ்த்த. ()

தென்மலையிற் பணைத்தெழுந்து வடமலைபுற்றிலகுமலைந் தேவமாதர்
பொன்மலிவெண்டுகிலிரட்டக்கமலி ரிவெண்குடைநிழற்றப்பூவையன்ன
சின்மொழிச் சிற்றிடைக்கயற் கட்டிலோத்தமை மெனனடம்புரியத்தீர்த்
தமின்னூர், வின்மருவு கவரிபுடை விசிட முன்னூர முனிவர் விளங்கக்க
ண்டார். கரு

கண்டனர்கண் மகிழ்ந்து குதிகுதித்தனர் முன்வணங்கினர்கள் களை
யிலார்வங், கொண்டனர்கள் விழுந்தனர்பின் னெழுந்தனர் மெய்விதிர்ப்பி
னெடு குலவு கண்ணீர்,விண்டனர்கள் குதித்தனர்கள் பதைத்தனர்க ளரற்
றினர்கள் வெம்பேயாற்பற், றுண்டனர்க ளெனத்திகைத்து நின்றனர்க
ளனைவர்களு மொருவரொன்ன. (௰௭)

ஆங்கதன் பின்னகமதனை யொருவழிக்கொண்டொல்லையினிலருகிலெய்தி
யோங்குபர னிபற்றிலைமைந் தொழிலினுக்குங் காரணமா மொருத்திதன்
பூங்கமலத் தவிசினிடை யிருத்திமலராதிகளாற் பூசையாற்றி [னைப்
நாங்களிறை யவன்றனையுங் கண்டுபணிந்திடக் கருணைநல்குகென்றார்.

இந்தவித முரைத்தமறை முனிவர்மகிழ்ந்திட வுமையாளிசைக்குநீடு
சந்தனமென் பரிமளமு மாயதெனை வந்தணருமவருமானீர்
முந்திரவி தன்னையும் விண்ணுலகினையும் விளங்கிடச்செய் முறைமையெ
ன்னச்
சிந்துபுடை சூழுலகினிவிரு மேற்பிறவி யருந்திகழச் செய்தீர். கசு

குணதிசைக்க ணெடுத்தவொளி யிரவியருகினிலடைந்த குறியதென்ன
யுணர்வுதரு வாணியொடு கமலையு முன்னுதித்தனர் சீருவகையெய்த
மணமருவு மலர்க்கூந்தற் பாவையர்சூழ்ந்திட நாமும்வந்தோ மீண்டுப்
பணவரவப் பணியிறையும் வருவனினி யையமிலை பயப்படேன்மின். உ0

மாமதியில் விசும்பெனவு மதியமைச்சி லரசெனவும் வயங்குங்கல்வி
யேமமுறுங் குரவரின்றித் தாமேசின் றியற்றுவினை யிலங்கிடாது
தாமமுறு மிவணுமக்கச் சிந்தனை வேண்டுவதிலைமேற் றலைப்பட்டிற்கான
நாமுமருந் தவம்புரிது நீவிருநின் றரியதவ நவிற்றுகென்றாள். உக

ஆற்றுதவப் பாவனையு மதின்பயனீந் தருள்பவளுமாகி நிற்பாள்
சாற்றுதவம் புரிவதற் குத் தொடங்குவதுங் குறிப்பினிருந்தவர்கடேறப்
போற்றுதவ பேதத்தினியல்பறி வித்தவர்க்குறுதி பூட்டவுற்ற
தோற்றமெனத் தருமதுவு மன்னவர்முன் புரிதவத்தின் றோற்றமேயாம்.

அன்னைதவம் புரிந்திடுதே மென்னலுமா தவர்வணங்கி யமரர்நாட்டில்
துன்னிடு கற்பகமலராற் சண்பகத்தண் சோலையிடை துலங்கச்செய்தார்
பன்னுமெழின் மண்டபமொன் றதனை நவமணிகளினுற் பதுமக்கோயிற்
பொன்னினிதினலங்கரித்து நாற் கிரட்டிமங்கலமும்பொருந்தச்செய்தார்.

அந்தமணி மண்டபத்திற் புகுந்து வடதிசை நோக்கி யணிகொள்பீடத்
திருந்துமுகவர மகளிர்பணிவிடை செய்திடுவன சத்திருவரோடு
சந்தமுறு கைலைமலை மாதர்வழிபடு வடுகன் சயமின் காளி
வந்தகங்காத்திட வயன் மாலுருத்திரர்கள் புறங்காப்ப மகிழ்வோடுற்றாள்.

நற்றவர்கள் போற்றி மகப்பிணி தவிர்ப்பத்தாய் மருந்துநனி தின்றாங்கு
சிற்றறிவினேம் பொருட்டுத்தவம் புரிதிநீயு முயர்சிவனும் வேறன்
றுற்றமண நீயவன் போதுனைக்கண்டா மவற்காண்பானுடையோங்காதல்
மற்றவற் காண்பருவமெமக்கென்றுறுங்கொலென் றுரைத்தார் வணங்கினாறு.

நிகரின்முனிமடந்தையர்களுமையவள்பால்நின்றுரைப்பார் நிலவெமன்னை
பகருமணி முடிக்கதிரு மொளிர்வதன மதியுமண்டப் பரப்பினெங்கு
மிகலுமிருட் கணமகற்றப் பரிதியெனத் திங்களென விளங்குவேறு
திகழுறுவதென் விசும்பிற் றிங்களின் முன்னுடுக்கணங்க டிகழ்வதென்ன.

வரித்தடங்க ணுலகனைத்தும் படைத்தளிப்பநான்முகனு மாலு மென்றோ
விரித்தவருட் கடல்சூழக் திரைக்கடலென் விளங்குகுண வெற்புநீடித்
தரித்திருக்கப் புவனமெலாம் பூதரமென் றிலகுபல சயிலமென்றோ
தெரித்திடுமிப் பொருளிவ்வா றிலங்கவிவள் விளையாடற் செய்தியன்றோ.

பரிவினுறு மிவடனைவிட்டொரு கணமும் பிரிவுபொறாப் பரனுக்காங்குத்
தரிதருங் கொவின்னு மிவணெய்தாத பரிசென்றோ தயங்குமீண்டு
வரியளிகள் சண்பகத்தேனருந்துகின்றதினைக்கரத்தால் வயங்குபொன்னி
விரிகதிர்ப்பொன்மணி யெறிந்ததுறவான பகையான விலங்கும் புள்ளும்.

சந்தமிகுந் தெதிரோ மக்கனலும் வலன்சுழித் தெழுந்த கரந்திடாது
சந்தமுறு மானினங்கள் பால்சொரிந்த களிநிறைந்த தண்காவெங்கும்
மந்தமருத் தினிதெழுந்த தினியகுறி யிறைவனிங்கு வருதற்கேது
வந்தனவென் றுரைக்கின்ற பூவைகிளி யென்றனர்கண் மகிழ்ச்சியெய்தி.

பாவுமொழி யிவையனைத் தும்பற்ற முழுதுலக ளித்தபாவை கேளா
விரவியெழுந் திடுஞ் சமயஞ்சில குறியா லறிகுதல் போலீண்டு வள்ளல்
வரவதுவுஞ் சிலகுறியா லறிந்தனர்களிவரொன்ன மனத்துட்கொண்டு
விரவுசிறு நகைசெய்து மகிழ்விெனாடு தவம்புரிய மேவலுற்றாள். ௩௧

பொன்னிநதி யிடத்தணைந்து புனல்படிந்து சந்திவினை போற்றிவந்து
பன்னிடு மைந்தெழுத்தோதிப் பூசனைக்கு வேண்டுவன பலவுங்கொண்டு
நன்னளினத் திருவர்களு முதவிடவை வகைச்சுத்தி நவிற்றியாரு
மன்னுமகத்திலும் புறத்தும் பரம்பொருளைப் பூசித்து வாழ்த்திப்பின்னர்.

மேவுதழ லிடந்தனிலும் வந்தனஞ்செய் தவியினிது வீசுங்காலைப்
பாவகன்வெய்தெனக்கொள்வன் றிருமுகத்திற்குருவெயர்வைபடு முனஞ்சி
தாவியிளைப்பகற்றிடுங் காற்றிறை யொருகாற் பதமலர்கள் தன்மீதுற்றாற்
பூவதென விருந்துமன மகிழ்ந்திடுவள் பூவென்னப் புகலுமன்னாள். ௩௨

இவர்களிவை புரிவனவும் பிறருமவரவர்க்கிசைந்த தியற்றுமாறுஞ்
சிவனதரு ளெவளவென நினைந்து பிறசெய்வனவுஞ் செய்துபின்னர்
மவுனநிலையடைந்து தனித்தியான முற்றாளிவ்வாறு வருங்காலத்து
நவநவமா யெழுந்தன்புநீட விறையவனருளும் நணுகிற்றன்றே. ௩௩

ஓதரியமறைப் பொருளாய்ப்பூரணமாய்த்தெளிவினிடையுதிக்குமொன்றாய்
பேதுருகேவல சகலந்துரிய மிவைகடந்ததுவாய்ப் பிரிவிலாதா [ப்
யாதிநடு வீறிலதாய்ச் சிற்பரமாய் நிற்குணமா யனுதியாகி
நாதமதின் முடிவினதா யிலங்குபரன் றிருவுருவை நண்ணிநின்றாள். ௩௪

அன்னைய சஞ்சலையாகிப் பரமசுகத்திடை நிற்கவமலமான [ளுள்
தன்னிதயத்திடை விளங்குஞ் சுடருருவாயெழுந்திறைவன் றயங்குமன்
முன்னமொவர்களுங் காண வெளிநின்று னீடண்ட முகடுகீறி
துன்னிடுமெச் சுடரினைவிவளவென விதிதனக்குஞ் சொல்லவற்றோ. ௩௫

வேறு.

இறுதியிற் பரமன் பதம்புகுந்துயிர்க ளியாவையு மொடுங்குவதென்ன
மறுவறுதவத்துப் பனிவரைக்கொடியு மாதவர்கணங்களும் பிறரு
முறுதிசையனைத்துஞ்சூழ் சுடரொளியி லொன்றினர் திசைகளும் பிறவும்
மறிகிலராகித் திகைத்தனர் நின்றாரம்பிகை தெளிந்தனள் பின்னர். ௩௬

விழித்தனர்விழித்தே நிற்றலு முகிழ்த்தோர்மேலு மந்நிலையினின்றிடலு
மழுத்தனிப்படையோ னெடுத்தபேரொளியின் வடிவமுனோக்கி நின்றி
றையை
வழுத்திமுன்னின் றுவிழிகொடுநோக்கும்வடிவுகொண்டருளுதியென்றாள்
மொழித்திறனிதனைக் கேட்டலுமெவர்க்கு முன்னவன்றிருவுளமகிழ்ந்து.

ஓங்கருள் வடிவமாகிய விலிங்கவுருவமதாக வோருருக்கொண்
டாங்கதனிடை நின்றெழில் கனிந்தொழுகு மவயவங்களு நனிமுடிக்கண்
வாங்கிளம் பிறையுந் தடக்கைமான் மழுவும் வரதமுமபயமும் பிறவுந்
தாங்கியோர் பவளமலை யெழுந்தென்னத் தயங்கொருவடிவு கொண்டெ
ழுந்தான். ௩௮

பரவிடுமிமையோர் சொரிமலர்மழைகள் பாரிடமறைத்தன நிதிக்கோ
னிருநிதி மழைகள் வரைக்குலமறைத்த வெண்ணில்கந்தருவர்க ளிசைக்குங்
கருவியினிசையும வியன்மிகு பூதகணாதிபர் துந்துபி முழக்கு
மருமறையொலியுந் துதித்திடுமோப்பு மார்கலிதனை மறைத்தனவே. ௩௯

உணர்வின் மிக்குயிர்க ளுணர்ந்திட வடிவுற்றுதித்தருளேக நாயகனு
மிணையின் மெய்யன்பி னுமையவள்காண வெதிருற மற்றவண் மகிழ்ந்து
துணைமலரடியிற் பணிந்தனர் தொழுது துதித்தனர் முனிவரும் பிறரு
மணுகினர் கமலமலரினை வனத்தினகற்றிய பதம்பணிந்தேத்தி ௪௰

பெருகுமானந்தச் சலதியுட்படிந்து பிறைக்கழுங்கண்ணியஞ் சடிலக்
கருமிடற் றிறையோன் வடிவெழிலமுதைக்கண்களா லருந்திமுன்னோங்
[கும்
பருவரற்பசி தீர்ந்துரைப்ப தொன்றின்றி பரவசமடைந் தெதிர்நின்றார்
கருதியதடையப் புரிதருமுயற்சி கனிதரு தவத்தின் வேறுண்டோ. ௪௧

வேறு.

பனிவ ரைக்கொடி யருந்தவம் புரிந்துநீள் பரிவின்
ம்முனிவ ரீசனைக் கண்டிடச் செய்தது மொழிந்தே
மினிய ரன்றனைத் தானருச் சனையினி தியற்றித்
தனிமை யுற்றிடு பெருங்கதை சாற்றுதுங் கேண்மின். ௪௨

தவநிலைச்சருக்கம முற்றும.

ஆ திருவிருத்தம் ௩௦௩.

௨

தம்மைத்தாமருச்சனைச்சருக்கம்.

மேக நாண்மலர்க் குவளைவெஞ் சிலைகுமிழ் மிலைந்தோர்
மாக மாமதி பூத்தபூங் கொம்பரின வயங்கும்
பாகு நேர்மொழி யுமைமுகம் பார்த்தக மகிழ்வுற்
றேக நாயக னருளுட னிவையன விளம்பும். ௧

தம்மைத்தாமருச்சனைச்சருக்கம்.

வண்ணவண் பிறைநுதல் விரிமதர் விழிவந்தீண்
டெண்ணின்மாதவ மியற்றிமெய்யிளைத்தனை போலு
நண்ணுமுத்தமிழ் முனியுரை பயன்பெறநாமு
மண்ணலுற்றனை முருவுகொண் டருந்தவர் மகிழ.

இருந்திடும்பர்முன் பாலிடைநெய் யெனததிகழா
திருந்திடெந்தமைக் காட்டினை யெளிமையாய்ப் புவியோர்க்
கருந்தவம்புரிந் தவரிடத்தன்பினா லதனைப்
பொருந்துறக் கடைந்தெடுத் தெதிர்வைத்ததுபோல.

புவனமெங்குநின் மகிமையே பொருந்திட நிற்பாய்
தவமியற்றிய செல்விதஞ் சார்ந்தெவணிருந்தா
யவணருந்திய தெதுநமைப் பிரிந்தனையதன்பி
னுவகைபூத்திடு மனத்திடை நினைத்த தீண்டுளதோ.

நாமகிழ்ச்சி யுற்றன மினிநவில் வரமாக
நாமமிக்க சீர்கைலையை நல்குவோ மென்னி
னீமகிழ்ந்துறைந்திடுமது நின்னதே யாகு
நீமமுற்ற செல்வங்களு நிற்குநின் னேவல்.

மாயைநீக்குவமெனில் வித்தைவடிவ நின்மேனி
மேயகாமமாதிய பகைவிலக்குவ மென்னி
லாயவுட்பகை யுனக்கிலை யன்பினா ரெவர்க்கும்
பாய வின்பமு முத்தியும் பரிவினீ தருதி.

மற்றுநின்றனக் கியான்றரு வரமொன்றுமில்லை
யுற்றிடுன் மொழியருமை யுட்கொண்டு நாமுவப்பா
னிற்றைநந் தமக்கொரு வரந்தருதி நீயென்னக்
கற்றைவார்சடை யவன்சொலக் கவுரிமிக்குவந்து.

வேறு.

சங்கர நீலகண்ட சம்பகவனேசநீடு
பொங்கர வணிந்தவேணிப் புண்ணியமூர்த்தி யெங்குந்
தங்கர வுலகநாத சம்புவே மறிமானேந்து
மங்கர மருதினீழ லமர்ந்திடு முதல்வபோற்றி.

மன்னுற வுணர்வையாவு மற்றினியெனைவினாத
லென்னையான் வினாவிலுண்மை யிசைத்திட வேண்டுமென்றே
பன்னுறு பரமானந்தப் பரவையுண் மூழ்கியாங்கே
துன்னிநின் றதனைத்தானே தொடர்ந்தினி தருந்தல்செய்து

வாசகமனத்திற்கெட்டா மறைத்தனிப் பொருளாயோங்குந்
தேசினைப் பொருந்திடன்பிற் செழுமலராதிகொண்டு
பூசனை யகத்தினுள்ளும் புறத்துஞ்செய் திருந்தேனுன்பா
னேசமிக்குடையராகி நிலவுநின்னடியரென்ன.

நினைத்ததை யுளதோவென்றாய் நினைப்பன்யான் மறைப்பினியம்
மனத்திலீ துணரவந்து வதிந்ததூஉ மறிவேனன்றாய்
வினைப்படு தவஞ்செய்காலை விளங்கிராப் பகலேகாணே
னெனைத்தனி யின்றுகண்டே னுனைமுன்னு மின்றுங்கண்டேன். ௰௧

சாற்றிடு விசும்பினூடு தம்பித மாகிநிற்குங்
காற்றெனு விரவியின்பாற் கலந்திடு திங்களென்ன
போற்றிடங் குன்பானின்றே னெனவுமை புகலலுற்றாள்
மாற்றமின் னவைகட் கண்ணால் மகிழ்ச்சிகூர்ந் திசைக்குமன்னோ. ()

ஆற்றுநின் றவத்தினுண்மை யறியவே யின்றுகாறுந்
தோற்றிடா திருந்தேன்கண்டே தோற்றினஞ் சோதியாகச்
சாற்றிடுமினையசோதி யுருவமா மிலிங்கந்தன்னைப்
போற்றிடு மெவருங்காண வீண்டுநாம பூசிக்கின்றோம். ௰௩

கற்பகம் வாளாநின்று கருதிய துதவுமாபோற்
றற்பர மாகிநீடு சயம்புவா வினிதுமேவும்
பொற்புறிவ் விலிங்கந்தன்னைப் பூசனை புரிதற்கெண்ணி
முற்படு பொழுதிற்றானே முற்படு வினைகடீர்ப்பாம். (௰௪)

அகத்துறு மன்புநீட வருச்சனை யொருநாட் செய்யி
னிகத்தினிற் கல்விசெம்பொனெழின்மனை மனைவிமைந்தர்
தொகுத்திடு சேனை நாடு தொடர்வளம் பிறவு மெய்தி
பகுத்திடு பாசந் தீர்ந்து பரமுத்தி யடைவர் மன்னோ. (௰௫)

தெரிசனஞ் செயினு மோர்காற் றீயபா தகமென் றோதுந்
துருசுக ளவையுந் தீயிற் றோய்ந்தநுண் பஞ்சி யென்ன
விரிசுட ரிரவி தோன்ற வெவ்விருட் குலங்க ணீங்கும்
பரிசென வகலு மாங்கே பகையொடு பிணியுந் தீரும். (௰௬)

எண்ணிய பொருள்க ளியாவு மெய்திடு மென்ன வோதி
யண்ணலம் மூர்த்தி யின்பா லணுகினன் புவன மீது
வண்ணமென் மணிப்பொற் பீட மகிதல மடந்தை யீந்தாள்
விண்ணவர்க் குரிய தச்சன் வெயின்மணி விமான மீந்தான். (௰௭)

இரணிய கருப்பன் முந்நூல் பவித்திர மணைவுற் றீந்தான்
வருணனன்மிக் குவந்து தீர்த்த மணித்தசும் பேந்தி நின்றா
னருணமூ ரனில தேவ னணிமலர் வருக்க மீந்தான்
றெருண்மலி சோமன் றாழ்ந்து சிறந்தபட் டாடை யீந்தான். (௰௮)

தடமுறு மலைய வெற்புச் சந்தன முதவிற் றாங்கே
வடதிசைச் செம்ம லீசர் மணிக்குலக் குவைக ளீந்தார்
திடமுறு வன்னி தூப தீபமும் விரைவி னீந்தா
னெடிதுபா றயிரன் னாதி புவனேசை நிறைத்திட் டாளால். (௰௯)

மருவுவெள் ளிலைகா யாதி மகபதி யினிது நல்க
நிருதிதண் குடைகண் ணாடி நிலவுறுகவரிவீசப்
பரிதிகண் மகிழ்வினெங்குஞ் சுடரிடு பணியினிற்பக்
கருதிடுமியமன் சேனை திசைதொறுங் காவலாற்ற. (உ

மந்திர மறைக ளோத வசுக்கள்பல் லாண்டு கூறத்
தந்திரர் கீதம் பாடத் தவமிகு முனிவர் வாழ்த்தச்
சுந்தர மகளி ராடச் சுரர்குல மலர்க டூவ
முந்துறு பூத நாதர் தூரிய முழக்கஞ் செய்ய. (உ

தருபவர் தருவ யாவுந் தடக்கையின் வாங்கி நல்கித்
திருவளர் மார்ப னண்ண லேவின செய்து நிற்ப
வருமறை யாக மங்க ளறைதரு விதிகொண் டந்தப்
பொருவரு மூர்த்தி தன்னைப் பூசையங் கினிது செய்து. (உ

ஆங்கதன் பின்ன ரேவ லாற்றிய வமரர்யார்க்கு
மோங்கிடு வரமு மன்னோ ருலகமு மருளிச் செய்து
பாங்குறு மிமய வல்லி பங்கய வதன நோக்கித்
தேங்கிள முறுவல் செய்யத் தேவிநே ரின்ன சொல்வாள். (உ

பொன்னிறக் கடவு ளாதிப் புலவரும் பிறரு மெய்தி
நின்னையர்ச் சிப்ப தன்றோ நீதி யிந்த மூர்த்தி
தன்னிடை யெவரைப் பூசை புரிந் தனை சாற்று கென்றாள்
முன்னவன் கருணை யுற்று மொழிகுவ னெவருங் கேட்ப. (உ

ஓதுமர்ச் சனைசெய் தோனு முகந்தது கொண்ட தேவும்
போதுறு கோதை வேற்கட் பொற்றொடி நாமே யாகு
மேதுவென் னம்மை நாமே யருச்சித் தற் கென்னி லிந்த
மாதவர் நமைப்பூ சித்தன் மறந்தீண் டறிதற் காமால். (உ

என்னவோ திடலு மன்னை யிமைத்திடோர் குழுவுங் காண
நின்னரு ளுருவந் தனையை நிகழுமா தவர்க்குக் காட்டி
முன்னதைப் பூசை செய்யு முறைமையுங் காட்ட லுற்று
யன்னவ ரிடத்தி லுற்ற வளவிலாக் கருணை தன்னால். (உ

அவர்களை நோக்கி மேலுன் னருட்டிரு வாக்கி னாலு
முவகையிற் படுத்த வேண்டு முரைக்குமுன னதுவு நீயே
நவிலுவை யெனினுமி யானு நண்ணுவ ரிடத்தன் பாலுந்
தவநின துரிமை யாலுஞ் சாற்றின னென்றாண் மன்னோ.

வேறு.

சத்தியிது மொழிந்தி டலு நித்தனுவந் தருந்தவர்க டம்மை நோக்கிப்
பத்தியெனுங் கற்பகமொன் றுங்களிடத் திருந்தெலையும் பயக்கு மாற்(
னத்தனயன் றனக்கரிய நம்மையுங்கட் கழைத்தெளிதி னல்கிற் றன்ன
தெத்தகையோர்க் குளதவர்கட் கெளியமியா மவர்வேண்டு மெலையு
வோம். (உ

என்றிறைவ னிசைத்திடலு முனிவரெங்கடகு மதிடத்தி னிலகுப
த்தி, அன்றிடச்செய் வதுவுமதைக் கொள்வதுவுங் கொண்டுவினைத்துயரி
னீக்கி, நன்றிதரு கருணைபுரிந் தருளுவது மியாமையுநீர் காங்க ளிங்கே,
யொன்றுமுணர்ந் திலமெமைநீ ரன்புடைய ரென்றதனா லுயர்வுபெற்றோம்
எங்கடமக் குமதுதெரி சனங்கிடைத்திட் டதற்கெழில்கூ ரிமயச்செல்வி
துங்கமுறு கருணையுமத் தமிழ்முனியு மேதுவெனச் சொல்ல லாகு
மிங்கணினி தெனவுரைத்தா ரிறைவன் மகிழ்ந்தரியதவ மியற்றி னோர்க்கு
மங்குவறி திருந்தவர்க்குங் கல்விசெல்வ மெனும்பொருள்க ளருளிச்செ
ய்து. (௫௰)

முன்னமிருந் தமிழ்மலையக் குறுமுனிவன் பலன்றருவோன் முக்கணனே
யென்னவுங்கட் கிசைத்த துண்மை யாயினதே யின்னமுமக் கியாதுவே
ண்டு, மன்னதுவுங் கேண்மி னென்று னவர்களெல்லா முமதருளே யடி
யோங்கட்குத், துன்னுசிவ ஞானமினி வேண்டுமஃ துதவுமிடுஞ் சொல்
க வென்றார். (௫௧)

எண்ணலுறு பிரணவத்தின் பொருள்வடிவா யிலங்குமிந்த விலிங்க
மேனின், றண்ணலுறு மெய்யறியுஞ் சிவஞானம் பணிந்தோர்கட் கரு
ளிச் செய்யுந், திண்ணமுறு மஃதுமக்குங் கொடுத்திட்டோ மெனப்பரம
ன் றெரித்தா னந்தப், பண்ணவர்கள் பிரணவத்தி னுருவுமென்றீ ரதன்சி
றப்பென் பகர்கென்றார்கள். (௫௨)

முனிவரிது பகர்ந்திடலுந் தனிமுதல்வன் புகல்கிற்பான் மொழிதுங்
கேண்மி, னினைவரிய குடிலையெனும் பிரணவமீண் டோருருவாய் நிகழு
மேனும், வினைவனசத் தவனவனைத் தந்தவனு மெனுமூவர் வடிவமாகு
மனையதிற லுடையதுநந் தமைப்பிரியா திருக்கின்ற தநாதியாக. (௫௩)

ஆதியினிற் போதகத்தி லுறைந்திடுவோ னொருவேள்வி யாற்றற் கெண்ணி
வேதமுடி வினைக்குறித்தா னதுசிறிதுந் தோன்றிலதால் விளங்கக்காண்
பான், மாதவஞ்செய் தனன்வெகுநா ளுமைக்கருதி யாமவன்முன் வயங்
கத்தோன்றி, யோகிமெந் திரங்கடமக் குயிராகும் பிரணவத்தை யுபதே
சித்தோம். (௫௪)

மலரின்மிசை யிருந்திடுவோன் முகத்தொருவன் பிரணவமாம் வாரி தன்னை
யுலவுமதி மந்திரத்தாற் கடைந்திடலும் வியாகிருதி யுதித்த தாங்கே
யிலகிடுகா யத்திரியன் னதிற்றோன்றிற் றதிற்சுருதி யெழுந்து நின்ற
தலகில்புக ழுறுமதனிற்கா ரணர்மூவருந் தோற்ற மாகினார்கள். (௫௫)

தோற்றமுறு மூவரையுங் கொண்டுநினைந் திடுவேள்வி துலங்கச் செய்தா
னாற்றிமேற் றதினுலக மேழிரண்டும் வடிவினுட னமையத் தோன்றிற்
றேற்றமுறு மனையதெரி சனத்தினாற் சிவஞான மெய்திற் றுங்குப்
போற்றுமத னலெமது தெரிசனமன் னவற்கினிது பொருந்திற் றம்ம. ()

ஆதலினாற் பிரணவமே நமையறிதற் கேதுவென வறைய லாகு
மேதமறு முத்திதனைச் கொடுப்பதுவு மஃதேயா மிதனைக் கூறு
மாதவர்க்குச் சோகமொடு மோகமுத லானவையு மருவா தென்று
ஞாதனிது மொழிந்திடலு மருந்தவத்தோர் மகிழ்ந்திணையநவில்கின்றார்கள்.

தேசுறுமிவ் விலிங்கமதின் மான்மியமிங்கெமக்கெவையுந்தெரிந்தவின்னும்
பேசுபுக ழுலகினிடத் திலிங்கவடி வொன்றேயோ பிறவு முண்டோ
பூசையுகந் தருள்புரியு மூர்த்தியுள தேலதுவும் புகல லுற்று
நேசமுட னிறைபூசை புரியுமுறை யையுமுணர நிகழ்த்துகென்றார். (௧௮)

சேவுயர்வெல் கொடிப்பரமனிசைத்திடவா னெமைப்பூசை செய்வதற்குப்
பாவனையும்வடிவமனைப் பற்றுமிக வுறுமதமும் பகருநூலு
மேவலுறு மனந்தவிதம் வைதிகந்தாந் திரிகமிவை விரவலென்ன
மூவிதமுற் றிடும்பூசை யவற்றுள்ளு மனந்தவித மொழியுங் காலே. (௧௯)

விரிந்திடிவற் றியாதேனு மொருவடிவி லொருவிதியின்மேவும் பூசை
புரிந்தவர்கள் சிவன்முதசராவ ரொந்தவடிவினிடைப் பூசித்தாலும்
பரிந்துசில வின்றியமையாதவெனக்கொள்கென்று பகருநூல்க
ளெரிந்திடமற் றவையு முங்களிடத்தினில் வைத்திமென்பாற் செப்புகின்
றோம். (௨0)

காலைநறும் புனன்மூழ்கிச் சந்திமுடித் தருச்சிக்குங் கவினுளெய்தி
யேலுமெழுத் தஞ்சோதிப் பஞ்சசுத்தியும் மியற்றி யிதயந்தன்னிற்
சீலமுடனருச்சித்துப் புறத்துமொரு வடிவினருச்சித்தல் செய்வான்
சால்பினெமையதனிடையா வாகனதாபனங்களினாற் சாரச்செய்து. ௨௧

பாத்தியத்தோ டாசமன மருக்கியமீந் தபிடேகம் பரிவிற்செய்து
வாய்த்ததுகிலொடு சாந்தங்கூவிள மொண்மலர்க ளிவைவயங்கச் சாத்திக்
கூர்த்தவெழி லனமாதி நிவேதித்துத் தூபாதி கொடுத்திறைஞ்சித்
தோத்திரஞ் செய்திடலாகுமவையினையநியமமதாய்த் தொடங்கவேண்டும்.

செல்வமுட னாற்றலுடையவர் புரிபூசையிற் குறைவு செய்திட்டாரேல்
நல்குரவெய்திடு மெவருமவரவராற்றலுக் கிசைய நவிலவேண்டுஞ்
சொல்லுறு மன்பொடு பூசைபுரிந்தவ ரெண்ணின்பமெலாஞ் சுகித்து
வாழ்ந்து, மல்லலுறு சாத்தியமாம் பேரின்ப மினிதடைவர் மறுமைக்கண்
ணே. ௨௩

பூசைபுரிந் திடுபவர்க ளெவரேனுஞ் சுகர்களெனப் புகலுநூல்க
ளாசையுட னஃதியற்றா ரெவரேனும் விலங்கொடு புள்ளனையராகுந்
தேசுறுநந்தமைப்பூசை யொருமலராயினுங் கொண்டு செய்வோர்கட்கு
வீசுபுகழ் விரதமொடு தவந்தருமம் வேறொன்றும் வேண்டலின்றே. ௨௪

துன்றுபுகழருச்சனை செய்தவர் பெருமைதனை யெவரே சொல்லவல்லா
ரொன்றுசுடர் விழிநுதற்செஞ்சடைக்கடவுளிசைத்திட்டா னிமையோர்தா
நின்றவகத்தியனாதி முனிவரரும் பூசிப்பா ணிதமுமெண்ணி [மு
யின்றிறைவற் காலயஞ்செய்திடுகவென மயனையழைத் தியம்பினார்கள்.

என்றுரைத் திடலு முரோமச னுக்கி யியம்புவான் காகமே வருதி
மன்றநீ முனியோ தேவனோ வன்றி மாயையோ பறவைதா னேயோ
துன்றவெற் கறைதி யாவெனக் காகந் துரிசுறு மனமுறப் பகையை [பும்
வென்றிடுமுனிவர்தலைவமுற்றுணர்ந்தோய் விளம்புவன் கேட்டியென்றியம்

ஆதிநான்மறையோன்சுருதியாக மங்களருங்கலை புராணமுற்றுணர்ந்தோ
ன், கோதிலாச்செல்வமுடையவனொருநாட் கோளராப் பரிதியைவிழுங்கி
ற், றூதிடக் காலை யெவருநற் றீர்த்தத் துவப்பொடு நானமுன் னியற்றி
மீதியன் றிடுநற் றானமுஞ் செய்தார் வெவ்வினை செய்தன னெளியேன்.

நற்றவ முனிவோர் மனிதர்க ளிமையோர் நல்வர மேற்குநாளுமுன்னர்ச்
சுற்றினை றரக்க ரொங்கட்கென் னென்னச் சுடர்க்கனுன் கதிர்தனையரவம்
பற்றிட லாது புண்ணிய தினத்திற் பரிந்துசெய் தவங்களா திகட்கோர்
குற்றமெய்திடிலங்கவற்றினைநீவிர்கொண்மினென்றிசைத்தநாடிந்தெரியும்

புண்ணிய முயர்த்து மெவரையும் பாவம் புகைந்தழ னரகில்வீழ்த்துழலப்
பண்ணிடு மெனவுஞ் சிறியவர் பெரியோர் பாங்குறிற் றுங்களுமபெருமை
நண்ணுவ ரெனவு மன்னதற் கேது நற்றவர் தருமமே யெனவு
மெண்ணமுண் டேழ்வந் துற்றிடி லதனை யாவரோ விலக்கிடப் பாலார்.(௰௨)

அறந்தொடர்ந் திலர்பாற் பாவமுந் தொடரி லங்கவர் தேவரோ யெனினுந்
துறந்தவ ரெனினும் வாய்மையும புகழுந் தூய்மையு நிலைமையு மதியும்
பிறழ்ந்திட மயக்கி யாவரு மிகழப் பெரிதலைத் திடுமெனி லென்னை
மறந்துவிட்டிடுமோதனியனேனிழைத்த வல்வினையென்னவாங்கென்னில்

நானுமங் கணைந்து நவில்கட னவையு நவிற்றியோர்மன்னவன்றன்பாற்
றானமேற்றுடனேமற்றையோர்மன்னன்றன்னிடத்தினுமணைந்தேற்றேன்
மானவே லன்னோன் குறிப்பிலென் னூரத்தின் மருவுசந் தனத்தினைநோக்கி
யீனமின் றிதற்கு முன்னுமேற் றனைகொ லென்றன னுண்டென விசைத்
தேன். (௰௩)

கடுத்தகந் தோறு மணைந்திலா கவருங் காகமே யொத்துமுன் னொருவ
ரிடத்தினேற் றுடனென் னிடத்துமேற் றதனு லிலங்குநீகாகமாகென்னக்
கொடுத்தனன் சாபங் கரகநீர் தன்னைக் கொண்டுநா னவன்றனைச்சபிக்கத்
துடித்தன னவன்றன் புரோகித னென்னுஞ் சுசங்கிய னெனைப்பணிந்து
ரைக்கும். (௰௫)

என்னிழைத் திடுதி யையநும் வினையா லிங்ஙனம் விளைந்தது னுனக்குப்
பின்னரு மொருநா ளினிவிரண் டிடத்திற் பெற்றிடு தானவல் வினையான்
மன்னவன் சுபியா திருக்கினுங் காக வடிவுனக் கெய்திடு நீமற்
றின்னது சபியா தெதிர்சபித் தனையே லிவ்வுரு வொழிந்திடா தென்றும்.

அருள்புரிந்தெதிர்நீ சபித்திடா தொழியி லறைந்திடோர் புண்ணியதீர்த்தம்
மருவுற வகலுங் கடிதினிற் பின்னர் மழுவலான் கருணையுங் கிடைக்கும்
புரவல னுன்னைச் சபித்ததாற் றானம் புரிபலன் பொருந்திடா தொருந்
தெருளுறு மரச னிலகிடி லுலகஞ் செழிக்குமென்றுன்சினம்விடுத்தேன்.

நின்றனன் காக வடிவுபெற் றனன்முன் னினைவொடுஞ்சொரிகண்ணீருட
னும், குன்றமும் வனமு நாடுநன் னகருங் குழுவுறும் பறவைக ளோடுஞ்
சென்றடைந் திடுவன் றீர்த்தங்கள் படிவேன் றிகழ்வுறு காய்கனிகோயில்
முன்றிலி னுதவு பலியருந் திடுவேன் முயல்வனிவ் வாறலைந் துழன்றேன்.

இற்றைநாண் முன்னர்த தவஞ்சிறி துளதா லிவ்விடை மருதில்வந் தினைய
பொற்றனித் தீர்த்த மூழ்கினன் வடிவம் பொன்னெழி லுருவதாயிலங்கப்
பெற்றன னின்னைக் கண்டிறைஞ் சிடவும் பெற்றன னின்னதென்னியல்பு
மற்றுனைக் காணப் பெற்றதாற் கதியுமருவுமே லென்பதூஉந் துணிந்தே
ன். (௰௯)

பிறரினுக் கின்னா முற்பக லியற்றிற் பிழைத்திடா தவ்வினைத் தாமே
வுறவருந் தமக்குப் பிற்பக லெனலா லுற்றிடத் துயரினை யருந்துந்
திறனெனி தலவே யென்றதைச் சிந்தை செய்துதற் காத்திட மதித்தோ
ரறைதருஞ்சினமும் பிறர்பொருள் கவரு மவாவுநன கவிதிட வேண்டும்.

எனவிரித் துரைத்த துரைத்திடு மேல்வை யிறையவன றிருவரு ளதனாற்
றினகர கோடி நிகரொரு விமானந் தேவர்தங் கணத்தொடுங் கெய்த
வினைதவிர் காக மவ்வுரு வொழித்துவிளங்குநாற் றோளுட னிலங்கு
தனிவிழி நுதல்பெற் றுருத்திர னாகிச் சார்ந்திடு விமானமீ தேறி. (௨௧)

வந்தர மகளி ரெதிர் நடம் புரிய மருங்கெழிற் கவரிக ளிரட்டத்
துந்துபி முழங்கக் கணதிபர் சூழச் சுரர்கண மலர்மழை சொரியச்
சுந்தர வதன வனிதையோர் பாகன் றுணைமலர்ப் பதமுளத் திருத்தி
யந்தமி லின்ப மருவிநீள் கைலை யடைந்துவீற் றிருந்தது மாதோ. (௨௨)

திருத்தகு குடபால் வீதியிற் குணபாற் றிகழ்ந்திடு தடத்தினிற் காக
மருத்தியிற் படிந்து தமனிய வடிவா யணிமரு திடத்திருந்ததுவும்
உருத்திர னாகிக் கைலையின் விமானத் துற்றதூஉம் வியப்புறநோக்கிக்
கருத்தினி லடங்கா மகிழ்வொடுந் தவத்தோர் கணத்தொடு முரோமசனி
ன்றான். (௨௩)

இத்தகைத் தாமோர் காகமத் தலத்தி னிலங்கிடு மநில்திக் குறையு
முத்தம தீர்த்தம் படிந்துபொன் னுருவுற் றுருத்திர னாகிய வளமை
சத்திய ஞானா னந்தமே வடிவாய்த் தயங்கிடு முரோமசன் பின்னர்
நித்தியன் றன்னைப் பூசைசெய்திருந்த நிகழ்ச்சியுஞ்சிறிதெடுத் திசைப்பாம்.

காகமான்மியச் சருக்கம்

முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௩௰௧.

உரோமசச் சருக்கம்.

ஓதுமா யிடை நின்றுபின் னுரோமச முனிவன்
வேதநா யகன் கோயிலின் மேவலுற் றிடுங்காற்
கீதவோ சையுந் தூரிய முழக்கமுங் கேளா
மாதவத் தினோர் குழாத்தொடும் வல்லையுட் புகுந்தான். (க)

தங்கு பற்பல தீபமும் விதானமுந் தாழ்வில்
கொங்கு லாமலர்த் தொடைகளுங் குலவுதோ ரணமு
மெங்கு முற்றிடக் கண்டன னவனையுங் காணான்
பொங்கு மற்புதந் தொளிபொற் சுடரிடைப் போனான். (உ)

அண்ணலா றன்னையர்ச் சனைபுரிந் திருந்திடு மழகுங்
கண்ணி னோக்கினன் முடிமிசைக் கரமலர் குவித்துப்
பண்ணி னீடிய துதிபல பணித்தனன் பணியா
வுண்ணெ கிழ்ந்திடப் புளகித முற்றன னுடலம். (ங)

எனையு நின்னடிக் கடிமையாய்க் கோடியென் றிரந்து
தனை மறந் துநின் றொருவகைபுரஞ் சார்ந்தா
னினைய வற்புத மெவர்க்குங் குணர்த்துவ வொன்னு
நினைவு தன்னொடு நிற்பவ னிமலனை நினைந்தான். (ச)

செய்ய மேனியிற் றுகள்வெண் ணீற்றொளி திகழத்
துய்ய வேத்திரஞ் சுரிகை ... மழுவொடு துலங்குங்
கையன் முப்புரி நூலினன் ... றுறு நுதலா
னைய னந்திநா யகனணை வுற்றன னவன்முன். (ரு)

மருவு நந்தியைப் பணிந்தெதிர் முனிவரன் வாழ்த்தித்
திரும லிந்திடு மினையபொற் சினகரந் தன்னி
லொருவர் தம்மையுங் காண்கில மென்னென வுகந்து
தரும மாதவ கேளென மற்றவன் சாற்றும். (சு)

சிருட்டி யாதியீண் டைந்தவஞ் செய்தன ளவடன்
பொருட்டி யானவையு மாகிய புனிதனோர் மூன்று
திருட்டி யானெதிர் தோன்றினன் றேவர்மா தவர்கட்
கருட்டி யாகமும் வரங்களுங் கொடுத்தினி தமர்ந்தான். (எ)

சம்ப கத்தனி வனமது சாற்றுமக் காலை
கும்ப சம்பவ னாதியாந் தவத்தினோர் குழுமி
யெம்பி ரான்றனை நியதியாற் பூசனை யியற்றி
நம்பினோ டிவ ணிருந்தனர் நடந்தன பலநாள். (அ)

ஆய காலையி லந்தண் மாதவர் சிலரணைந்து
பாய வேலையுண் டவன்றனைப் பணிந்துநீ யெளியேந்
தூயர் போற்றிடுஞ் சுவேதகா னத்திடைத் தொடங்கு
மேய வேள்வி நோக்கிட வரவேண்டுமென் றிரந்தார். (கூ)

விந்த மாய்த்தவ னுலகெலாம் விளிந்திட வரினு
மிந்த மாதலந் தன்னைவிட் டகன்றிடே னென்றான்
வந்த மாதவ ரீசனை வணங்கிநின் மகத்திற்
கந்த மாங்குறு முனிவனங் கணைந்திடு மென்றார். (ய)

பரம னன்பொடு மகத்திய படர்திநீ யென்று
விரவின் மீதெமைத் தொழுவிவண் மேவுறு நாளுன்
வரவு பூர்த்தெதிர் நிற்குது மென்னலும் வாழ்த்திப்
பொருவின் மாதவ ரொடுமவண் போயின னங்கே. (யக)

வேறு.

குரவ ரின்மையாற் சிலபக லகன்றிடக் குலவுமிந் நாட்டிடை நீடுஞ்
சரியை யாதிநாற் பதத்தொடும் நடந்தன சைவவை திக மெல்லா
மிரவி நீங்கிடத் திருடருங் கூகையு மிலங்கலொத் துலகெங்கும்
பரவ லுற்றனர் ஞானசூ டன்முதற் பவுத்தர் சிவகர் மாதோ. (யஉ)

மதியி ழந்துநின் புலிக்கொடி நிருபனு மருவிட மதமுற்றான்
பொதிய வெற்பனீ தறிந்துவந் தவன்றனைப் பொருதுவென் றுவப்பெய்தி
மதுரை யுற்றினி திருந்தன னவனையும் வளைந்த சமணர்குண்டர்
விதியை வெல்குவ தெளிதுகொ லவனுமவ் வினைஞ ரொடுசேர்ந் தான்.()

பாண்டி நாடனு மமணரின் மூழ்கிய பரிசுதேர்ந் தொரு வேடன்
றாண்டு சேனையோ டெய்திவெம் போர்செயத் தோற்றுமீ னவனோடிக்
காண்ட மூற்றொளித் தானமண் குண்டருங் ககழ்வுகொண் டவன் பின்ன
ராண்ட ணைந்தன ருலகிய வித்திற மாகமுற் றியதம் மா. (யச)

இங்குமுன் னரசன் சமணர்தங் குழுவொ டியைதனு மீசனைப் போற்றி
யைங்கரக் கடவுள் சங்கர சிருட்டி யாகிய வடியினிற் றனே
யெங்குமிவ் வுலகி லமணர்தங்குழாங்க ளியைந்ததென் னிருபனுமதிகெட்
டங்கவரான தென்கொனின் பூசை யருகிய தென்னென வினவ. (யரு)

முன்னவனவனை யருகழைத்தணைத்து மொழிதரு முச்சிமோன் றருள்கூர்ந்
தின்னண நமது சமயவாற் றலினை யெவர்களு முணர்ந்திடச் செய்தோந்
துன்னுமிவ் வமணர்தமையெலாம்வென்று தொலைத்திடவருஞ்சிலநாளின்
பின்னர்நம் மிடத்தி லன்பினிற் றுதியிற் பெரியனுஞ்சிறியனீங்கொருவன்.

அருந்தவ முனிவ னொருவனீண் டணையு மவனெமை யருச்சனை புரிவன்
பொருந்துற மீதென் றவண்வருந் துணையும் பூசனை புரிதிநீ யனைய!
திருந்திடு தவத்தோன் வழிபடுங் காலோர் சென்னியிப் புவிதனக்கினிய
விருந்தென வருவன் வந்துநம் பூசை விளக்குவ னெங்குமித் தலத்தும். ()

நீயிதற் கிரங்க லெனவகுத் துரைத்தா னீடுறு துதிக்கையோன் மகிழ்வுற்
றேயுமத் தினந்தொட் டருச்சனை புரியு மென்றன னுரோமச னுவகை
மேயின னாகிப் பூசனை புரியும் விதஞ்சிறி துரைத்திடு கென்றுன்
மாயிரு குணிக்கும்வேத்திரப்படையோன் வகுத்ததுமொழிந்திடுமென்றே

தினந்திகழ் நியதி யாய்மறைப் பொருளாய்ச் சிறந்திடுஞ்செழுத்தினி தறைந்து, மனந்தரு பொருள்கொண் டகிலகா ரணனை மானத பூசைமுன்னியற்றி, யனந்தரம் புறத்து வேண்டிடும் பொருள்கொண் டவனியோ ரறிந்திடா வண்ண, மினந்தரு கணங்க ளேவல்செய் திடநின் றிசைத்திடு பூசனை புரியும். (௰௯)

ஆதலான் மனித ரில்லையிங் கிறைவ னவன்செயும் பூசனைக் குகந்து
கோதில்சீர்வரங்கள்வேண்டியதளித்தான் குலவுமைங்கரனுமுண்மகிழ்ந்து
நீதிமன் னவர்க ளின்மையாற் றனது நீடருள் கொண்டுயிர்த்தொகுதி
யோதிடுந் துயருற் றிடாவகை யினைய வுலகையுங் காத்தினி திருக்கும். ( )

இந்தநன் னிலத்தின் கருப்பொருண் மருத மெனச்சொலுந் திறத்தினுலென்றுஞ், சந்தமுற்றிடுமென்னதுசிலசூழத் தழைந்துறைதகமையோர்ந்தீண்டு
முந்துவெண் கைலை வந்தொரு மருதாய் முன்னவன் புடைநிழல்விரித்துச்
சுந்தர மருவி நின்றதிப் பொழுது தொடர்மரு தடவியா யினதே. (௨௧)

இன்னுமொன்றிசைப்பன்பவுத்தரோடியையவுற் றிப்பொழுதுலகினைப் புரக்குஞ், சென்னிதன் குலத்துத் தருமசே னனுக்கோர் சிறுவனுற் றிடுஞ்சில நாளி, லன்னவன் றரும வடிவமே யனையா னவனைவிக் கிரமனென் றெவரும், பன்னுவ ரவனிவ் வுலகினைப் புரக்கும் பதத்தினி லிங்ஙனம் வருவன். (௨௨)

துணையிலா வரசன் றன்னைநீர்வீர சோழனென் றணிமுடி கவித்து
மணிவளர் மிடற்று மருதநா யகன்றன் வளமையுஞ் சிறிதிசைத் திடுவீர்
கணிதரு மவனீ ரிசைத்திடு வண்ணங் கதிர்மதி வேணியன் றனக்குப்
பணிவிடை புரிவ னீருமித் தலத்தே பயிலுறு முனிவரோ டிருந்து. (௨௩)

நற்றவம் புரியி னிறைவனும் விரைவி னண்ணிவேண் டியவர மளிப்பன்
சொற்றமிழ்முனிவனென்னவித்தலத்தைத் துலக்குவீரொன்றிசைத்தகன்று
ன், குற்றமி றவத்து முனிவனச்செம்மல்குளிர்மலர்ப்பதம்பணிந்துவகை
யுற்றுநீடிறையோன்கோயிலின்வடபாலுறையிடந்தழையினொன்றமைத்து

.ஆர்புனை வளவர் நாட்டினிற் கால மறிந்துவந் துதவிடும் பொன்னி
நரின்முப் பொழு....ம் படிந்தவ ணியற்று நியதிக ளியாவையு முடித்துச்
சீருறு மலர்மஞ்ச...திகொண் டிலங்குஞ்செய்யபொற் கோயிலின் மேவிக்
காருறு மிடற்று மருதவா ணனையுங் கணநிபன் றன்னையும் பணியா. (௨௫)

ஆய்தருஞ் சுருதி யாகம விதிகொண் டருச்சனைபுரிந்துசென்றினிய
காய்கனி கிழங்கு கிடைத்தன வருந்திக் கௌரிதன் றொடும்வட நீழல்
மேயசீர்க் குரவனாகியெம் மிறையோன் வெளிப்படக்கருத்தினிற்குறித்து
தூயருந் தவத்தி லுறைந்தனன் பன்னாள் சூழ்முனி வருந்தவத்துறைந்தார்

பயிலுமத் தவத்தி னிறைவனுற் றிடாத பரிசுகண் டொயுணர் வின்றி
யியலுறு சுவாச மதனையு மடக்கி யிசைத்திடு நிருவிகற் பமதாம்
வியலுறு சமாதி யடைந்தொரு தம்ப மேவிய தெனவிருந் தனன்பின்
மயலொடு வெகுளி காமமொன் றுறுத மாதவ வுரோமசன் மாதோ. (உஎ)

இன்னணம் வலியநிட்டையிலிவன்மற் றிருத்தல்கண்டரிமுத லிமையோர்
முன்னர்வந்துனக்கு வேண்டியவரங்கண்மொழிகென முன்னவனிடத்திற்
றுன்னுறுமனத்தோரொன்றுமோ திலனச் சுராதிபர் தவத்தினையலைப்பான்
மின்னிடை யரம்பை மாதர்கள் பலரை விடுத்தனன் கின்னர ருடனே. ()

வேறு.

வந்தரம்பை மடமாதர் முழாவினொடு சிலம்பொலிப்ப மருங்கு றன்றோ
டந்தளிர்ச்சீ றடிவருந்த வாடாத நாடகமு மாடித் தீர்த்தார்
கந்தருவ ரிசைபாடி வாயினொடு மனமிளைப்பக் கையி னோடு
தந்திரியுஞ் சோர்வு பெற நின்றனர்பின் னெவரும்வெள்கித்தமதூருற்றார்.

பரவிதற்கு மனஞ்சலியா தொருநிலையி லிருக்கின்ற பரிசோர்ந் தன்னோன்
கருதியவா றிலகுமுல கனைத்தையுமீன் றளிக்குமெழிற் கவுரி யோர்பான்
மரகதவெற் பெனவிளங்கத் தான்பதும ராகநெடு வரைபோ னின்ற
வரவமணிந் திடுமருத நாயகன்வந் துரோமசனு மவன்றன் முன்னர். (௩௰)

மானமுறு பாரிடங்கள் புடைசூழப் புகழ்ந்திமையோர் மந்தா ரத்தின்
றேனிமிரு மலர்மாரி சொரியமறை வாழ்த்திடக்கந் திருவர் தேவ
கானமிசைத் திடவெதிர்நின் றிடுபரம குரவனைத்தன் கண்ணிற் கண்டா
னீனமில்சீர்த் தவமுனிவன் பாவகமுற் றேவியமே யென்ன நின்றான். ()

நின்றுணர்வு கொண்டதற்பி னிமயமயி லொடுநிற்கு நிமலன் பாத
மன்றல்கமழ்சரோருகத்தண்மலர்த்துணையிற்பணிந்தெழுந்துமாறில்கண்ணீ
ர், குன்றருவி யெனச்சொரியமனமுருகிக்கரஞ்சிரமேற் குவித்துமேனமே
லொன்றியபே ருவகையொடுமுனைதமோ றிடப்பரவ லுற்றனமமா. (௩உ)

பதுமமல ரடிநினைந்தோ ருறுதுயரங் கடிதகற்றும் பரம போற்றி
விதுமவுலி யிறைபோற்றி திரிபுரந்தீ யெழநகைத்த விமல போற்றி [ற்றி
முதுமறையுட்பொருள்போற்றி யெவரொதுவேண்டினுமுதவு முதல்வபோ
மதுமலிதண் மலர்க்கூந்த லுமையவனு யகமருத வாண போற்றி. (௩௩)

எனத்துதித்த முனிவரனை நோக்கியருள் கூர்ந்திறைவ னிமைப்பிலோருங்
பனிப்புறநீ வருந்திமிகப் புரிந்ததவங் கண்டுவந்தோம் பரிந்து மேலுன
றனக்கிவண்வேண் டியவரங்கள் கேட்டிமகிழ்ந் திவையனைத்துந் தருது
மென்றான், கனத்தபுகழ்ப்பெருந்தவத்தோர்தலைவனிவை விளம்புகின்றான்
களிப்பு மேவி. (௩௪)

சுராதிபவிவ் வடிவொடுநீ யென்றுமிந்தத் தலத்திருந்து தூயபொற்றாள்
பராவுதல்செய்பவர்தமைக்காத்திடவேண்டுமெனக்கு முன்பாற்பத்திவேண்
டுந், தராதலமின் புறவேண்டுஞ் சைவமொடு வைதிகமுந் தழைக்கவேண்
டும், விராவுபுக ழெத்தலத்து நின்பூசை பொலிவெய்த வேண்டுமென்றான்.

தேமலர்ச்செஞ் சடையவனித் திறங்கேளா முனிவரநீ தெரித்த வாறே
நாமுமிவ ணுறைகின்றோம் பிறவாமு மினிதளித்தோம் நவில்சின் னாளி
லேமமுற மொருவளவன் வருமிவண்வந் தனக்கேவலெதுவுஞ்செய்வான்
மாமருவு மெய்யுணர்வும் பெறுகுவையே லெண்ணியவு மருவு மென்றான்.

விதிதருமிவ் வரமேற்றுக் களித்துவர மளித்தானும் வெற்பின் மின்னுங்
கதிருமிழோர் மணிச்சிங்கா தனத்தினுறப் பூசித்துக் கருத்தி னூடு
முதிருறுமன் பொடுமருத நாயகனைப் பெருநலமா முலையி னாளைச்
சதிருறுமைங் கரனவனைப் பூசித்து முனிவர்பிரான் றங்கு நாளில். (௫௭)

சேற்றினிடைத் தாமரைதோன் றியதென்ன விடமுதவு சீற்றராவின்
பாற்றிகழுஞ் சுடர்மணிதோன் றியதென்ன வறிவிலியாய்ப் பவுத்தனாகி
வீற்றிருக்கும் புரவலன்பாற் சென்னிகுலத் துடனுலகம் விளங்க வந்து
தோற்றியரன் றிருவருளாற் காஞ்சிதனில் விக்கிரமச் சோழன் மாதோ. ()

விடையுகைத்தானிடத்தினிலன்புருவாகிப்பிறைமதியின்விளைவினோங்கிப்
படைகுடிகூ ழமைச்சொடுநட் பரணுறின்வலியெய்திப் பகைவேந்தர்க்கோ
ரடலேறாய்க் கல்வியருட் சாகரமாய் மன்னுயிர்கட் கனைய கொற்றக்
கொடைநிழலுற்றாறினிலொன்றிறைகொண்டிறையினொடுகூடிவாழ்வான்

இந்நலத்திற் காகம்பொன் னுருவாகிப் பேசிமகிழ்ந் திருந்த வாறு
மெய்த்தவரோ டுரோமசமா முனிவரன்மா தவம்புரியும் விதமுங் கேளா
வத்தலமுற் றிப்பொழுதே பரஞ்சுடரைப் பணிவேனென் றவாவி னோடு
மொய்த்தபெருஞ் சேனையொடு மெழுந்தெழிற்கா விரிநாட்டின் முன்னுற்
றானால். (௬௰)

கயலினங்க ளுயர்தெங்கி னிளங்காயிற் பாய்ந்துடைக்கக் காலுந்தெண்ணீர்
வயலினிடைப் பொன்னியினீர் வடிந்திடினும்வடியாத வளத்தாற்செந்நெ
லியல்பினெழு கன்னலெனக்கன்னல்கமு கெனக்கமுக மெழிற்றெங்கென்
னப், பயில்வளமை பார்த்துமகிழ்ந் தரன்பதிகள் வழியுறைவ பணிந்து
போற்றி. (௬௧)

ஆசினிமட் டெழுந்திலகு சையவரை தனிற்பொலியு மாரத் தோடு
தேசுமிகு மரகதம்வச் சிரமாதி கொடுதேக்கித் திரைநீள் வேலை
காசினிக்க ணாரதனு கரமாகி விளங்கிடச்செய் கவினுற் றோங்கும்
வாசநெடும் புனற்பொன்னி யடைந்துபடிந் தெதிர்நியம வகைக ளாற்றி.

மருதவனத் திடைமேவி யுடுக்கணத்தி னடுவொளிரு மதியே போன்று
கருதுமுயர் தவமுனிவ ரிடைவிளங்கு முரோமசனைக் கண்டு தாழ்வுற்
றுருகிடுமன் பொடுநின்றான் முனிவரன்பார்த் திறைவனரு ளுன்னிமன்னா
வருகவென வியந்தினிய முகமனளித் தாசிபல வகுத்துப் பின்னர். (௬௩

நவிலுமவன் றனக்குரிமை யுடன்வீர சோழனென நாமஞ் சாற்றி
யவனிபுகழ் மருதவனத் திறைவனவன் றனைநினைத்த வருளு மோதித்
தவமுனிவ ரொடுமவன்ற னோடுமெழுந்துபொற்கோயில் சார்ந்துமன்னுஞ்
சிவபரன்முன் விடுத்தனனுங் கவன்வணங்கித் துதியனந்தஞ் செய்தான்
மன்னோ. (௬௪

அவ்வயினின் றவ்வாச னம்முனிவர் தலைவனொடு மன்பி னோடுங் [திச்
கொவ்வையிதழ்க் கருநெடுங்கட் பெருநலமா முலையுமையாள் கோயிலெய்
செவ்வனசத் தாட்பணிந்து மற்றுமுள தேவர்தமைத் தெரிசித் தேத்திக்
கவ்வைநெடுங் கடல்குடித்தோன் செய்தவமா தியுங்கேளாக் களிப்பு நீடி.

பொன்பயிலுந்திருக்கோயிற்புறத்தினிலுற்றிருந்துமுனிபொற்றாள்போற்றி
யன்பிலெளியேனையுமோர்பொருளாகக்கொண்டருள்செய்ய நத்தின்மூர்த்தி
கொன்பயிலுந்தவச்சுடரோயாணியற்றும்பணியிடையென் கூறுகென்றான்
மின்பயிலுந் தனிவேலான் றனைநோக்கி முனிவர்பிரான் விளம்பு வானால்

வேறு.

எண்ணிடுஞ் செல்வ மிளமைமெய் கணத்தி லியல்பதா யழிந்திடு மென்
றம், புண்ணிய மதனுக் கழிவிலை யதனிற் புகல்சிவ புண்ணிய மதிகம்
பண்ணிடுந் தவத்தா லியாவையு மருவும் பயின்றிடு மனையமா தவத்திற்
கண்ணுதற் பிறைச்செஞ் சடைமணி மிடற்றுக் கடவுடன் பூசனையதிகம்.

மருத்துள வணிமான் முதலினோர் பதமு மற்றவர் செல்வமும் பிறவு
நிருத்தனைப் பூசை புரிந்திடு பயனே நிலவுமப் பூசைதன் கையா
லருத்தியிற் செயலே யமையுமான் மார்த்த மன்றியன் னியவடி வதனி
லொருத்தராற் செய்வித்திடலுமா மவற்றுளுயர்ந்தது சுயம்புவா மிலிங்கம்.

இன்புற வொருவன் றன்புதிதாக வியற்றிடு மறத்தினு மொருவன்
முன்புசெய் திருந்த வறத்தினுக் கிறுதி முந்துறச் செய்திடா திருக்கிற்
கொன்பயில் பலனங் கெண்மடங் கினிது கூடுநீ டறனழிந் திடுகாற்
றன்பொருண்முயற்சிகொண்டதை விளங்கச் சமைத்திடிற்சதமடங் கெய்
தும். (௪௯)

அரனடி யவர்கட் களித்திடு மவையு மரன்கையி லளித்ததே யாகு
நிருபநீ யினைய புனிதமா தலத்து நித்தன்வாழ் சினகர மெங்கும
பரிவுட னீடு திருப்பணி யியற்றிப் பரன்மகிழ் பூசையுஞ் செய்வித்
துரியமெய் யடியார் தம்மையும் போற்றி யுமாபதி யருளடை கென்றான்.

இத்திற முனிவ னிசைத்தசொற் சென்னி யெழின்முடிச் சென்னிதாழ்ந்
தேற்று, மெய்த்திற லமைச்சர்க் கிசைத்திட வவர்கள் விரைவினே வலர்
களைத் துறைதோ, றுய்த்திட வனஞ்செற் றணிநகர்வகுத்தற் குரியவர்சிற்
பநூ லுணர்ந்தோ, ரத்தொழிற் குரிய கருவிகளுடன்வந் தளவிலர் சூழ்ந்து
கா டெறிந்தார். (௫௧)

செறிதரு கருங்கால் வினைஞர்வா ளவியத் திண்படை யெறிதலுமாங்கே
யுறைதரு மருத வனத்துறை யிறையோனடிதொழுமன்பர்பல்வினைபோற்
பறவையும் விலங்கு மெறிந்தன வவர்கள் பவத்தொடக் கென்னவேரோடு
முறிதர லுற்று வீழ்ந்தன போலு மொழிந்திடு தருக்குல மெங்கும். (௫௨)

வனமறப் போக்கி நிலனுறத் திருத்தி மருதநா யகப்பெருங் கடவுள்
சினகரந் தனைமுன் மயனினி திலங்கச் செய்தவா றெழில்படப் புதுக்கிக்
கனமுறப் பின்னுந் திருப்பணி பலவுங் கண்டுநன் னகரமேற் காண்பா
னினமுகி லுறங்கு நேமிமால் வரைநே ரொயிலுட னகழிசூ ழமைத்து. ()

மாகமார் குடுமி மாடநீண் மறுகு வகைபடு மாவணங் கலலை
யேகநா யகன்வந் தனுதினம் பவனி யியங்கிடு பெருந்திரு வீதி
வாகுறு தெற்றி சாளர வொழுக்க மன்றுபொன் மேடையா டரங்கு
பாகுறு கழக முயர்மணிக் குலங்கள் பரந்தினி தொளிர்நிலா முற்றம். ()

மாதவர் மடங்கள் பயிலறச்சாலை மருவுறச் செய்துமற் றனந்தங்
கோதில்சீர்த் தெருவு மியற்றிவெங் களிறு குலவெழிற் றேர்பரி நிலையுந்
தாதுறு மலர்ப்பூஞ் சோலைபைங் கமுகு தழைந்தெழு தெங்குவெண்கதலி
சூதநீள் வருக்கை கூவல்பூந் தடாகத் தொகுதியு மிலங்கிடவமைத்தார்.

அறைகழ லரச னேக்கியுண் மகிழ்வுற் றணிநகர் சாந்திசெய் தோங்கு
மறையவர் மன்னர் வணிகர் வேளாளர் மற்றைய சாதிய ரெவர்க்கு
முறைபெற வீடு வகுத்தினி தளித்து முந்துபொன் முதலிய வுதவித்
துறைபயில் வேணி மருதநா யகர்க்குச் சூழ்ந்திடு பதியெலாங் கொடுத்து.

அலகில்பொற் கலையு முயர்நிதிக் குவையு மணிமணிப் பணிகளு மீந்து
கலைபயி லாதி சைவராற் பூசை கருதியே மூன்றுகா லையினு
மிலகிடச் செய்தா தனுமந் நகரத் திலங்கொரு மாளிகை யிடத்துச்
சுலவுறுஞ் சேனை நெருங்கவீற் றிருந்தான் றுன்னல ருள்ளமு நடுங்க. ()

இருந்திடு வளவன் மற்றைநாண் முனிவ னிருக்கையுற் றடிமலரிறைஞ்சித்
திருந்தெழின் மருத நாயகன் றனக்குத் திருவிழாச் செய்திடு கென்னப்
பொருந்துமென்னெஞ்சம்புகலுமீண்டதற்குப் பொருந்திய மதியெதுநாள்
யா, தருந்தவர் தலைவ வென்றனன் முனிவளவன்றனைப் புகழ்ந்தினிதிசைக்கும். (௫௮)

மாயிருஞாலத் திருந்துளோர் பாவ வலியெலாந் தொலைத்திடு மெவர்க்குந்
தூயதாக் கிடுமங் கலந்தனை வளர்க்குந் தொடர்ந்திடு முத்தர நெறியி
லாயிரங் கதிரோ னடைமுதன் மதிமற் றன்னதி லுயர்ந்திடு பூச
மேயநா ளதனைத் தீர்த்தநா ளாக்கி விழாவினி தியற்றிட லாகும். (௫௯)

பேசிடுமேனைத் தலத்தொரு கோடி பிறங்குநற் பசும்பொசும்பொ னீந்ததுவாம், பூசநா ளினிலீண் டணுவள வதனிற் பூசுரர்க் களித்திடு தான
மாசில்போ னகமெண் கோடியந் தனர்க்கு மற்றைய தலத்தளித் திடும்பே
றீசனன் பருக்கித் தலத்தினத் தினத்தி லீந்திடு பிடியன முதவும். (௬௰)

உடையவர் பூச நாளிலுண் மகிழ்வுற் றுதவில சொன்னில்யா தேனுங்
கடைபடுமவர்கள் வாழ்வுசின் னுளிற் கன்வராற் பகைவர்க டம்மா
லிடைமருதென்னுமிதனிடைவிளங்கு மெழில்விழாக்கண்டுளமகிழ்ந்தோர்
விடையவன் மலர்த்தாள் பணிந்துளோ ரிவர்கள் வியன்சிவ புரியினில்வாழ்வார். (௬௧)

விழவுநோக்கிடுவானெழுந்தொருதலையான் மீண்டவர்மேவுறநினைந்தோர்
முழவொலிகேட்போர்நோக்கமுற்றடைந்தோர் முன்னுறக்கண்டவரவனை
யெழில்விழாச்சிறப்புவினவினோர்வருவோரிடத்தினிலெம்பிரான்றனக்கு
மொழிதருபொருள்யாதேனுமீந்தவர்கண் முதியசீர்த்தேவராய்த்திகழ்வார்.

அத்தகை மதியு மடுத்ததன் னதனி லமரர்தங் குரவனு ளதுவு
முய்த்திடு மவன்றன் வாரமுங் கலையா லுடுபதி நிறைந்திடு திதியு
மொத்தணைகின்ற தின்னதுத்தமமா மொளிர்விழாத்தொடங்குகவென்றான்
மெய்த்திற லரச னுவகைமீக் கூர்ந்து விருப்புட னவ்வணந்தொடங்கும்.

மருவளர் மலர்ப்பூம் பொழிலிடை மருதூர் மருதநா யகனெழிற் பூசத்
திருவிழாவினுக்குவந்திருந்திறையோன் றிருவருளடைந்துசெல்கென்னக்
கருநடந் தெலுங்க மாரிய மராடங் கவுடமா தியவுயர் நாட்டு
நிருபர்க டமக்கு மனமகிழ் வோடு நேர்தர வரைந்துமுன் விடுத்தான். ( )

ஓங்கெழிற் கனக வரைக்குல மென்ன வுயர்மணித் தேர்கள்செய் வித்துத்
தேங்கமழ் மருத நிழலுறை யிறையோன் சினகர மெங்கணும் விதானம்
பூங்கொடி மகர தோரணந் தொடலைப் புகழ்நடைக் காவண மாக்கி
தாங்குபொன் வீதி யலங்கரித் திடுவான் றழங்கொலி முரசறை வித்தான்.

வாரண மிசைநின் றறைந்திடு முரசின் வளரொலி கேட்டுள மகிழ்ந்து
தாரண வுறுபூங் கோதையர் மனுவர் கவின்மனை தொறுமுளை வளைத்த
பூரண கும்ப மணியபொற் கொடிகள் பொலிவுறச் செய்துவீ திகளிற்
றோரண மலர்ப்பூம் பந்தர்கள்விரித்துச் சுடர்மணிப்படலைகணிரைத்தார்.

மணிவிளக் கெடுத்த தமனியப் பாவை வாயில்க டொறுமுற நிரைத்தார்
கணிதரு கமுகு தெங்கிளங் குலைகள் கதலிபைங் கன்னல்கள் விளைந்தா
ரணிபணியுரிஞ்சவுதிர்ந்தபொற்பொடிகளடங்கிடப்பனிப்புனலிறைத்தார்
திணிதரு தத்த மனைதொறும் வதுவை செய்தலிற் பிறவுமே லமைத்தார்.

துன்னிடு மோலை கண்டிடு செங்கோற் றுங்கவெண் குடைப்புர வலர்க
ளின்னிய முழக்குங் கடகரிச் சுறவு மிவுளிவண் டரங்கமு மெழிற்றே
ரொன்னுமொண் கலனும் பரந்திடு சேனை யிருங்கடல் சூழ்ந்திட வெழுந்து
மன்னிடு மகிழ்ச்சி யுடன்றிசை தோறும் வந்திடைமருதினிற் புகுந்தார். ( )

வளவன்மற் றவரை யெதிர்கொடு மருத வனத்திறை மலர்ப்பதம் பணிவித்
துளமகிழ் சிறப்பும் வசதியு மவர்கட் குதவினு னுயர்விழா நடக்கும்
வளமையோர்ந் தவனித் தலத்துறை பிறரும் வானநா டுரகநாட் டினரு
மளவில்பே ருவகை தன்னுடனிமை மவரவ ரூர்திமேல் வந்தார். (௬௯)

சென்னியுண் மகிழ்ந்து மாதவற் குறுகிச் செய்தவுஞ் செய்பவு முரைத்து
முன்னகர் காவற் சாத்தன்மா காளி முதலியோர்க் கணிவிழா நடாத்தி
யென்னைய னென்னு மைங்கரக் கடவுட் கெழில்விழாத் தனியினி தியற்றி
மன்னனு ளிடபத் துவசமேற் றுவித்தான் மருதநா யகனுள மகிழ. (௭௰)

அத்தின முதற்கொண் டேகநா யகனீ டணிதரு பொற்கலை மகுடம்
நித்தில வடங்கள் கதிர்மணிப் பதக்க நிலவுமிழ் மகரகுண் டலங்கள்
சித்திர மணிக்கங் கணங்கள்கே யூரந் திகழ்மணி நூபுர மாதி
மொய்த்திடு பணிபூண் டெழில்கொள்வா கனத்தின் முற்றிழை யுமையுட
னெழுந்து. (௭௧)

நாரணன் பிரமன் புரந்தர னாதி நவிலுமெண் டிசைபுரந் திடுவோர்
தாரணி வசுக்கள் வைரவ ரியக்கர் தண்மதிக் கடவுளா தித்தர்
போரணி நெடுவேற் றனவ ரிமையோர் போற்றுகந் தருவர்விஞ்சையர்கள்
பாரிடத் தலைவர் சித்தர்மா தவர்கள் பார்த்திப ராதிமா னிடர்கள். (௭௨)

வம்பவிழ் கோதை யரம்பைய ராக மடந்தையர் வயங்கெழு மாத
ரம்புலி யிடத்துப் பேதைய ராதி யணியிழை வனிதைய ரெவரும்
பைம்பொ னீள்வீதி யிடத்தினும் புயல்கண் படுசிகை மண்டப மீதுங்
கம்பயில் சிகரி மணிமதி லிடத்துங் கணங்கொடு நின்றுபோற்றிசைப்ப.

வேறு.

படகமொண் சங்கம் வீணை பகர்ந்திடு தகுணி பேரி
குடமுழா முரவ மொந்தை கொக்கரை தடாரி தாளந்
தடமுறு முருடு தக்கை சல்லரி குழல்யா ழாதி
திடனுறு கொண்ட லோடு திரைகடன் முழக்கஞ் செய்ய. (௭௪)

தருமமால் விடையோன் வந்தான் சம்பக வனேசன் வந்தான்
பெருநல முலையாண் மன்னும் பிறங்கெழி லிடத்தான் வந்தா
னிருணிற மிடற்றோன் வந்தா னேகநா யகன்வந் தானென்
றுருவளர் மணியிற் செய்த வுபயசின் னங்க ளார்ப்ப. (௭௫)

கவினுறு பாடற் பண்பு காந்தளொண் கரத்திற் காட்டி
சுவையுற வதனப் போதிற் றுணைவிழிக் கயலு லாவத்
தவறில்சீர்ச் சதியி னோரத் தளிரடி பெயர்த்து வைத்துக்
குவிமுலை மலர்ப்பூங் கோதை கொம்பனார் நடனஞ் செய்ய. (௭௬)

எண்ணில்வெண் மதிகள் வெய்யோ னெதிருற்ற தென்ன வெண்ணில்
வண்ணவெண் டாளத் தொங்கல் வயங்குபொற் குடைகள் சூழத்
தண்ணுடுத் திரளுற் றென்னத் தரளவொண் பந்த ரோங்க
விண்ணிற்புள் ளினஞ்சூழ்ந் தென்ன வியன்கொடிக் குலங்க ணீட. (௭௭)

ஆவண மென்னும் வேலை யதிலெழு திரைக ளென்னக்
காவணக் கூந்த லார்கைக் கற்றைவெண் கவரி துள்ள
மாவணத் திலங்கவ் வேலை மலர்ந்திடு செம்பொற் கஞ்சப்
பூவண மெனத்தீ பங்கள் பொலிந்தவெண் ணிலாத வெங்கும். (௭௮)

காவிரித் தென்சா ரோங்குங் கவின்மணி மண்ட பத்தின்
மேவிவீற் றிருந்தன் னோர்க்கு வேண்டிய வரங்க ளீந்து
கோவிலுற் றினிதுநீடு கொடியுகந் திறக்கிச் சூழ்ந்த
தேவர்கண் முதலி னோர்க்குந் திசமுறு விடையு மீந்து. (௭௯)

மாற்றருஞ் சிறப்பின் மிக்க மடங்கலா தனத்து மீது
வீற்றிருந் தனன்மற் றிப்பால் வேந்தனுண் மகிழ்ந்து சென்று
போற்றினன் முனிவன் றன்னைப் புகழ்ந்தன னவனுக் காசி
சாற்றிவெண் ணீறு நெற்றி தரித்தன னுவகை கூர்ந்து. (௮௰)

சென்னிதன் னிருக்கை யெய்தித் தேவர்மன் னவர்க ளியார்க்குந்
துன்னுறு வரிசை நல்கித் தொகுமவர் தன்னை யேவி
மன்னர னருளி னாலோர் மகப்பயந் துவகை யெய்திப்
பின்வரும் வருடந் தோறும் பெருவிழா நடத்தல் செய்து. (௮௧)

பிறங்குபல் காலம் வாழ்ந்து பின்புதன் னரசு தன்னை
மறங்கிளர் நெடுவேற் செங்கை மைந்தனுக் குதவித் தான்சென்
றறங்கிளர் சிவலோ கத்தி லமர்ந்திடு புனிதன் செய்ய
நிறங்கிளர் பதார விந்த நிழலின்வீற் றிருந்தான் மன்னோ. (௮௨)

உரோ மசன் பின்னுமாங்கே வுயர்மரு திறையோன் பாத
சரோ ருகம் போற்றி நீடு தவம்புரிந் திருந்தா னிப்பால்
விரோதமில் லருந்த வத்து மிருகண்டு வென்னு மேலோன்
வரோதய னென்ன வோது மார்க்கண்டன் பேறு சொல்வாம். (௮௩)

உரோமசச் சருக்கம் முற்றும்.

ஆக திருவிருத்தம் ௪௬௨.

உ

மார்க்கண்டச் சருக்கம்.

மாத வப்பெரு வாழ்வுறு மார்க்கண்ட முனிவன்
வேத நாதமுந் திரைகடன் முழக்கமும் விரவுங்
கோதில்சீர்க் கடவூ ருறை யிறையவன் குளிர்பொற்
பாத பங்கயங் கூற்றின்மேற் படப்புரிந்த தற்பின். (௧)

வேலை சூழ்புவி யிடைப்பல தவங்களின் மேவி
பால லோசன னுமைக்கொரு பாசமுன் னளித்த
கோல மின்புறக் காணிய வுளத்திடைக் குறித்துச்
சீல மாதவம் பலபகல் செய்துசெய் திளைத்தான். (௨)

ஒருத லத்துமத் திறனெதி ருற்றிடக் காணான்
கருது வண்புக ழிடைமரு திடத்தினிற் கலந்து
பொருத ரங்கமொண் மணியெறி பொன்னிநீர் படிந்து
மருத நாயக னடிமலர் வணங்கிநின் றேத்தி. (௩)

பரிவி னோடொரு சிறையிருந் ததிர்வரு பன்னா
ளரிய மாதவ மியற்றின னவனும்வந் தன்பாற்
குரிய நாயக னுமையுடன் கருணையுற் றும்பர்
விரிகொ ழுண்மலர் சொரிதர மேவிமுன் னின்றான். (௪)

வேறு.

ஒருவடி வதனி லொருபுறத் தரன்மற் றொருபுற மும்மொழி யுமையாள்
மருவுதன் புறநீற் றணியுறு தவள மலர்ச்சடை நீலவொண் மிடறு
பரவெழின் மார்பிற் பணியணி பூணூல் பகர்புலித் தோலுடைப் பரசு
விரவுறு தடக்கைச்சிலம்புறுமலாத்தாள் வீரவொண்மணிவட மதின்மேல்.

நவிலுறு முமைதன் வடிவெழிற் பசுமை நாண்மலர் நிறைதருங் கூந்தல்
கவினுறு முயர்குங் குமமொளிர் மிடறு கச்சொடு கதிர்மணிக் கவன்சூழ்
குவிமுலைவளர்மார்பிலங்கெழிற்பட்டுக் குலவுநுண்ணிடைமணித்தொடிக்
கை, திவவொளி மணிப்பொற் பாடகஞ் சதங்கை திகழ்ந்திடு சீறடிப்
போது. (௬)

என்னவோ திடுமின் னிவைவல னிடமா யிலங்கிடக் கணுதிபர் சூழ
முன்னர்நின் றிடலுங் கண்டெகந் தெழுந்து முளரிநாண்மலர்ப்பதமிறைஞ்சி
மன்னுள முருகிப் பரவச மடைய மலர்க்கணீர் சொரிதரக் கரங்கள்
சென்னிமேற் குவித்து நின்றனன் பின்னர் தெளிவுபெற் றிங்ஙனந் துதிக்
கும். (௭)

நீலமார் மிடற்றாய் பவளமால் வடிவி னீறணி நிருத்தனே போற்றி
வேலினைநிகர்க்கும்விழியுமையொருபால் விளங்கவந்தெளியனேன்காண
பாலுமின்சுவையும்வேறுவேறிருக்கும் பரிசெனநின்றனைபோற்றி
யேலுமெய்யன்பர்க்கெளியனேபொழில்சூ ழிடைமருதிறைவனேபோற்றி.

அன்றுநானுன்பாலடைக்கலம்புகுதவடற்படைகொண்டெனைப்பிடிப்பா
கன்றிவந்திடுவெங்காலனைக்கறுவுகொண்டுதைத்துயிர்தனைக்குடித்தா [ன்
யின்றுமென்கருத்துமுடிந்திடவுமையாளிலங்கொருபுறத்துடனின்று
மென்றுமென்றனைக்காத்தருள்வதுன்னியல்பேயிடைமருதுறைபரஞ்சுடரே

எனத்துதித் திடலு மெதிருறு மிறைவ னியம்புவான் முனிவர் டலைவ
வினைத்துய ரகற்று மனதருந் தவமு மிகுந்தநின் பத்தியுந் துதியும்
கனக்கநா முளத்தின் மகிழ்ச்சிசெய் தனநீ கருதிய வரங்கள்கேளென்றுன்
சினக்களை களைந்து தவப்பயிர் வளர்க்குந் திறலினு னின்னவை பகரும்.

நிலவுறு மிமையோர் தலைவரு முனைா நின்னரு டன்னொடு நீயு
மிலகிடவெளிநின்றென்னையாண்டனைமற் றினிவரமிதனில்வேறென்னோ
குலவுறு மினைய தலத்தில்வந் துன்றன் குரைகழற் பதமலர் பணிவோற்
கலகிலெவ் வரமு மளித்தருள் புரிந்தீண் டவர்களை யாண்டிட வேண்டும்.

கொடியதிக் கயங்கணிலைபிறழ்ந் திடினுங் குளிர்கட லந்தரத் துறினு
மடியனே னின்பாற் சிறிதுவைத் திருக்கு மன்பினிற் குறைவுறா தருளிக்
கடிகமழ் கடுக்கைத் தொடைபுனை வேணிக் கண்ணுதற் பராபரவெனக்கு
முடிவினி லுன்றன் மறைச்சிலம் பரற்று முண்டகப் பதந்துணைதருவாய்.

நின்பணி விடைகள் புரிந்துளோ ரடிசில் நிதியொடு கலைமுத லியநின்
னன்பர்கட் கினைய தலத்திடை யளித்தோ ரழிவிலா நிலைப்பத மருவி
யின்பமுற் றிடவும் புரிதியென் றிசைத்தா னிசைத்திடு வரமெலா முதவி
மின்பயில் வேணி வரதனந் நிலையே விமலைதன் னொடுமகிழ்ந் திருந்தான்.

வீற்றிருந் தருளும் பிறைமதிச் சடில விமலனைப் பெருநல முலையைப்
போற்றிவந் தனஞ்செய் தனுதின மினிது பூசனை புரிந்துபல் கால
மாற்றருங் காதல் கொண்டுமோர்க் கண்ட மாதவன் பின்னுமாங் கிருந்தான்
மேற்றனிச் செங்கோற் சுகீர்த்திமன் னவன்றன் வியனுறு சரிதைகூ றிடு
வாம். (௰௪)

மார்க்கண்டச் சருக்கம் முற்றும்.

ஆ திருவிருத்தம் ௬௭௬.

தந்தியின் குழாமும் பாய்மாத் தானையு மருங்கு போத
மைந்தர்கண் முன்பு செல்ல வண்புகழ்த் தண்டி பின்னர்
வந்திட மறுகி னூடு மருவுபோ திரண்டும் வானோர்
சுந்தர மலரின் மாரி சொரிந்திடப் பவனி யுற்று. (௭௰௯)

மின்னுபொன் வரையி னோங்கு வெயின்மணித் தேரி னேறிப்
பன்னிடு புனர்த நாளிற் படரொழிற் பவனி வந்து
மன்னிடு பூச நாளின் மால்விடை யேறி நீடு
பொன்னியுற் றினிய தீர்த்தம் பொருந்திய வெவர்க்கு மீந்து. (௮௰)

சுகீர்த்திமன் சருக்கம்.

மந்தமா ருதஞ் சூழ்பொழி லிடத்துறு மலர்கள்
சிந்து தேறலின் சிறுதுளிக் குலங்கொடு சீறி
நந்தலில் லெழின் மாடவீ திகளெலா நறுந்தேன்
கந்த மோங்கிடு முயர்மதிற் கச்சியி லுறைவோன். (௧)

வன்ற னிப்புலிக் கொடியினன் மன்னவர் திலகன்
றுன்று தெண்டிரைக் கடல்புரை சேனையன் சுகீர்த்தி
யென்று ரைத்திடு பெயரின னிரவலர்க் கென்ன
மன்ற தன்பொரு ளியாவையு மகிழ்ந்துத விடுவோன். (௨)

காம னேயெனு மெழிலினன் கலையெலா முணர்ந்தோ
னேம வேற்கையான் மகளிர்சந் நயனவண் டினமுந்
தாம மார்தரு வரிசுருந் துயங்கிடு புயத்தோன்
மாம திக்குடை நிழலினில் வையகம் புரப்போன். (௩)

அல்லி னேருறு கண்டனு மவனடி யவருஞ்
சொல்லு மன்னதன் பொருளுமென் றிறைஞ்சிடு தூயோன்
வல்ல வஞ்சகப் பகைவர்தங் களுக்கொரு மறவோ
னல்ல வர்க்கவர் புதல்வரி னெழுசுறு நண்பன். (௪)

புன்க ணுற்றிடி னெளியவர் புவியிடைப் பொருந்து
தன்க ணிற்கொடு நோயுறு மவனெனத் தளரும்
வன்க ணாளரைத் தண்டனை மருவுவித் தவர்மே
னன்க ணுறுதிட வியற்றுவோ னல்லறம் வளர்ப்போன். (௫)

இந்த நீர்மையி னின்பமுற் றிருந்திடு நாளின்
மைந்த னின்மையாற் சிறியதோர் மனக்குறை யெய்தி
யந்த ணாளர்தம் பூசனை விரதங்க ளாற்றி
முந்து தீர்த்தங்கள் படிந்துசாந் திகள்பல முயன்றான். (௬)

இனைய வாற்றியு மகவுதித் திடாமைகண் டிரங்கி
யனைய நீடவை மருவிடு மவனுயிர் போல்வார்
புனையு முத்தமிழ் முனிவரன் பொன்னடி வணங்கிற்
றனைய னீவனின் றேல்வழி சாற்றுவ னென்றார். (எ)

சந்த வெண்குடைச் சுகீர்த்தியுந் தருவதா மிஃதென்
றந்த மாதவ னெங்குளா னெனவினி தாய்ந்து
கந்த நெய்தலொண் மகளிர்கண் காட்டுவென் காட்டில்
வந்தம் மாதவ முனிவரன் மலர்ப்பதம் பணிந்தான். (அ)

மிக்க தென்வரைச் சிகாமணி யாகிய மேலோன்
றக்க வாசிக ளொடுபல முகமனுஞ் சாற்றி
மக்கண் மற்றுளார் நிகழ்ச்சியும் வினவலும் வளவன்
விக்கிறு மென்ன நின்றனன் விழுமமீ தார. (கூ)

என்ன கத்திடைத் துயருனக் கென்றனன் முனிவன்
மன்னநீ ரெனக் களவிலா வளங்கண்மற் றளித்தி
ரன்ன வற்றினிற் பெருமகிழ் வெய்தின னவற்றோ
ரின்ன லுற்றனன் புதல்வர்க ளிந்திடா மையினால். (ய)

அலகில் புண்ணிய தீர்த்தங்க ளாடினே னாடி
யலகி லந்தணர்க் கிசைவுறு தானமு மளித்தே
னலகி ஞேன்புக ளாற்றினேன் றவம்பல விழைத்தே
னலகில் சாந்திகள் செய்தன னுங்கும தருளால். (யக)

சிந்தி டப்பெரு தகைமையோன் செல்வமு மதவே
ளந்த மும்விதி மகிமையு மனந்தநீ டறிவு
மிந்தி ரன்பெறு போகமு மெய்திவாழ்ந் திடினு
மைந்த ரின்றெனின் மற்றதோர் வாழ்வெனப் படுமோ. (யஉ)

கருணை யுற்றினி யேனுமோர் காதல னுதவி
யிருமை தன்னினு மெளியனே னினபமுற் றிடநீர்
புரிய வேண்டுமென் றுரைத்தனன் பொதியவெற் புறைவோன்
வெருவ லோலுமை யிடத்திறே னருண்மென விளம்பும். (யங)

செந்நெ லோங்கெழிற் கன்னலிற் செறிந்திடு மருதந்
துன்னு வேலியிற் சூழ்கமு கிலங்கிடை மருத
மன்னு செஞ்சடைச் சோதிபால் வயங்குமோர் மருத
மன்ன திற்படிந் திசைத்திடு மளிக்குல மருதம். (யச)

கருமை யுற்றிடுஞ் சிறைவரிக் கணமிசைக் குறிஞ்சி
பரவு வானிடைச் செலவுறு பருவரைக் குறிஞ்சி
மருவு தேன்சொலார் கூந்தலை மானநன் குறிஞ்சி
யுரவு தண்கடன் முகிற்குல முலவுமாங் குறிஞ்சி. (யரு)

சொற்றி டாயிடைத் தூயபொன் னிழையினு னெய்த
லுற்ற மென்கலை மாதரா ரொளிகொள்கண் ணெய்தல்
பற்று மாடவர் நங்கண்மேற் பார்வையி னெய்தல்
கற்ற தாமுல குயிர்கண்மேற் கணைமத னெய்தல். (௰௬)

நலங்கொ ளிந்திரன் கலைமக ளுயகன் முல்லை
நிலங்கொண் மாதவன் போற்றுமந் நெடும்பதி முல்லை
வலி[illegible]கொள் வேற்றடங் கட்பிறை வாணுதன் முல்லை
யிலங்கு மூரலா ரிடைக்குடி யிருந்திடு முல்லை. (௰௭)

எகி யங்குநீ விளைவினி விசைத்திடும் பாலை
மேக மென்மொழிக் கூந்தலாள் விளங்கொரு பாலை
பாக முற்றிடு பரமனைப் பணிந்திடப் பாலை
யாகி லுன்மனத் துயரொலா மடைந்திடும் பாலை. (௰௮)

முன்ப னிக்கதிர் சூடிதன் பூசனை முடித்துத்
தென்பு லத்தவர் பூசையாஞ் சிராத்தமு மியற்றி
யின்ப மைந்தனுற் றிடுமென்று னிறைவனே யனையு
மன்பி னீயவனே பிதிர்க்கஎன் றெனன்றன னரசன். (௰௯)

வேறு.

பகரொருசா ரணத்தாற்றுன் மரணமெய்திப்
பசாசபந்த திருந்திடுவோர் நரகினுற்றோ
ரிகலுறுவெம் பசியதனி லுணவிலாம
லிடருறுங்காற் புவியிடைத்தம் வருக்கத் தோர்க்கு
மகவிலையா குகவென்னச் சபித்தல் செய்வார்
மற்றவர்தங் களுக்கிறைவர் பிதிர்க்க ளாகும்
புகழவரைப் பூசித்தா லன்னோர் தம்மைப்
பொருபசிதீர்த் திவர்களுக்கும் புதல்வ ரீவர். (௨௰)

இந்தவகை யதிகார மிவர்கட் கீச
னீந்ததுவே யிவர்பிரேத பிதுர்க்க ளாகும்.
முந்தறஞ்செய் திறந்தசுர ராயி னோர்க்கு
முதல்வர்சில ரவர்தேவ பிதிர்க்க ளாகும்
வந்தமுறை யிவ்விருவ ரிடத்திற் பூசை
வளரிரவி பூசையொடு மதியின் பூசை
சந்திரனம் பிகையிரவி யீச னுகுஞ்
சாற்றிதனாற் பிதிர்பூசை புறம்பன் றாமால். (௨௰௧)

பரன்பூசை கொள்ளுமிட மநேக மாகும்
பகரவற்றுட் பிதிர்க்களுமோர் தான மாகும்
விரவுமவர் மகவருளிச் செய்த றானும்
விதுபுனைவோ னருளேயா முறையீ தாகு

மருவுமிந்த வகைப்பூசை புறஞ்செய் தற்கு
மருதவனந் தனிவியற்ற லதிக மாகுங்
கருதுபலன் விளைவினுறு மிதற்கோர் காதை
காவலகே ளெனமுனிவ னியம்பு மன்றே. (உஉ)

நத்துலவும் வயன்மருத வனத்தின் மேவு
நம்பனடி தொழப்பருவங் கோறுஞ் செல்வே
னித்தனுமாங் கென்வரவு நோக்கி முன்னர்
நிறையருளி னொடுநிற்குஞ் செல்போதெல்லா
மித்தகையிற் செல்காலத் தொருநாண் மார்க்கத்
திலங்குபகற் போதிலிரு விசும்பு தன்னி
லத்தவென வய்யவென வையோ வென்ன
வபயமெனக் கதறுமொலி யெழுந்த தம்ம. (உங)

அவைசெவியிற் புகலுமென்றே வுலக மெல்லா
மல்லலுறு கின்றவென விரக்க மெய்திச்
சிவசிவவென் றனனின்றோர் கணத்தி லென்முன்
சிவந்தநிறச் சூறையுயிர்க் குழிகட் பேழ்வாய்
நவிலுநெடுங் கழுத்தினரா யலகை யென்ன
நண்ணினர்க ளநேகருட விரத்தம் பாயக்
கவலையுறு நெஞ்சினொடு பாசந் தன்னாற்
கட்டுண்டு வெட்டுண்டு கண்ணீர் சோர. (உச)

ஓதுமவ ரெனைத்துதித்தா ரநேக மாக
வுற்றவரை நோக்கியானீவிர் யாவர்
யாதுபவ மிழைத்தீர்க ளென்றே னன்னார்
யாங்கள்பிற னில்விழைந்த லெளியோர்க் கின்னல்
வேதநிந்தை தெய்வநிந்தை மிக்கோர் நிந்தை
விளம்பிடுமே லவர்பசிக்க வுண்டல் பஞ்ச
பாதகங்க ளழிவழக்கு முதல வாயப்
பாவங்க ளெண்ணிறந்த வியற்றி னோர்கள் (உரு)

எங்களைவந் திறப்பிடித்திவ் வுருவ நல்கி
யெரிக்கண்ண ரிதழ்கடிக்கு மெயிற்றி னோர்கள்
பொங்குகடுஞ் சினத்தரிடிக் குரலர் பானுட்
பொருந்துமிருள் வடிவினர்க ளியம னேவு
கிங்கரர்க ளெண்ணிறந்தோர் பாசத் தார்த்துக்
கிளைத்திடுமூ விலைச்சூலம் வேல்வா ளாதி
யங்கைநெடும் படைகளினாற் குத்தி வெட்டி
யடித்தலற வலறவிழுத் தேகி னோர்கள். (உசா)

எகிமன் முன்விடுத்தா னவன்மற் றங்ஙு
னெங்கள்சிரந் தனிற்கால தண்ட மேற்றிப்
பாகுறநின் றியாங்களுரைத் தனவு நீடு
பரிவுறுதன் கணக்கரிசைத் தனவுங் கேட்டு
வேகமுறு நரகினிடை யிவர்க டம்மை
விடுத்துமுறைப் படிதண்ட மியற்று கென்று
னாகவெழுந் தனர்பின்னு மநேக ரங்கே
யாலமென வளைந்தனர்கள் கொண்டு சென்றார். (௨௭)

வேறு.

மன்னு துச்சக நரகிடை மருவுற விடுத்திட்
டன்ன திற்பிறன் மனைவியை யணைத்தவெம் பவத்தாற்
பன்னு செந்தழற் காய்ந்தசெப் பெழிலுறு பாவை
தன்னை மெய்யுறத் தழீஇக்கொடு தளர்ந்திடச் செய்தார். (௨௮)

விரும்ப லுற்றய லாடனைப் பார்த்ததான் மேவு
பெரும்ப வத்தினாற் புகலந்தத் தமத்திடைப் பிறங்கு
மிரும்பி னாக்கிய துண்டவெங் காக்கைக ளிகலுற்
றொருங்கு கண்களைக் கொத்தியீர்த் தலைத்திட விடுத்தார். (௨௯)

விண்டி டிந்துவு மிரவியு மேவுநா ளிறர்வீட்
டுண்ட பாதகத் தோங்குதுற் கடத்திடை யுற்று
மண்டு காக்கைக ளழலிடை வைத்தகூ ரிருப்புத்
துண்டமிட்டுநா வினைத்துணித் திடவெதிர் தொடுத்தார். (௩௦)

தந்தை தாயர்கண் மூத்தவர் சாற்றிடு மொழியை
மூந்து கேளுறு மதத்தினான் மூண்டவல் வினையின்
வெந்த ழற்கொடுஞ் செக்கிலிட் டரைத்திட மெலிந்து
சிந்தை நொந்தறி வழிந்திடச் செய்தனர் பலநாள். (௩௧)

தனையர் தந்தைதாய் முதிர்ந்துளோர் சார்ந்திடு கிளைஞ
ரினையர் வெம்பசி யறிந்திருந் தினிதுறப் புசித்த
வினையி னாற்புகல் செம்பினை யுருக்கிவாய் விடுத்துப்
புனைகொள் பாசத்தி னடித்தனர் பொருந்துறப் பலநாள். (௩௨)

பெரியர் தங்களை நிந்தனை பேசிய வாய்ப்பற்
சரிய நீள்கவு ளடியுமென் றடித்தனர் சரித்தார்
தெரியு றும்பிறர் பொருள்களைக் கவர்ந்திடு திண்கை
யரியு மென்றரிந் திட்டன ரபயமிட் டலற. (௩௩)

உன்னு மீசர்தம் மடியவ ரொளியவர்க் குதவா
இன்னல் செய்திடு தனுக்களா மிவைகளைப் பிடுங்கித்
தின்னு மென்றுநாய் நரிபுலி கழுகொடு தீய
பன்ன கங்களை விடுத்தனர் பதைபதைத் திரங்க. (௩௪)

கால சூத்திரங் கண்டகோ லாகலங் கராளை
மால்செய் கூடசான் மலியொடு வளர்கும்பி பாகங்
கோலிடுந் தழற் பிராணரோ தம்படர் கோர
மோலி டின்னவை யாதிய நரகெலா முழன்றோம். (௬௫)

இலகு மொவ்வொரு நாள்களி னெம்மொ டியற்றும்
வலிய தண்டனை தன்னொடு மனமுறு வேகத்
துலக மியாவையுங் கணத்திடை யுலாவியங் குறுவார்
சுலவி யேகுதற் கின்றுமத் திறமிவண் சூழ்ந்தார். (௬௬)

வேறு.

இன்னமுமென் செய்வர்களோ வறிந்தி லேமே
லிவ்வுழிநீர் சிவசிவவென் றுரைத்த சத்த
மன்னவர்கா தினிற்புகலு மும்மை நோக்கி
யகன்றனர்க ளெமைவிடுத்து நாங்க ளிங்குத்
துன்னினமுற் றுமதருளா லினிமற் றன்னோர்
தொடர்ந்தெம்மை வருத்தாமற் போற்று கென்னப்
பன்னினனி யானவர்களை யஞ்சேன்மி னென்று
பரவு மவருடனு மிடைமருதி னெய்தி. (௬௭)

முக்கணுறு பரஞ்சுடரை வணங்கச் செய்து
முதியபுகழ்ப் பொன்னியிடை மூழ்கு வித்துத்
தொக்கவர் கோத்திர முரைத்துப் பிதிர்களுக்குத்
தூயதில தர்ப்பணமுஞ் செய்வித் தேன்மே
லக்கணத்தி னலகை யுருவாகி னோர்க
ளமரர்களா யெழின்மருவி விமான மேறி
மிக்கசுர துந்துபிகண் முழங்க வானோர்
வியன்மலர் மாரிகள் சொரியத் துறக்கம்புக்கார். (௬௮)

அனையதல மான்மியமும் பிதிர்பூசை தன்று
லாகியது முணர்ந்தனையே யனேக ரின்னு
மினையவகை யத்தலத்திற் கதியுற் றோர்க
ளிலங்கிலைவேற் சுகீர்த்தி மன்னநீயு மெய்திக்
கனைகடனஞ் சருந்திறையோன் பதம் பணிந்து
கட்டுரைத்த படியியற்றி லுலகம்போற்றுந்
தனையனு தித்திடு மதன்பினிறையோன் கோயிற்
றயங்குதிருப் பணியாதி செய்தி யென்றான். (௬௯)

வேறு.

மன்னவன் குறுமுனிவனை வணங்கினன் விடைகொண்
டன்னம் வாழ்மலர்ப் பொழில்சூலா மணியிடை மருது
தன்னை யெய்தினன் பொன்னியிற் படிந்தனன் சடைமேற்
பன்னிளம் பிறைசூடி தன்பதயுகம் பணிந்தான். (௭0)

மதித்திடும் புகழாதிநூல் வகுத்திடு முறையே
பிதிர்க்கள் பூசையும் புரிந்தனன் பிறங்குவே ளென்ன
வுதித்தனன் றனிப்புதல்வன் றன்னுளத்திடை மகிழ்ச்சி
கதித்தனன் சொரிந்தான் முகிலென வொளிர் கனகம். (௪௧)

காற்றுமென் சருகறல் பொசித்தெண்ணறுங் காலஞ்
சாற்றுமைங் கனலிடைக் கடந்தனிற் றலைகீழா
னோற்றிடுந் தவப்பேறொரு நொடியினிற் பெரியோர்
மாற்றமொன்றினி லெளிதினிற் கிடைத்திடு மன்றே. (௪௨)

என்ப துண்மையே யென மகிழ்ந்திறைவ னாலயத்துட்
பொன் பிறங்கிடு திருப்பணி யலகில பொலிவித்
தன்பி னோங்கிடு பூசனை யணிவிழா நடத்தி
மன்பெரும் பதிநிதிக்குவை வழங்கினன் மிகவும். (௪௩)

ஓதுவேதியர் தமக்கு நன்னிலம் பலவுதவி
மீதிலங்கு பல்கால நீள் விருப்பொடு வாழ்ந்து
காதன் மைந்தனிப் பூதலங்காத்திடப் பின்னர்ச்
சோதிதன் மலர்ச்சரோருகத் துணைப்பத மடைந்தான். (௪௪)

எண்ணரும் புகழ்ச்சுகீர்த்தி மனிடை மருதெய்தி
யண்ணலைப்பணிந் தெண்ணியதடைந்தவா றிசைத்தேம்
புண்ணியத்தனிக் காசிபனருந் தவம் புரிந்து
கண்ணனெய்திடப் பணிந்திடு காதைமே லிசைப்பாம். (௪௫!

சுகீர்த்திமன்சருக்கம் முற்றும்.

ஆ திருவிருத்தம்-௫௨௩.

உ

காசிபச் சருக்கம்.

எழிலுறு பிரமர் பதின்மரி லொருவனெனப் புகழ்காசிப முனிவ
னழலுமிழ் திகிரிப் பொருபடை முகுந்தனுயர்தஞ் சேரியிற் சிறிய
குழவியின் வடிவத் துடன் விளையாடுங்கோதில்சீர்க் கோலமுன் னோக்கித்
தொழுதிடவேண்டுமெனவொருகருத்துதொடர்ந்திடப்பற்பகல்கழித்து.()

கனத்திடு தவஞ்செய் தன்றியவ்வுருவங் காண்பரிதாகு மத்தவமு
மினத்தடம்பொழில்சூழிடைமருதிடத்தினியற்றிடினெல்லையிற்றென்று
மெனக்குறித்தனைய தலத்தினுற்றொருசிற்றிடைப் பெருநலமுலையென்னு
மணத்துடன்மருதநிழலுறையிறையோனடி மலர்ப்போற்றினன் பணிந்து.

பெருமகிழ் வெய்தி யரனருட்செல்வம் பெற்றகன் றொருசிறை குறித்துக்
கருதியதியற்றத் திரைமணி கொழிக்குங் காவிரித்தண் புனலாடி
யுரிமையினியதி முடிப்பனமுயத்தாங் குறைந்துண வொடுதுயிலகற்றி
யிரவுநன்பகலுங்கண்ணனைமனத்தி லிருத்திநோற்றிட்டனன்சின்னாள். ()

வண்ணநூபுரம் பட்டிகை யொளிர்தரள மாலிகை மகர குண்டலமேற்
றண்மணிச்சுடிகை சுடர்த்தொடி முதலாய்த் தரித்தொரு குழவியினுருவா
யொண்மதி வதன மிளநில வெறிப்ப வுரலிடை யசைத்தவ னாகக்
கண்ணனம் முனிவன் கருதியபடியே கண்ணுறத் தோன்றினன்மன்னோ.

கண்டனன் முனிவன் பணிந்தன னெழுந்தான் கருத்தினி லடங்கிடாமகிழ்ச்சி, கொண்டனனெளியேன் றனையொரு பொருளாக் கொண்டெழுந் தருளினை யென்னப், பண்டருசுருதி கொடுபலத்துதித்தான் பங்கயக்கண்ணனுன் றவத்தால், விண்டிடுது தியானக மிகமகிழ்ந்தேம் வேண்டியவரங்கள் கேளென்றான். (௫)

நந்தநந் தனதா மோதர முகுந்த நவிலுமிப் பதியுணீ யுறைந்து
வந்துனைக்கண்டு பணிந்துளோர் துதித்தோர் மனத்திடைக் குறித்தவ ரெவர்க்குஞ், சிந்தையிலவர்க ணினைத்திடு வரங்கள் சிறந்திடமகிழ்ந்திடவுடனே, தந்திட வேண்டுமென்றனன் முனிவன் சதுமுகன் றுணையீ துரைப்பான். (௬)

மெய்த்தவமுனிவ நாமுமீண்டுறைது மேலுளவரங்களு மளித்தே
மித்தலம் போல்வதிசைத்திடு முலகத்தில்லையீ துண்மையாமறிவோம்
நித்தனுண் மகிழ்வுற்றிருக்கு மீண்டவனை நினைக்குமுன்னினைத் தனவுறுமீ
துய்த்துணர்வோர்க்குப் புகலுதிநீயு முற்றருச்சனை புரிகென்றான். (௭)

முனிவர னிவ்வா றருளிவீற்றிருக்கு முகுந்தனைப் பணிந்தருச்சனைசெய்
தனையவனுரைத்த தன்பிறோ ரெவர்க்கு மறைந்தெழின் மருதநாயகனைக்
கனிவுறு மன்பினுலகெலா மிறைஞ்சிக் கதியுறத்தானு மர்ச்சனைசெய்
தினிதுறுவரம் பெற்றிருந்தனன் பன்னுளிசைக்குமத்தலத்தின்மாதவத்தீர்.

நீவிருமனைய விடைமருதடைந்து நிகழ்த்திடு மகப்பயிரியற்றின்
மேவுறு பலன்மற் றெல்லையின் மிகவும் விளையுமின் பெய்தலாமென்னச்
சேவலங்கொடியோன் முனிவர்களெவருந்தெளிவுறவுரைத்தனன்முனிவர்
யாவருமகிழ்ந் தித்தலத்தினுக்கிணை வேறெங்கு மின்றெனப்பணிந் திசைத்தார். (௯)

மையறு குணத்துச் செழுந்தவ முனிவீர் மற்றினிச் சூருரம் பிளந்த
செய்யவேற்றடக்கைச் சரவணபவனுந் திகழ்வசிட்டாதி மாதவருஞ்
சையமால் வரையினின் றிடைமருதிற் சார்ந்து செஞ்சடையிலிந்துடனே
பையராப்புனைந்த மருதநாயகனைப் பணிந்தருச் சித்தவாறிசைப்பாம். (௧0)

காசிபசச்சருக்கம் முற்றும்.

ஆக திருவிருத்தம்-௫௱௱.

உ

குமாரபூசைச் சருக்கம்.

பாக நாடவர் போற்றிடை மருதடைந்து வளந்தரு மகம்புரி வதனுக் கேகமாதவத்தோர்தன்விடைமேற்கொண்டெழுதலு மிலங்குவேற் குகனுந் தோகை மேற்கொண் டாங்கெழுந்து விண்ணெறியாய்த் தொடரு மாதவர்களுஞ்சூழ, நாக பென்பணி வோனுறை பதியிடையி னண்ணினர் பணிந்தகன்றேகி. (க)

தனதெனப் புலவர் துதிபரங் குன்று தாவிலாவினன் குடிசெந்தூ
ரினமுகில் வதியும் பழமுதிர் சோலை யேரகப்பதி முதலான
கனமுறு தலங்க ளியாவையு மணைந்து காட்டமுன் பணிந்தினி தேத்தி
மனமகிழ் முனிவோர்க் கிடைமரு தெதிரோ வயங்கிடல் காண்மினென் றி
சைத்தான். (உ)

கண்டனர் சேணினேமிமால் வரை போற்சுதித் தொழுபுரிசையி னழகுங்
கொண்டலூர் பொழிலு மாடநீ ணிலையுங் கோபுரத தெழிலு மாலயமு
மண்டு பேருவகை வாரியிற் படிந்தார் வணங்கினர் பரவச மடைந்தார்
விண்டனர்துதிகள்கண்டனரவைவிடாதுகொண்டிடைமருதணைந்தான்.

சங்குலா மருதஞ் சூழிடை மருதிற் சார்ந்திறை பதாம் புயம்பணிந்து
கங்கையைக் குறித்தான் குறித்திடுமுன்னர்க் கதழ்வினி லெய்திளைவளைத்
திங்கள்சூ டிறையோற்காட்டுதற்பொருட்டுந் தினைப்பவர் பவந்தவிர்பொரு
ட்டு, மிங்குறைந் திடுக வென்றனனவளுமீ சனுக்கீசதிக் கமர்ந்தாள்.

91464

அறைதரு மினிய புனிதநீ ரொடுத்தாங் கபிடேகமு மியற்றி
நறைவிரித் திடுபோ தாதியாலமலனலந்தரு சிவாகம விதியான்
முறையுயர் பூசைபுரிந்துளமகிழ்ந்தான் முனிவர்களிலங்கெழிற் பொன்னித்
துறையினுங் கங்கைப் புனலினு மற்றைத் தூயதீர்த்தத்தினுமாடி. (ரு)

கற்பனை கடந்த கருணைவாரிதியைக் கண்ணுதற்பொருப்பினைப்பொருப்பு
விற்பிடித் திடுநாட் பங்கயச் செங்கை விமலனை மருத நாயகனை
யற்புதத் தொடிக்கைப் பெருநலமுலையை யைங்கரக் கடவுளைப்பணிந்து
சொற்படு மலரா லருச்சனை புரிந்து துதித்தன னளவிலாத் துதிகள். (சு)

வெயில்விரி மணிப்பொற் சிங்கவா தனத்தின் மீது வீற்றிருந் திடுமொங்க
லயிலுறு தடக்கைக் குமரநாயகன் றனடிமலர் பணிந் தருச்சித்தார்
பயிலுமஞ் செழுத்தைச் செபித்தனர் விதியிற் பரிவொடு மற்றதன் பின்
னோர், வயினுமற் றெவரும் வேண்டுவ கொண்டு மகமினி தியற்றினர்
மன்னே. (எ)

பன்னகம் புனைவோ னெல்லையில்விமயப்பாவையி னுடனடல் விடைமேல்
முன்னர் நின்றனன் கண்டிறைஞ்சினர் நீவிர்முன் வரங்கேண்மி னென்றி
சைத்தான், நின்னடித் துணையை மறந்திடா தென்று நியதியாயருச்சனை
செயவு, முன்னிய பெறவு மருள்கெனப் பணிந்தார் முன்னவ னீந்தனன்
கரந்தான். (அ)

இவ்வரமேற்று மகிழ்ந்து மாதவர் களியாவரு முமையொரு புறத்து
நவ்வியங்கரத்தோன் பதசரோருகத்தினொடாறு மருச்சனையியற்றி
யவ்வியற் றலத்தை யகன்றிடா துறைந்தா ரத்தலத் தணைந்திடப் பெற்ற
செவ்வியோர்க்கருத்து மற்றொரு தலத்துச் சென்றிடக்குறிக்குமோ வம்மா.

இருந்திடுங் காலை மருதநாயகன் முன்னீந்தருள் வரத்தினற்றுங்கள்
வருந்துத லின்றிச்சித்தி போரொட்டு மனத்தினிற் குறித்தவை பிறவும்
பொருந்தினர்சமைவுந் தடைந்துளோர் தமக்கும்புகழுறவுதவின ரென்னத்
திருந்துறு தலத்து முனிவரர் தமக்குச் செப்பினன் சூதமா முனிவன். (கo)

மாசறு தவத்தீர் முனிவரர் சூழ வானவர் மிடையிடை மருதுற்
றீசனை மருத நீழலினுறையு மிறைவனை யிலங்குவே லமலன்
பூசனை புரிந்த திறமிது மீதுபுக லுமையருளுருவாங்கித்
தேசுறு புகழ்க்கா ருண்ணிய தீர்த்தச் சிறப்பெடுத்தினி திசைத்திடுவோம்.

குமாரபூசைச்சருக்கம் முற்றும்.

ஆகத் திருவிருத்தம், ருசச.



உ

பிரகடனம்.

சோழநாட்டிற் றிருவலஞ்சுழி குருகிரிமுதலிய திவ்விய ஸ்த
லங்களை விநாயகர் சுப்பிரமணியர் முதலிய பரிவார தேவதாஸ்
தலமாகக்கொண்ட மத்தியார்ச்சுன க்ஷேத்திரத்தில் எழுந்தருளி
யிருக்கும் சர்வலோகைக நாயகராகிய ஸ்ரீ-மகாலிங்கபெருமானை,
அவ்வாறு சத்திரூபமாகிய சுப்பிரமணியபெருமான் கங்கையை
யழைத்து அதனால் அபிடேகித்து அருச்சித்த சரித்திரத்தை,
இம்மருதவன புராணத்தால் உணர்ந்தகாலந்தொடங்கி, அம்மு
றையை உற்சவமாக நடத்தவேண்டி, ஆசையோடு அச்சுப்பிர
மணியபெருமானைப் பிரார்த்தித்து, அப்பெருமானது கருணை
யால், நாம எமது அன்பர் அம்மாபேட்டைக் கந்தசாமிச்
செட்டியார் திருமாந்துறைச்சபாபதிப் பிள்ளை, திருப்பணிப்பே
ட்டைக்கோவிந்தசாமிப்பிள்ளை ஆகியஇவர்களுடன் சாவசித்து
வருட-முதல் உற்சவமாக நடத்திவருகின்றோம். அவ்வாறு
நடத்தி வருதற்குக் காரணம் இப்புராணத்தை முன் உணர்ந்திரு
ந்தமையேயாதலான், குமார பூசையின் மகிமை, மூர்த்திதலதீர்
த்த விசேடம், சிவன நாளால் நற்கதி அடைந்தோர் சரித்திரம் மு
தலிய, இவைகளனைத்தும் யாவர்க்கும் நன்குதெரிந்தாலன்றி அ
மமகாலிங்க பெருமானிடத்துப் பத்திசெய்ய முடியாதாதலான்,
அவற்றை யாவரும வெளிபடவுணர்ந்து பத்திசெய் துய்யும்
பொருட்டு இம்மருதவன புராணத்தை அச்சிட்டு வெளிப்படுத்
தினோம்.

இங்ஙனம்

கி. சாமிராவ்நாடே.